# 4. நகைச் சுவை

சிரித்து மகிழ்வது மக்களுக்கு மட்டுமே வாய்த்த பேறு. 'வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்' என்பது எல்லாரும் அறிந்த பொன்மொழி. மருத்துவர்களும் இதனை உறுதிப் படுத்துகிறார்கள். நகைச் சுவை மனநோய் போக்கும் மாமருந்து. 'சிரிக்கத் தெரியாதவர்களுக்குப் பகல் பொழுதும் இருட்டே ஆகும்' என்கிறார் திருவள்ளுவர்.

நகைச் சுவை என்பது பல்வேறு சூழல்களிலும் வெளிப்படும். அது சிரிக்கவைப்பதுடன், சிந்திக்கத் தூண்டுவதாகவும் இருத்தல் வேண்டும். பிறர் மனம் புண்படத்தக்கதாக இருத்தல் கூடாது. இதனை வள்ளுவர் 'நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி' எனக் கூறுவார். நகைச் சுவையாகப் பேசுவதும், அதனைக் கேட்டுச் சுவைத்துப் போற்றுவதும் ஒரு கலை.

தாம் கூற வந்ததை இரு பொருள்படக் கூறிக் கேட்போரை மகிழ வைப்பது தமிழ்ப் புலவர்கட்குக் கைவந்த கலை. இதற்கு எடுத்துக் காட்டுகளாகச் சில நிகழ்ச்சிகளைக் காண்போம்.

புலவர் ஒருவர், கொடை வள்ளலாகத் திகழ்ந்த செல்வந்தரைக் காணச் சென்றார். புலவரது கவித் திறனைக் கண்டு செல்வந்தர் பெரிதும் மகிழ்ந்தார். தாம் கொடுக்க விரும்பும் பரிசிலான பணத்தைத் தங்கத் தட்டு ஒன்றில் வைத்து வழங்கினார். புலவரின் உள்ளத்தைத் தங்கத் தட்டு கவர்ந்தது. எனவே, தங்கத் தட்டையும் சேர்த்துப் பெற விரும்பினார். செல்வந்தரைப் பார்த்து, "பணத் தட்டு யாருக்கு?" எனக் கேட்டார். அக் கேள்வியில் 'பணத் தட்டு' என்பது 'பணத்தையுடைய தட்டு' எனவும், 'பணத் தட்டுப் பாடு' எனவும் இரு பொருள்பட நின்றது. செல்வந்தர் சற்றுத் திகைத்தார். 'பணம் உமக்கு, பணத் தட்டு எனக்கு என்று சொன்னால், பணம் தட்டுப்பாடு தமக்கு ஏற்பட்டுள்ளதாக அல்லவா பொருள் ஏற்படும்' என்று எண்ணினார். எனவே, 'பணத் தட்டுப்பாடு புலவருக்குத்தான்' எனத் தோன்றும்படி செல்வந்தர்,

''பணத்தட்டு புலவருக்குத்தான்'' என்று கூறினார். பணத்துடன் தங்கத் தட்டையும் புலவருக்கு வழங்கியதாக அறிவித்தார். புலவர் மிகவும் மகிழ்ந்தார். புலவரின் பேச்சு சாதுரியத்திற்குக் கிடைத்த பரிசு அது !

பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார், முதுபெரும் தமிழ்ப் புலவர். கட்டுரைகள் எழுதுவதிலும், நகைச் சுவை ததும்பப் பேசுவதிலும் மிக மிக வல்லவர். அவர் நோய்வாய்ப் பட்டுப் படுத்த படுக்கையாக இருந்தபோதுகூட, அவரது பேச்சில் நகைச் சுவை வெளிப்பட்டது. அவர் நோயுற்றிருந்தபோது அவர் மகள், அருகிலிருந்து நன்கு கவனித்து வந்தார். அப்போது பால் மட்டுமே அவருக்கு உணவு. ஆடையின்றி அமைவதற்காகப் பாலைத் துணியில் வடிகட்டியே மகள் கொடுத்து வந்தார். ஒரு நாள் அப்படி வடிகட்டிய பாலைக் குடித்தபோது, அவர் முகம் சுளித்தார். பால் கசந்தால் நோயின் தீவிரம் மிகுதிப்பட்டு விட்டது என்ற ஒரு கருத்து உண்டு. அதனால் தந்தையார் முகம் சுளித்ததைக் கண்டதும் மகளார், ''பால் கசக்கிறதா அப்பா?'' என்று கேட்டார். பண்டிதமணியோ, நிதானமாக, '' பாலும் கசக்க வில்லை! துணியும் கசக்க வில்லை'' என்றார். அதாவது, 'பாலை வடிகட்டிய துணி கசக்கித் தூய்மைப்படுத்தப்பட வில்லை' என்பதை அவர் நகைச் சுவை படக் கூறியதைக் கேட்டு அனைவரும் மகிழ்ந்தனர்.

ஆன்மிகச் செல்வர் கிருபானந்த வாரியார் சொற்பொழிவு ஆற்றும்போது சிறுவர்களைக் கேள்வி கேட்பார். பதில் சொல்லும் சிறுவருக்குப் பக்தி நூல் ஒன்றைப் பரிசாக அளிப்பார். அவர் ஒரு முறை 'முருகனின் பெருமை' பற்றிச் சொற்பொழிவு ஆற்றினார். அப்போது சிறுவன் ஒருவனைப் பார்த்து, ''தம்பி... முருகனின் தந்தை யார்?'' எனக் கேட்டார். அச் சிறுவன் முந்திய நாள் இரவு 'திருவிளையாடல்' படம் பார்த்திருந்தான். அந்த நினைவோடு ''சிவாஜி'' எனக் கூறினான். அப் படத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன், சிவபெருமானாக நடித்திருந்தார். சிறுவன் கூறிய பதிலைக் கேட்டதும் அனைவரும் ஏளனமாகச் சிரித்தனர்.

ஆனால் வாரியார், அவனை அருகில் வருமாறு அன்புடன் அழைத்தார். 'வாரியார் என்ன சொல்லப் போகிறாரோ!' என அனைவரும் ஆவலோடு காத்திருந்தனர். அவர் '' இச் சிறுவன், இக் காலத்திய பண்பாட்டோடு பதில் கூறியிருக்கிறான். நாம் 'காந்தி'யைக்

'காந்திஜி' என்றும் 'நேரு'வை 'நேருஜி' என்றும் சொல்வதுபோல், சிறுவன் 'சிவனை', 'சிவாஜி' என்று கூறியுள்ளான்'' என்றார். அனைவரும் அவர் பேச்சில் இருந்த நயத்துடன் கூடிய நகைச் சுவையை உணர்ந்து சிரித்தனர்.

இவை போன்ற நல்ல நகைச் சுவைத் துணுக்குகளைப் படித்து மகிழ வேண்டும். பிறருக்கு எடுத்துக் கூறி அவர்களையும் மகிழ்விக்க வேண்டும். இவ்வாறு செய்யின் உடல் நலத்துடனும் உள்ள நலத்துடனும் வாழ்க்கை நெருக்கடியின் இறுக்கம் குறைந்து நல்வாழ்வு வாழலாம்.

## I. சொற்களஞ்சியம்

### அ. அருஞ்சொற்பொருள்:

பேறு - கிடைப்பதற்கு அரிய ஒன்று, உயர் வாய்ப்பு; மா மருந்து - சிறந்த மருந்து; திறன் - திறமை, ஆற்றல்; சாதுரியம் - அறிவுத் திறமை, திறமையான பேச்சு; ஆடை - ஏடு, காய்ச்சிய பாலின் மேல் படிவு; ஆன்மிகம் - உடல் மனங்களில் வேறுபட்டது, இறை உணர்வுடன் தொடர்புடையது.

### ஆ. கீழ் உள்ள தொடர்களை வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

1. கைவந்த கலை 2. சாதுரியமாக 3. நிதானமாக

## II. பொருளுணர்திறன் பயிற்சி

### அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'பண்டிதமணி' எனக் குறிப்பிடப்பட்டவர் ................
   அ. தங்கத் தட்டு பெற்ற புலவர் ஆ. கதிரேசஞ்செட்டியார்
   இ. கிருபானந்த வாரியார்

2. புலவருக்குத் தங்கத் தட்டு கிடைத்ததற்குக் காரணம் அவரின் ............
   அ. வறுமை நிலை ஆ. நகைச் சுவையான பேச்சு
   இ. சாதுரியமான பேச்சு

3. 'சிரிக்கத் தெரியாதவர்களுக்குப் பகல் பொழுதும் இருட்டே ஆகும்' எனக் கூறியவர் ................
   அ. பண்டிதமணி ஆ. திருவள்ளுவர் இ. ஆன்மிகச் செல்வர்

ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

4. சிரிப்பின் சிறப்புகள் குறித்து எழுதுக.
5. நகைச் சுவை என்பது எவ்வாறு இருக்க வேண்டும்?
6. 'பணத் தட்டு' என்ற சொல் உணர்த்தும் இரு பொருள்களை எழுதுக.
7. பண்டிதமணியின் பெருமைகள் யாவை?
8. சிறுவனிடம் வாரியார் கேட்ட கேள்வி யாது? அதற்குச் சிறுவன் கூறிய பதில் என்ன?

இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

9. 'பணத் தட்டு யாருக்கு?' எனப் புலவர் கேட்ட காரணம் யாது?
10. வள்ளல் சற்றுத் திகைத்த காரணம் என்ன?
11. புலவரின் சாதுரியப் பேச்சுக்கு என்ன பரிசு, எப்படிக் கிடைத்தது?
12. மரணப் படுக்கையிலும் பண்டிதமணி கையாண்ட நகைச் சுவை பற்றிக் கூறுக.
13. சிறுவன் சொன்ன பதிலை நகைச் சுவைபட வாரியார் ஏற்றுக்கொண்ட முறையை எழுதுக.

## III. மொழித்திறன் வளர் பயிற்சி

அ கீழ் உள்ள சொற்களின் முதல் எழுத்தைக் குறிலாக்கி எழுதுக. பொருள் வேறுபாட்டை உணர்ந்து வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

| | |
|---|---|
| 1. பேறு ............ | 2. ஆடை ............... |
| 3. ஏடு ............ | 4. நாடு ............... |
| 5. மாதம் ............ | 6. கூடம் ............. |

## IV. திறன்வளர் தொடர் பணி

அ. கைவந்த கலை - இது ஒரு மரபுத் தொடர். 'சிறப்பாகச் செய்யும் ஆற்றல்' எனப் பொருள்படும். இது போன்று கீழ் உள்ள மரபுத் தொடர்களை அவற்றின் பொருள் தெரியும்வண்ணம் வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

1. கை நழுவியது 2. கை கழுவினான்
3. கை கொடுத்தான் 4. கை விட்டான்

ஆ. நீங்கள் கேட்டோ, படித்தோ மகிழ்ந்த நகைச் சுவைத் துணுக்குகள் இரண்டு எழுதுக.

## V. இலக்கணம்

### வேற்றுமை

குடியரசுத் தலைவர் பாராட்டினார்.
குடியரசுத் தலைவரைப் பாராட்டினர்.

இத் தொடர்களைக் கவனியுங்கள். முதல் தொடர் 'பாராட்டியவர் - குடியரசுத் தலைவர்' எனப் பொருள் தருகிறது. இரண்டாம் தொடர் 'குடியரசுத் தலைவரை - மற்றவர் பாராட்டினர்' எனப் பொருள் தருகிறது. இரண்டாவது தொடரில் 'குடியரசுத் தலைவர்' என்ற பெயர்ச் சொல்லின் பொருள் வேறுபடுகிறது. இந்த வேறுபாட்டைச் செய்தது, அந்தப் பெயர்ச் சொல்லின் இறுதியில் உள்ள 'ஐ' என்னும் எழுத்து.

இவ்வாறு பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை. பெயர்ச் சொல்லின் இறுதியில் அமைந்து, பொருள் வேறுபாட்டைச் செய்யும் இடைச் சொற்களை 'வேற்றுமை உருபு'கள் என்பர்.

**வேற்றுமை வகை:**

பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துவதன் அடிப்படையில் வேற்றுமையை எட்டு வகைப்படுத்துவர். அவை: முதல் வேற்றுமை (எழுவாய் வேற்றுமை), இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை (விளிவேற்றுமை) என்பன.

**முதல் வேற்றுமை:**

அழகன் குழல் ஊதினான்.
அழகன் தலைவன்.
அழகன் யார்?

மேலே உள்ள தொடர்களில் 'அழகன்' என்பது இயல்பான பெயராய் நிற்கிறது. பயனிலை கொண்டு முடிகிறது.

இவ்வாறு ஒரு பெயர்ச் சொல் இயல்பாக வந்து எழுவாயாக நின்று, பயனிலையைக் கொண்டு முடிவது 'முதல் வேற்றுமை' எனப்படும். இதனை 'எழுவாய் வேற்றுமை' எனவும் கூறுவர்.

**இரண்டாம் வேற்றுமை:**

மாடு பயிரை மேய்ந்தது.

இத் தொடரிலுள்ள 'பயிர்' என்னும் பெயர்ச் சொல் 'ஐ' என்னும் உருபை ஏற்றுச் செயப்படுபொருளாக வேறுபடுகின்றது. இவ்வாறு பெயர்ச் சொல்லினது

பொருளைச் செயப்படுபொருளாக வேறுபடுத்துவது இரண்டாம் வேற்றுமை ஆகும். 'ஐ' என்பது இரண்டாம் வேற்றுமை உருபாகும்.

**மூன்றாம் வேற்றுமை:**

கிளை கத்தியால் வெட்டப்பட்டது.
மரம் வாளான் அறுபட்டது.
ஆசிரியரொடு மாணவன் வந்தான்.
தந்தையோடு தாயும் வந்தார்.
தந்தையுடன் மகளும் வந்தாள்.

இத்தொடர்களில் 'ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன்' ஆகிய உருபுகள் வந்துள்ளன. இவை மூன்றாம் வேற்றுமை உருபுகள். 'உடன்' என்பது பேச்சு வழக்கில் பயன்படும் சொல் உருபு ஆகும்.

**நான்காம் வேற்றுமை**

ஆசிரியர் மாணவனுக்குப் பரிசளித்தார்.

'மாணவன்' என்ற பெயர்ச் சொல் 'கு' என்னும் உருபை ஏற்றுப் பொருள் வேறுபடுகிறது. எனவே, நான்காம் வேற்றுமை உருபு 'கு' ஆகும்.

**பயிற்சி**

**கீழ் உள்ள இரு சொற்களையும் இடையே பொருத்தமான வேற்றுமை உருபு சேர்த்து எழுதுக.**

1. வெற்றிலை தின்றான்
2. பேனா எழுதினான்
3. தந்தை வந்தான்
4. ஊர் சென்றான்

## VI .மொழிப்பயிற்சி

**கொச்சைச் சொற்களும் - திருந்திய சொற்களும்**

ஆசிரியர் மாணவனைப் பார்த்து " நீ ஏன் நேற்று வரவில்லை?"என்று கேட்டார். அதற்கு மாணவன் ''நேத்து எனக்கு வவுத்து வலி ஐயா!'' என்று கூறினான். இங்கு மாணவன் கூறிய சொற்களை நோக்குங்கள். நேத்து, வவுத்து வலி - இவை பேச்சு வழக்குச் சொற்கள், இவை கொச்சைச் சொற்களாகும். அதாவது பிழையான வடிவங்களாகும்.

இதுபோல் பலர், பேச்சு வழக்கில் பல சொற்களைத் தவறாகப் பயன்படுத்தி வருகின்றனர். அவற்றைப் பயன்படுத்தி எழுதுவதால் மொழிநடை குன்றுவதுடன் பொருளும் வேறுபடுகிறது. ஆதலால், உலக வழக்கில் நாம் எழுதியும் பேசியும் வரும் பிழையான சொற்களுக்குச் சரியான தமிழ்ச் சொற்களை அறிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாதது ஆகும்.

| கொச்சைச் சொற்கள் | திருந்திய சொற்கள் |
|---|---|
| 1. அருகாமையில் நில் | அருகில் நில் |
| 2. இடது கை வலிக்குது | இடக்கை வலிக்கிறது |
| 3. கொடக்கூலி குடு | குடிக்கூலி கொடு |
| 4. நேத்து வவுத்து வலி | நேற்று வயிற்று வலி |
| 5. அதிகமாச் சிலவு செய்யதே | அதிகமாகச் செலவு செய்யாதே |

பயிற்சி

நீங்கள் வாழும் பகுதியில் பயன்படுத்தப்படும் பேச்சு வழக்குச் சொற்கள் ஐந்து எழுதி அவற்றின் திருந்திய வடிவமும் எழுதுக.

## VII. அகராதி காணும் பயிற்சி

க, கா, கி, கீ, கு, கூ, கெ, கே, கை, கொ, கோ, கௌ என்பன 'க' வருக்க எழுத்துகள் எனப்படும். கீழ் உள்ள சொற்களைக் 'க' வருக்க எழுத்துகள் ஒன்றின் கீழ் ஒன்றாக அமையும்படி எழுதுக.

கௌதாரி, கேள்வி, கிளி, கப்பல், கூட்டம், காற்றாடி,
கைப்பிடி, கோடு, குடம், கீரி, கெடுதி, கொக்கு.

# 5. சாலை விதிகள்

(உரையாடல்)

(கிராமத்திலிருந்து வந்த முகிலன் தன் அத்தையுடன் சென்னை மாநகரின் அண்ணா சாலை வழியாகப் பேருந்தில் பயணம் செய்கிறான்)

முகிலன்: அத்தை, எவ்வளவு அகலமான வீதிகள்! அப்பப்பா ! எத்தனை வாகனங்கள்? இங்கே சாலையைக் கடப்பதே பெரும்பாடாக இருக்கும்போல் உள்ளதே?

அத்தை : ஆமாம் முகிலா, பார்த்து நட. இங்கே சாலைகளில் வாகனங்களை ஓட்டுவோரும் நடந்து செல்வோரும் சில விதிமுறைகளைக் கடைப் பிடிக்கின்றனர். அதனால் விபத்தைத் தவிர்க்க முடிகிறது. விதிமுறைகளை மீறும்போது விபத்து தவிர்க்க முடியாதது ஆகிவிடுகிறது.

(அவர்கள் செல்லவேண்டிய பேருந்து வந்து நிற்கிறது.)

முகிலன்: அத்தை, பேருந்தில் முன்பக்கம் இடம் இருக்கிறது. முன்னால் போய் ஏறிக் கொள்ளலாம். வாங்க . . . .

அத்தை : முகிலா, அது தவறு! பேருந்தில் பின்பக்க வாயில் வழியாகத்தான் ஏற வேண்டும். பயணச் சீட்டைப் பெற்றுக்கொண்டு, பயணம் முடிந்தபின் இறங்க வேண்டிய இடத்தில் முன் வாயில் வழியாக இறங்க வேண்டும். அதுமட்டும் அன்று! பேருந்து நிறுத்தத்தில் மட்டுமே இறங்க வேண்டும். மெதுவாகச் செல்கிறது என்றோ, சற்று நிற்கிறது என்றோ நாம் விரும்பும் இடத்தில் இறங்க முயல்வது தவறு. பேருந்தில் படியில் நின்றும், தொற்றிக் கொண்டும் பயணம் செய்ய முயல்வதும் தவறு. அவை விபத்துக்கு வழி வகுக்கும்.

முகிலன்: சரி அத்தை, நம் ஊரில் விரும்பிய இடங்களில் எல்லாம் பேருந்தை நிறுத்திப் பயணிகளை ஏற்றவும் இறக்கவும் செய்கின்றனர். நீங்கள் சொன்ன பிறகுதான் நகரப் பேருந்தில் பயணம் செய்யும்போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை அறிந்தேன்.

(பேருந்து நிறுத்தம் ஒன்றில் நிற்கிறது.)

அத்தை : முகிலா, எழுந்திரு! நாம் இறங்க வேண்டும். பார்த்து இறங்கு. ஓடாதே! என் கையைப் பிடித்துக்கொள். இறங்கியவுடன், நிற்கும் பேருந்தின் முன்பக்கமோ, பின்பக்கமோ சென்று சாலையைக் கடக்கக்கூடாது. வாகனம் நிறுத்தப்படாத இடத்திற்குச் சென்று, சாலையின் இரு பக்கங்களையும் உற்று நோக்க வேண்டும். வாகனம் எதுவும் வராதபோது கடக்க வேண்டும். வா, இங்கே சாலையைக் கடப்பதற்கு உரிய இடத்திற்குச் செல்வோம். அதோ தெரிகிறது பார்.., சாலையில் குறுக்காக வெள்ளைக் கோடுகள் போட்ட இடம், அங்குதான் சாலையைக் குறுக்கே கடக்க வேண்டும்.

முகிலன்: இப்படிக் கோடுகள் போடாத இடத்தில், சாலையின் ஒரு புறத்திலிருந்து இன்னொரு புறத்தை அடைய எப்படிக் கடப்பது?

அத்தை : சாலையில் வாகனங்களை ஓட்டுபவர், தமது இடப்புறம் ஓட்டிச் செல்லவேண்டும் என்பது விதி. ஆகவே மற்ற இடங்களில் நாம் சாலையைக் குறுக்காகக் கடக்கும்போது, முதலில் வலப்புறம் திரும்பிப் பார்த்துவிட்டு நடந்து, சாலையின் நடுப் பகுதியை அடைய வேண்டும். பின்னர் இடப்புறம் திரும்பிப் பார்த்தபின் வாகன வரத்தை உணர்ந்து, மேலும் நடந்து சாலையின் மறுபுறத்தை அடைய வேண்டும்.

முகிலன்: அத்தை, சாலையின் சந்திப்புகளில் மின் விளக்குகள் வண்ணம் மாறி மாறி எரிகின்றனவே? அது ஏன்?

அத்தை : வாகனப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த அவற்றை அமைத்துள்ளனர். சிவப்பு விளக்கு எரியும்போது வாகனங்கள் நிறுத்தக் கோட்டுக்குப் பின்னால் நிற்க

வேண்டும். பச்சை விளக்கு எரியும்போது, உரிய திசையில் செல்லவேண்டும். வாகனங்களை நிறுத்தவும், பயணத்தைத் தொடங்க ஆயத்தமாகவும் முன் அறிவிப்பாக மஞ்சள் விளக்கு எரியும். அப் பகுதியில் சாலையைக் குறுக்காகக் கடக்க விரும்பும் மக்களுக்கு உதவும் பொருட்டுத் தனியே சிவப்பு மற்றும் பச்சை விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கும். வாகனமோ, மக்களோ பச்சை விளக்கு எரிந்தால் சாலையைக் கடக்க வேண்டும்; சிவப்பு விளக்கு எரிந்தால் நின்றுவிடவேண்டும்.

முகிலன்: சில இடங்களில் சுரங்கப் பாதைகள் உள்ளனவே, அவை ஏன் அத்தை?

அத்தை : போக்கு வரத்து மிகுதியாக உள்ள சாலைகளில் அடிக்கடி வாகனங்களை நிறுத்த முடியாது. எனவே, போக்குவரத்து தடை இல்லாமல் நடைபெறவும் மக்கள் அச்சமின்றிச் சாலையைக் கடக்கவும் சுரங்க நடைபாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.சில இடங்களில் நடை மேம் பாலங்களும் அமைத்துள்ளார்கள். சாலைப் பயணிகள் சற்றுச் சிரமம் பாராமல் நடந்து சென்று சுரங்க நடை பாதையில் இறங்கியோ, நடை மேம்பாலத்தில் ஏறியோ சாலையைக் கடப்பது பாதுகாப்பானது. இந் நடை பாதைகள் இல்லாத இடங்களில் சாலையைக் கடப்பவர்களுக்குப் போக்குவரத்துக் காவலர் உதவுவார்.

முகிலன்: சாலையில் நடப்போர் கடைப்பிடிக்க ஏதாவது விதிமுறை இருக்கிறதா?

அத்தை : நல்ல கேள்வி! நடந்து செல்வோர் எப்போதும் சாலையை ஒட்டி அமைந்த நடைபாதையையே பயன்படுத்த வேண்டும். அதுதான் பாதுகாப்பு. சில இடங்களில் கடைகள் அடைத்துக் கொண்டிருப்பதால் நடைபாதையில் நடப்பது மிகவும் சிரமம். இதை உரிய அதிகாரிகளுக்குத் தெரிவித்தால் சரி செய்வார்கள். நடந்து செல்வோர் தங்கள் வலப் பக்க நடைபாதையைப் பயன்படுத்துவதே பாதுகாப்பானது. எதிரில் வரும் வாகனங்களைக் கவனித்து நடக்க முடியும். இடப் புற நடைபாதையில் நடந்தால் பின்னால் வரும் வாகனங்களைக் கவனிக்க முடியாது. நடைபாதை இல்லாத சாலைகளில் நடந்து

செல்வோருக்கும் இந்த முறை மிகமிகப் பாதுகாப்பாக அமையும்.

முகிலன்: அத்தை, வாகன விபத்துகளைத் தவிர்க்க என்னென்ன முறைகளைக் கையாளுகிறார்கள்?

அத்தை : சில நடைமுறை விதிகளைக் கடைப்பிடித்தாலே பெருமளவிற்கு விபத்துகளைத் தவிர்க்கலாம். சில சாலைகளில் வேகக் கட்டுப்பாடு வற்புறுத்தப்பட்டிருக்கும். அகலமான சாலைகள், வேகமான போக்கு வரத்துக்காகச் சில பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். அப் பிரிவுகளில் உரிய வாகனங்கள் மட்டுமே செல்லவேண்டும். மெதுவாகச் செல்லும் வாகனங்களுக்குச் சாலையின் இடப் புறத்தை ஒதுக்கி இருப்பார்கள். சில இடங்களை ஒருவழிப் பாதையாக அறிவித்து இருப்பார்கள். சில சாலைகளில் சரக்குப் பேருந்து குறித்த நேரங்களில் செல்லத் தடை விதிக்கப்பட்டிருக்கும். வாகனங்கள் ஒன்றை மற்றொன்று முந்தும்போது, சாலையின் மத்தியில் போடப்பட்டுள்ள மஞ்சள் கோட்டைக் கடந்துசெல்ல முயலல் கூடாது. இக் கோட்டை உயிர் காக்கும் கோடாகக் கொள்ள வேண்டும். இந்த விதிமுறைகளைப் பயணம் செய்வோர் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும். அதனால் வாகன விபத்துகளைத் தவிர்க்கலாம்.

முகிலன்: அத்தை, இது என்ன? 'வாகனம் நிறுத்தக்கூடாது' என எழுதப்பட்டுள்ளது!

அத்தை : இது எச்சரிக்கைப் பலகை. போக்கு வரத்து அதிகமாக உள்ள இடத்தில் வாகனங்கள் விரைவாகச் செல்ல வேண்டும் அல்லவா? வாகனங்களைச் சாலை ஓரத்தில் நிறுத்த அனுமதித்தால், போக்கு வரத்து தடை ஏற்படும். அதனால் சில இடங்களில் இது போன்ற எச்சரிக்கைப் பலகைகளை வைத்திருப்பார்கள். சில இடங்களில் மட்டும் வாகனங்களை நிறுத்த அனுமதிப்பார்கள். அதற்கு ஒரு மணி நேரத்திற்கு இவ்வளவு எனக் கட்டணம் செலுத்த வேண்டும். இவை போன்ற கட்டுப்பாடுகளால்தான் போக்குவரத்து செம்மையாக நடைபெறுகிறது.

முகிலன்: அத்தை, இன்று உங்களோடு வந்ததால் சாலை விதிமுறைகளைத் தெளிவாகத் தெரிந்து கொண்டேன்.

அத்தை : முகிலா, இன்னும் சிலவற்றைத் தெரிந்துகொள். சிறுவர்கள் சாலைகளையும் தெருக்களையும் வீதிகளையும் விளையாட்டுத் திடல்களாகப் பயன்படுத்தக் கூடாது. காற்றாடி விடுதல் போன்றவற்றை மேற்கொள்ளக் கூடாது. விளையாட்டுகளின் மீதுள்ள ஆர்வத்திலும் கவனத்திலும் விபத்துகள் ஏற்படக் காரணமாகிவிடக் கூடாது. நம் வேலையும் முடிந்துவிட்டது. வா வீட்டுக்குப் புறப்படலாம்.

## I. சொற்களஞ்சியம்

### அ. அருஞ்சொற்பொருள்:

வாகனம் - வண்டிகள்; சரக்குப் பேருந்து - லாரி; கடைப் பிடிக்க - பின்பற்ற; எண்ணுவது - நினைப்பது; அச்சம் - பயம்.

### ஆ. கீழ் உள்ள தொடர்களை வாக்கியங்களில் அமைத்தெழுதுக

1. வழிவகுக்கும் 2. உற்று நோக்கி
3. உரிய திசையில் 4. பாதுகாப்பாக
5. பெருமளவுக்கு 6. கையாளுகிறார்

## II. பொருளுணர்திறன் பயிற்சி

### அ. கோடிட்ட இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக.

1. பேருந்தை விட்டு இறங்கியதும் அதற்கு முன்பாகவோ, பின்பாகவோ சென்று சாலையைக் ..............................செல்ல முயலக் கூடாது.
2. விதிகளின்படி சாலையில் வாகனங்களை .......................... ஓட்டிச் செல்ல வேண்டும்.
3. சிவப்பு விளக்கு எரியும்போது, வாகனங்களை ........................ கோடுகளுக்குப்பின் நிறுத்த வேண்டும்.
4. மேம்பால, சுரங்க நடை பாதை இல்லாத இடங்களில் சாலையைக் குறுக்காகக் கடப்போருக்குப் போக்குவரத்துக் .......................... நின்று உதவுவார்.
5. வாகனங்கள் ஒன்றை மற்றொன்று முந்தும்போது சாலையின் மத்தியில் போடப்பட்டுள்ள ................................ கோட்டைக் கடக்க முயலல் கூடாது.

ஆ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

6. சாலையைக் கடக்கும் பொழுது முதலில் ........................ பார்க்க வேண்டும்.
   அ. இடப்புறம் ஆ.வலப்புறம் இ.எதிரே

7. சாலையில் மஞ்சள் மின்விளக்கு எரிந்தால் ....................
   அ. சாலையை விரைவாகக் கடக்க வேண்டும்
   ஆ. சாலையைக் கடக்கத் தயாராக வேண்டும்
   இ. சாலையில் நிற்க வேண்டும்

8. சாலையைக் கடக்கச் சுரங்கப் பாதை இல்லாத இடங்களில் ....................
   அ. விரைவாக ஓடிக் கடக்க வேண்டும்
   ஆ. மெதுவாகச் செல்ல வேண்டும்
   இ. காவலர் கடக்கச் சொல்லும்போது கடக்க வேண்டும்

இ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

9. நகரப் பேருந்தில் பயணம் செய்வோர் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறையைக் கூறுக.
10. கடப்பதற்குரிய கோடு போடாத இடத்தில் சாலையை எவ்வாறு கடக்க வேண்டும்?
11. சாலையில் நடப்போர் பின்பற்ற வேண்டிய விதிமுறை பற்றி எழுதுக.
12. சிறுவர்கள் முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டியனவாக முகிலனிடம் அவன் அத்தை கூறியன யாவை?

ஈ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

13. சாலையை எங்கெங்கு எவ்வெவ்வாறு கடக்க வேண்டும்?
14. சாலைப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த வண்ண விளக்குகள் எவ்வாறு பயன்படுகின்றன?
15. சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ள காரணத்தையும் பயனையும் எழுதுக.
16. விபத்துகளைத் தவிர்க்க நடைமுறையில் கையாளவேண்டிய விதிமுறைகள் சிலவற்றை எழுதுக.
17. வாகன நிறுத்த விதிமுறைகள் பற்றி எழுதுக.

## III. மொழித்திறன் வளர் பயிற்சி

அ. கீழ் வரும் சொற்களுக்கு எதிர்ச் சொல் தருக.

| | |
|---|---|
| 1. அகலமான X ---------- | 2. முன்பக்கம் X ---------- |
| 3. மெதுவாக X ---------- | 4. இறங்க X ---------- |
| 5. வலப்புறம் X ---------- | 6. தவறு X ---------- |

ஆ. எடுத்துக்காட்டில் உள்ளதுபோல் தொடர்களிலுள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

எ-கா. சிவப்பு விளக்கு எரியும்போது வாகனங்கள் உரிய திசையில் செல்ல வேண்டும்.

பச்சை விளக்கு எரியும்போது வாகனங்கள் உரிய திசையில் செல்ல வேண்டும். (அல்லது)

சிவப்பு விளக்கு எரியும்போது வாகனங்கள் நிறுத்தக் கோட்டுக்குப் பின்னால் நிற்க வேண்டும்.

1. பேருந்தில் முன்பக்க வாயில் வழியாக ஏற வேண்டும்.
2. சாலையை எங்கு வேண்டுமானாலும் குறுக்காகக் கடக்கலாம்.
3. சிவப்பு விளக்கு எரியத் தொடங்கினால் நடப்போர், சாலையைக் குறுக்காகக் கடக்க வேண்டும்.
4. நடை பாதைகள், கடைகள் போட அமைக்கப்பட்டுள்ளன.
5. சாலைகளில் வாகனம் செலுத்துவோர் வலப்புறமாகச் செல்ல வேண்டும்.

## IV. திறன்வளர் தொடர் பணி

சாலையில் கீழ்க் குறித்தவாறு சில படங்கள் வரையப்பட்ட அறிவிப்புகள் இருக்கும். அவற்றால் நாம்அறிந்து கொள்ள வேண்டியதென்ன என்று எழுதுக.

1. சிறுவன் கைப் பையுடன் ஓடுவது போல் படம்.
2. ஊது குழல் வரைந்து அதன்மேல் பெருக்கல் குறியிட்ட படம்.
3. இரும்புச் சட்டங்கள் அமைந்துள்ளது போல் படம்.

## V. இலக்கணம்

### வேற்றுமை

**ஐந்தாம் வேற்றுமை:**

பண்பாட்டில் சிறந்தது தமிழ்நாடு.

தமிழகத்தின் வடவெல்லை திருவேங்கடம்.

இத் தொடர்களில் 'பண்பாடு', 'தமிழகம்' என்னும் சொற்களுடன் 'இல்', 'இன்' என்னும் உருபுகள் சேர்ந்து பொருளை வேறுபடுத்துகின்றன. 'இல்', 'இன்' என்பன ஐந்தாம் வேற்றுமை உருபுகள்.

**ஆறாம் வேற்றுமை:**

மன்னனது கை இராமனது புத்தகம்

இத் தொடர்களில் 'மன்னன்', 'இராமன்' ஆகிய பெயர்ச் சொற்களுடன் 'அது' என்னும் உருபு சேர்ந்து, பொருளை வேறுபடுத்துகிறது. 'அது' என்பது ஆறாம் வேற்றுமை உருபாகும்.

**ஏழாம் வேற்றுமை:**

கிளையின்கண் அமர்ந்துள்ள பறவை

பெட்டிக்குள் பணம் இருக்கிறது.

இத் தொடர்களில் 'கிளை', 'பெட்டி' என்ற பெயர்ச் சொற்களோடு 'கண்', 'உள்' என்ற உருபுகள் சேர்ந்து இடப் பொருளை உணர்த்துகின்றன. 'கண்', 'உள்' என்பன ஏழாம் வேற்றுமை உருபுகளாகும். ஏழாம் வேற்றுமைக்கு இடை, கடை, மேல் முதலிய உருபுகளும் உள்ளன.

எட்டாம் வேற்றுமை:

**கண்ணா வா!**

இத் தொடரில் 'கண்ணன்' என்ற சொல்லின் இறுதி எழுத்து கெட்டு, அயல் (முந்திய) எழுத்து நீண்டு, அழைத்தல் பொருளைத் தருகிறது.

இவ்வாறு பெயர்ச்சொல் சில மாற்றங்களுடன் அழைத்தல் பொருளில் வருவதை விளிவேற்றுமை என்பர். (விளித்தல் - அழைத்தல்)

| | உருபுகள் | வேற்றுமை |
|---|---|---|
| வேலன் பாடினான் | - தனி உருபு இல்லை | முதல் (எழுவாய்) வேற்றுமை |
| வேலனைக் கண்டேன் | - ஐ | இரண்டாம் வேற்றுமை |
| வேலனால் முடிந்தது | - ஆல் | மூன்றாம் வேற்றுமை |
| வேலனுக்குக் கொடு | - கு | நான்காம் வேற்றுமை |
| வேலனின் நல்லவன் | - இன் | ஐந்தாம் வேற்றுமை |
| வேலனது புத்தகம் | - அது | ஆறாம் வேற்றுமை |
| வேலன்கண் உள்ளது (வேலனிடம் உள்ளது) | - கண் | ஏழாம் வேற்றுமை |
| வேலா ! வா | - தனி உருபு இல்லை | எட்டாம்(விளி) வேற்றுமை |

**பயிற்சி**

1. வேற்றுமை என்பது யாது?
2. வேற்றுமை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. எழுவாய் வேற்றுமை என்பது என்ன?
4. விளிவேற்றுமையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
5. அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொல்லுடன் பொருத்தமான வேற்றுமை உருபை இணைத்துக் கோடிட்ட இடத்தை நிரப்புக.

எ-கா: செல்வி ----------- கற்றாள். (திருக்குறள்)
செல்வி திருக்குறளைக் கற்றாள்.

1. பரிசு பெற்றது ........... ஓவியம் (கண்ணன்)
2. பசித்து வந்த ........... உணவு கொடு (ஏழை)
3. மாணவர்கள் ........... உயரவேண்டும் (ஒழுக்கம்)
4. மரத்தின் ........... கூடு இருந்தது (கிளை)
5. வேலன் ........... வடித்தான் (சிலை)

## VI. மொழிப்பயிற்சி

### நேர் இணை - எதிர் இணைச் சொற்கள்

நாம் செய்திகளையும் கருத்துகளையும் பிறரிடம் கூறும் பொழுது திறம்படக் கூறுவதற்காக, ஒரே பொருள் தரும் இரு சொற்களைப் பயன்படுத்துவது உண்டு. அவை நேர் இணைச் சொற்கள் எனப்படும்.

கண்ணன் பேரும் புகழும் பெற்று விளங்கினான்.
காந்தியடிகள் ஈடு இணையற்ற தலைவராய்த் திகழ்ந்தார்.
நம்நாட்டில் ஓங்கி உயர்ந்த மலைகள் பல உள்ளன.

இத் தொடர்களில் பேரும் புகழும், ஈடு இணை, ஓங்கி உயர்ந்த என்பன நேர் இணைச் சொற்களாகும்.

எதிரான கருத்தைக் கூறுங்கால் ஒன்றுக்கொன்று எதிர்ப் பொருள் தரும் சொற்களைப் பயன்படுத்துவோம். அவை எதிர் இணைச் சொற்களாகும்.

விளையாட்டுத்திடல் மேடு பள்ளம் உடையதாய் இருந்தது.
மக்கள் உயர்வு தாழ்வு இன்றிப் பழக வேண்டும்.
வேலன் அல்லும் பகலும் உழைத்தான்.

இத் தொடர்களில் மேடு பள்ளம், உயர்வு தாழ்வு, அல்லும் பகலும் என்பன எதிர் இணைச் சொற்கள்.

நேர் இணைச் சொற்களையும் எதிர் இணைச் சொற்களையும் பயன்படுத்தி எழுதினால் மொழிநடை சிறப்பாக அமையும்.

### பயிற்சி

கீழ் உள்ள நேர்இணைச் சொற்களையும் எதிர் இணைச் சொற்களையும் பொருத்தமுறப் பயன்படுத்தி வாக்கியங்கள் எழுதுக.

1. குற்றம் குறை
2. இன்ப துன்பம்
3. வாடி வதங்கி
4. வரவு செலவு

## VII. அகராதி காணும் பயிற்சி

க, ச, ஞ, த - எழுத்துகளின் வருக்கங்கள் முறையாக அமையும்படி கீழ் உள்ள சொற்களை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுக.

ஞமலி, கூட்டம், தாள், கற்கண்டு, சக்கரம், தீ, சீர், தையல், ஞாயிறு, தன்மை, கிளை, ஞிமிறு, காவல், சிக்கல், சென்னை.

# 6. மருத்துவ மாமேதை குருசாமி

பழமையான சித்த மருத்துவ முறையில் தமிழ்நாடு சிறந்து விளங்குவதை எல்லாரும் அறிவர். மேனாட்டு முறைகளோடு சித்த மருத்துவ முறையினை இணைத்து முன்னேற்றம் கண்டவர் டாக்டர் குருசாமி. மருத்துவத் துறை அறிவில் மிகச் சிறந்த இவர், உலகப் புகழ் பெற்ற மருத்துவர்களோடு ஒருங்குவைத்து எண்ணத் தக்கவர்.

மருத்துவர் குருசாமி, பெங்களூரை அடுத்த 'தியாக மங்களா' என்னும் சிற்றூரில் 1880 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் ஏழாம் நாளன்று பிறந்தார். தந்தையார் இராமசாமி முதலியார்; தாய் துர்கா அம்மையார். தொடக்கக் கல்வியை முடித்த பின்னர், இவர் சீரங்கப்பட்டணத்து உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து, பள்ளி இறுதித் தேர்வில் முதல் மாணவராய்த் தேறினார். கல்லூரிப் படிப்பைப் பெங்களூர் சென்டிரல் கல்லூரியில் முடித்த பின்னர், சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து எம். பி. சி. எம். பட்டம் பெற்றார். அறுவை மருத்துவத் தேர்ச்சிக்காகச் 'சிப்பர் பீல்டு' பொற் பதக்கம் பெற்றார்.

மருத்துவப் படிப்பை முடித்த குருசாமியை மைசூர் அரசு, கொள்ளை நோய் ஒழிப்பு, உயர் அதிகாரியாக நியமித்தது. அங்குப் பிளேக் நோயை ஒழிக்க அரும்பாடுபட்டார். சென்னை மருத்துவக் குழு நடத்திய தேர்வில் முதன்மை பெற்றதால், 1910 இல் கதிரியக்கத் துறையில் சிறப்புப் பயிற்சி பெற டோராடூன் சென்றார். அப் பயிற்சியை முடித்துத் திரும்பியதும் தஞ்சை மிராசுதார் மருத்துவக் கல்லூரியின் பேராசிரியரானார். 1915 இல் சென்னைப் பொது மருத்துவ மனைக்கு மாற்றப் பெற்றார். புகழ்பெற்ற மருத்துவர் கர்னல் எல்லிஸுடன் இணைந்து பணியாற்றினார். தம் நுண்ணறிவாலும் பணி ஈடுபாட்டாலும் 1916 இல் மருந்தர் நிலைக்கு உயர்ந்தார்; சிவில் சர்ஜன் பதவியும் பெற்றார்.

மருத்துவத் துறையின் வெவ்வேறு பிரிவுகளில் பயிற்சி பெற்றுக் குருசாமி சிறந்து விளங்கினார். அதனால் மருத்துவத் துறையில் பல்வேறு

பொறுப்புகளை ஏற்றுத் திறம்படச் செயலாற்றினார். 1920 ஆம் ஆண்டு எம்.டி.பட்டம் பெற்ற முதல் தமிழர் என்னும் சிறப்பையும் எய்தினார். அதே ஆண்டில் 'மெட்டீரியா மெடிக்கா' என்னும் மருத்துவ நூலின் பொறுப்பை ஏற்ற முதல் இந்தியர் என்னும் பெருமையையும் பெற்றார். இந் நூலுக்கு ஆற்றிய சேவை காரணமாக 'மருத்துவத் துறையின் தந்தை' என்னும் பாராட்டைப் பெற்றார்.

தமது சீரிய செயல்பாடுகளால் சென்னைப் பொது மருத்துவ மனையின் தலைமை மருத்துவராகி, அப் பொறுப்பை ஏற்ற முதல் இந்தியர் என்னும் சிறப்புக்கும் உரியவரானார். ஆங்கில மருத்துவத்தையும் இந்திய மருத்துவத்தையும் ஒப்பாய்வு செய்யவும், நோயுற்றவருக்குத் தனிப்பட்ட சிகிச்சை அளிப்பதோடு சிறப்பான கவனிப்பு அளிப்பது குறித்த துறையில் சிறப்புப் பயிற்சி பெறவும் குருசாமியை ஆங்கில அரசு இங்கிலாந்துக்கு அனுப்பியது. அங்குத் தமது கற்பித்தல் முறையால் பேராசிரியர் டாக்டர் தாம்சனைக் கவர்ந்து, அவரது பாராட்டுதலைப் பெற்றுத் தாயகம் திரும்பினார்.

மருத்துவர் பலர் ஆங்கில மருத்துவ முறைகளையே பின்பற்றினர். ஆனால், இவர் இந்திய மருத்துவ முறைகளான ஆயுர் வேதம், சித்தம் ஆகியவற்றையும் மதித்துப் போற்றி வளர்த்தார். பிணியுற்றவரைப் பார்த்த அளவிலேயே, அவர் உற்ற பிணி இன்னதென யூகித்து அறியும் அற்புத ஆற்றலை இவர் பெற்றிருந்தார். ஊசிக்கும் கத்திக்கும் மாயா நோய்கள் இவரால் மாய்ந்தன.

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

என்னும் குறளுக்கு இவர் இலக்கியமானார்.

இவர் மக்களை மக்களாக மதித்தார். செல்வர் ஏழை என்று வேறுபாடு காட்டாமல் அனைவர்க்கும் உதவினார். காலை நேரத்தில் தம் இல்லத்திலேயே ஏழை, எளிய மக்களுக்கு இலவசமாக மருத்துவ உதவி வழங்கினார். வறுமையில் வாடிய ஏழைகளின் உற்ற நண்பராகத் திகழ்ந்தார்.

உடல் நோயைப் போக்குவதில் சிறந்து விளங்கிய மருத்துவ மேதை, மக்களின் அறியாமை நோயைப் போக்குவதிலும் ஆர்வம் காட்டினார். சென்னையில் தொண்டை மண்டலம் துளுவ வேளாளர் குழுவினர் பள்ளி ஒன்றை நடத்திவந்தனர். அப் பள்ளி ஆசிரியர் வேழுர் நரசிம்மாச்சாரியார் ஏழை மாணவர்க்கு இலவச நண்பகல் உணவு அளிக்கும் திட்டத்தை அப் பள்ளியில் 1933 இல் செயல்படுத்தத் தொடங்கினார். இதற்குப் பலரிடம் உதவி கேட்ட ஆசிரியர், மருத்துவ மேதையையும் ஒரு முறை அணுகினார். நண்பகல் உணவுத் திட்டச் செயல் முறைகளை மருத்துவர் குருசாமி கேட்டறிந்தார். ஆசிரியரை மறுநாள் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து தம்மைச் சந்திக்குமாறு கூறினார். எழும்பூர் கென்னத் சந்தில் தமக்குச் சொந்தமாக இருந்த மாளிகை ஒன்றை, இலவச நண்பகல் உணவுத் திட்டத்திற்கு உதவும் வகையில் பள்ளிக்குப் பத்திரம் எழுதிப் பதிவு செய்து கொடுத்தார். இனி, அக் கட்டட வருவாயைக் கொண்டு ஏழை மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்குமாறு பத்திரத்தில் குறிப்பிட்டார். எதிர்பாராத இந்த நன்கொடையால் பள்ளி நிருவாகம் வியப்பும் திகைப்பும் அடைந்து, மகிழ்ச்சியில் திளைத்தது.

மருத்துவ மேதை அந்தப் பள்ளியின் நிருவாகக் குழுத் தலைவராகப் பொறுப்பேற்கும்நிலை உருவாயிற்று. அவ் வேளையில், பள்ளி மாணவர் எண்ணிக்கை இரண்டாயிரத்தைக் கடந்தது. இடப் பற்றாக்குறை காரணமாகப் பள்ளியில் முறைவைத்துக் கற்பிக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இம் முறையில், கற்பித்தல் முழுமை பெறாது என மருத்துவ மேதை உணர்ந்தார். எனவே, கொண்டித்தோப்பில் ஓரிடத்தில் ஒன்பது மனைகளை வாங்கிப் பள்ளிக்கு வழங்கினார். மருத்துவத் தொழிலில் ஈட்டிய அரும்பொருளில் பெரும்பகுதியைக் கொடையாக வழங்கிப் புதிய கட்டடம் அமையவும் வழிவகுத்தார். இப்பெருங்கொடைக்கு எவ்வாறு நன்றி சொல்வது எனத் திகைத்த பள்ளி நிருவாகக் குழுவினர், மருத்துவ மேதையின் பெயரையே அப்பள்ளிக்குச் சூட்டி மன நிறைவு எய்தினர். இன்றைக்கும் அப் பள்ளி மருத்துவ மேதையின் கல்விப் பணிக்குரிய சின்னமாக நின்று, அவரது அழியாப் புகழைப் பறைசாற்றி வருகிறது.

தம் செயல்களுக்கும் சிறந்த வாழ்வுக்கும் இறைவனே முழுமுதற் காரணம் என எண்ணினார். இறைப் பற்றில் குறையாது, எளிமையாக

வாழ்ந்தார். திருத்தணிகை மலையில் பக்தர்கள் சிரமமின்றி ஏறுவதற்குப் படி அமைத்தது முதலான எண்ணற்ற திருப்பணிகளையும் செய்தார். பேருழைப்பு, அருள் மனம், இறை நம்பிக்கை; வீண் பேச்சு பேசாமை, எளிமை, நேர்மை, தூய்மை, நல்லொழுக்கம் முதலான நற்பண்புகள் கொண்டவரும், கல்விக்கு வாரி வாரி வழங்கியவருமான இவ் வள்ளல், தமிழ்நாடு தனித் துயரடைய 1958 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 26 ஆம் நாளன்று தம் பொய்யுடல் நீத்துப் புகழுடல் எய்தினார்.

தன்னலங் கருதாத சேவையாளரும், ஏழை பங்காளருமாகிய மருத்துவ மேதைக்குச் சென்னை மருத்துவக் கல்லூரியின் முகப்பில் 1962 இல் முழு உருவச் சிலை வைத்துத் தமிழக அரசு பெருமைப்படுத்தியது. மருத்துவ மேதையின் கொடையால் வளர்ந்த நிறுவனங்கள், இவர் புகழை எடுத்தியம்பிக் கொண்டிருக்கின்றன. இவரது பேருழைப்பையும், தொண்டு உள்ளத்தையும், தியாக மனப்பான்மையையும் மாணவர்கள் உணர்தல் வேண்டும். சமுதாயம் உயர, நற்றொண்டு ஆற்றத் தாங்களும் முயலுதல் வேண்டும்.

## I. சொற்களஞ்சியம்

### அ. அருஞ்சொற்பொருள்:

மேனாடு - மேற்கத்திய நாடுகள், ஐரோப்பிய நாடுகள்; இணைத்து - சேர்த்து; ஒருங்கு - சமமாக; ஏனைய - மற்ற, பிற; எய்தினார் - அடைந்தார்; பிணி - நோய்; யூகித்து - உள் உணர்வால் அறிந்து; மாயா - அழியாத, விலகாத; நாடி - ஆராய்ந்து; அது தணிக்கும் - நோயின் அடிப்படைக் காரணத்தைப் போக்கும்; வாய்ப்ப - ஏற்புடையவற்றை, பொருந்தும்படியாக; இல்லம் - வீடு; நண்பகல் - மதியம்; ஈட்டிய - சம்பாதித்த, தேடிய; இறை-இறைவன், கடவுள்,தெய்வம்; திருப்பணி - கோயிலைப் பழுதுபார்த்துப் புதுப்பித்துக் குடமுழுக்கு செய்தல்; கொடை - தருமமாகக் கொடுத்தல்.

### ஆ. விளக்கவுரை:

மருந்தர்: நோய் முதல் அறிந்து தக்க மருந்துகளைக் குறிக்கும் வல்லுநர்.
சித்த மருத்துவம்: பண்டைக் காலம் முதல் தமிழகத்தில் கடைப்பிடிக்கப்படும் சித்தர்கள் கண்ட தனி மருத்துவமுறை. தாவரப் பொருள்களோடு, உலோகங்களையும் தாதுப் பொருள்களையும் அதிகமான அளவில் பயன்படுத்தி நோய் போக்கிய சிகிச்சை முறை.

**ஆயுர் வேதம்:** நோய் அணுகாதபடி தாவரப் பொருள்களை மட்டுமே பயன்படுத்தி உடல் நலம் காக்கும் முறை. வாதம் (வாயு), பித்தம், சிலேத்துமம் (கபம்) என்பவற்றின் அடிப்படையில் நோய்க்கான காரணத்தைக் கண்டறிந்து தீர்க்கும் இந்திய மருத்துவ முறை. உடல் பயிற்சி, எண்ணெய்க் குளியல் முதலானவற்றால் நோய் தீர்க்கும் முறை.

**சார்பதிவாளர் அலுவலகம்:** நிலம், வீடு முதலான சொத்துகள் விற்பது, வாங்குவது போன்றவற்றை அரசு அறிந்து பாதுகாக்கும் வகையில் பதிவு செய்யப்படும் அலுவலகம்.

## II. பொருளுணர் திறன் பயிற்சி

**அ.பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. 'சிப்பர் பீல்டு பொற் பதக்கம்' வழங்கப்படும் மருத்துவத் தேர்வு ....................
   அ. மருந்தியல் மருத்துவம் ஆ. சித்த மருத்துவம்
   இ. அறுவை மருத்துவம்

2. மருத்துவ மேதை 'டோராடூன்' சென்றமைக்குக் காரணம் ........
   அ. பிளேக் நோயை ஒழிக்க ஆ. பேராசிரியர் பதவியை ஏற்க
   இ. கதிரியக்கத் துறை பயிற்சி பெற

3. 'மருத்துவத் துறையின் தந்தை' என மருத்துவ மேதை குருசாமி பாராட்டப்பட்ட காரணம் ..........................
   அ. கதிரியக்கத் துறையில் சிறப்புப் பயிற்சி பெற்றமை
   ஆ. ஆங்கில மற்றும் இந்திய மருத்துவங்களை ஒப்பாய்வு செய்தமை
   இ. மெட்டீரியா மெடிக்காவுக்குச் சேவை ஆற்றியமை

4. மாமேதை குருசாமி மதித்துப் போற்றி வளர்த்த இந்திய மருத்துவ முறைகள் ...................
   அ. நாட்டு வைத்தியமும் சித்த வைத்தியமும்
   ஆ. ஆயுர் வேதமும் ஆங்கில மருத்துவமும்
   இ. சித்த மருத்துவமும் ஆயுர்வேதமும்

5. பள்ளி நிருவாகக் குழு வியப்பும், திகைப்பும் அடையக் காரணமான நிகழ்ச்சி ........
   அ. மருத்துவ மேதை பள்ளிக்கு ஒன்பது மனைகள் வாங்கிக் கொடுத்தமை
   ஆ. மருத்துவர் ஏழைகளுக்கு இலவச மருத்துவ உதவி செய்தமை
   இ. நண்பகல் உணவுத் திட்டத்திற்கு ஒரு மாளிகையைக் கொடுத்தமை.

## ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

6. டாக்டர் குருசாமி எதனால் 'மருத்துவ மேதை' யாக மதிக்கப்பட்டார்?
7. மாமேதை குருசாமி 'மருத்துவத் துறையின் தந்தை' எனப் போற்றப்பட்ட காரணத்தை எழுதுக.
8. மருத்துவ மேதை இங்கிலாந்திற்குச் சென்ற காரணத்தை எழுதுக.
9. மருத்துவ மாமேதை குருசாமி ஏழைகளின் உற்ற நண்பராகத் திகழ்ந்தார் என்பதை எழுதுக.
10. ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசப் பகலுணவு யாரால், எங்கு, எப்போது செயல்படுத்தப்பட்டது?
11. மருத்துவ மாமேதை கொண்டித்தோப்பில் ஒன்பது மனைகளை ஏன் வாங்கினார்?
12. பள்ளி ஆட்சிக் குழுவினர் தம் நன்றி அறிதலை எவ்வாறு வெளிப்படுத்தினர்?

## இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

13. மருத்துவ மாமேதை குருசாமியின் இளமையும் கல்வியும் குறித்து எழுதுக.
14. மாமேதை குருசாமி மருத்துவக் கல்வியில் பெற்ற தேர்ச்சிகள் குறித்து எழுதுக.
15. கதிரியக்கத் துறை பயிற்சி முடித்ததும் மருத்துவ மேதை ஆற்றிய பணிகள், பெற்ற பதவிகள் குறித்து எழுதுக.
16. மருத்துவ மாமேதை குருசாமி எக் குறளுக்கு இலக்கியமானார்? எவ்வாறு?
17. பள்ளியில் இலவச நண்பகல் உணவு வழங்க மருத்துவ மாமேதை குருசாமி எவ்வாறு உதவினார்?
18. பள்ளியின் வளர்ச்சிக்கு மருத்துவ மாமேதை உதவிய பாங்கினை எழுதுக.
19. மருத்துவ மாமேதை குருசாமியின் புகழை இன்றளவும் பறைசாற்றி நிற்பவை குறித்து எழுதுக.

## III. மொழித்திறன் வளர் பயிற்சி

**எடுத்துக்காட்டைப் போல் கீழ் உள்ள வாக்கியங்களைச் சேர்த்து எழுதுக.**

எ-கா: குருசாமி சீரங்கப்பட்டணம் உயர்நிலைப் பள்ளியில் படித்தார்; பள்ளி இறுதித் தேர்வில் தேறினார்; சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார்.

குருசாமி சீரங்கப்பட்டணம் உயர்நிலைப் பள்ளியில் படித்து, பள்ளி இறுதித் தேர்வில் தேறி, சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார்.

1. குருசாமி மருத்துவத் துறையில் பல்வேறு பிரிவுகளில் பயிற்சி பெற்றார்; அத் துறைப் பிரிவுகளில் சிறந்து விளங்கினார். அப் பிரிவுகளில் பல பொறுப்புகளை ஏற்றார்.

2. குருசாமி பிணியுற்றவரைப் பார்த்தார்; அவர் உற்ற நோயை ஊகித்து அறிந்தார்; நோய்க்குத் தக்க மருத்துவம் செய்தார்.

3. ஆசிரியர் வேபூர் நரசிம்மாச்சாரி ஏழை மாணவர்க்கு நண்பகல் உணவு அளிக்க விரும்பினார்; செல்வந்தர்களை அணுகி உதவி பெற்றார்; மாணவர்களுக்கு உணவு வழங்கினார்.

4. மருத்துவ மேதை மருத்துவத் தொழிலை உயர் அறமாகச் செய்தார்; பெரும் பொருள் ஈட்டினார்; பல அறக் கொடைகளுக்கு வழங்கினார்; அழியாப் புகழ் பெற்றார்.

## IV. திறன்வளர் தொடர் பணி

அ. மருத்துவ மாமேதை குருசாமி அவர்களைப்போல் மருத்துவத் துறையில் புகழ்பெற்ற தமிழ்நாட்டு மருத்துவர் இருவர் பெயர்களைக் கூறுக.

ஆ. சாலை விபத்து ஒன்றில் காயமுற்றவருக்கு உதவிய நபரைக் குறித்துப் பாராட்டி, உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

## V. இலக்கணம்

### அறுவகைப் பெயர்கள்

ஏதேனும் ஒன்றின் பெயரைக் குறிக்கும் சொல், பெயர்ச் சொல் எனப்படும்.

கந்தன், மலர்விழி, வண்டி, ஆடு, கிளி - இச் சொற்கள் எல்லாம் பொருள்களைக் குறிக்கின்றன. எனவே, இவை பொருட் பெயர்களாகும்.

சென்னை, பூங்கா, கடற்கரை, பள்ளி - இச் சொற்கள் எல்லாம் இடங்களைக் குறிக்கின்றன. எனவே, இவை இடப் பெயர்களாகும்.

நாள், மாதம், ஆண்டு - இச் சொற்கள் எல்லாம் காலத்தைக் குறிக்கின்றன. எனவே, இவை காலப் பெயர்களாகும்.

கை, கண், கிளை - இச் சொற்கள் எல்லாம் உறுப்புகளைக் (சினையைக்) குறிக்கின்றன. எனவே, இவை சினைப் பெயர்களாகும்.

நன்மை, கருமை, வட்டம், சதுரம் - இச் சொற்கள் பொருள்களின் பண்புகளைக் குறிக்கின்றன. எனவே, இவை பண்புப் பெயர்களாகும்.

ஓடுதல், பாடுதல், நடத்தல், வருகை - இச் சொற்கள் தொழிலின் (வினையின்) பெயர்களைக் குறித்தன. எனவே, இவை தொழிற் பெயர்களாகும்.

இவ்வாறு பெயர்ச்சொல்லானது பொருட்பெயர், இடப்பெயர், காலப் பெயர், சினைப் பெயர், பண்புப் பெயர், தொழிற் பெயர் என ஆறு வகைப்படும். பண்புப் பெயரைக் 'குணப்பெயர்' எனவும் கூறுவர்.

### பயிற்சி

**கீழ் உள்ள பெயர் வகையையும், எடுத்துக்காட்டையும் பொருத்துக.**

| பெயர் வகை | எடுத்துக்காட்டு |
|---|---|
| 1. பொருட்பெயர் | - அ. சித்திரை |
| 2. இடப்பெயர் | - ஆ. கால் |
| 3. பண்புப் பெயர் | - இ. பேசுதல் |
| 4. தொழிற் பெயர் | - ஈ. வெண்மை |
| 5. சினைப் பெயர் | - உ. நாற்காலி |
| | - ஊ. மன்றம் |

## VI. மொழிப்பயிற்சி

### மரபுச் சொற்கள்

நம் முன்னோர் எப் பொருளை எச் சொல்லால் குறித்தார்களோ, அப் பொருளை அச் சொல்லால் குறித்தலே மரபு ஆகும். மரபுச் சொற்களைத் தவிர்த்து வேறு சொற்களைப் பயன் படுத்துதல் மரபுப் பிழையாகும்.

'யானைக் குட்டி' என்பது மரபுப் பிழை. 'யானைக் கன்று' என்பதே மரபுச் சொல்.

தாவரம், விலங்கு ஆகியவற்றின் இளமையைக் குறிக்கும் மரபுச் சொற்களை அறிக.

**தாவரம்:**

| | | |
|---|---|---|
| வாழைக் கன்று | தென்னம் பிள்ளை | மாங் கன்று |

**விலங்குகள்:**

| | | |
|---|---|---|
| பசுங் கன்று | குதிரைக் குட்டி | நாய்க் குட்டி |
| பன்றிக் குட்டி | மான் கன்று | ஆட்டுக் குட்டி |
| புலிப் பறழ் | யானைக் கன்று | சிங்கக் குருளை |

பறவை, விலங்குகள் எழுப்பும் ஒலியைக் குறிப்பதற்கும் மரபுச் சொற்கள் உள்ளன. அவற்றை அறிக.

**பறவைகள்:**

| | |
|---|---|
| ஆந்தை அலறும் | காக்கை கரையும் |
| கோழி கொக்கரிக்கும் | கிளி கொஞ்சும் |
| குயில் கூவும் | மயில் அகவும் |

**விலங்குகள்:**

| | |
|---|---|
| நாய் குரைக்கும் | குதிரை கனைக்கும் |
| நரி ஊளையிடும் | பன்றி உறுமும் |
| யானை பிளிறும் | சிங்கம் முழங்கும் |

**பயிற்சி**

பறவை, விலங்குகளின் பெயர்களையும் அவற்றின் ஒலிக்குரிய மரபுச் சொற்களையும் பொருத்துக.

| பெயர் | ஒலி மரபுச் சொல் |
|---|---|
| 1. குயில் | - அ. அலறும் |
| 2. நரி | - ஆ. கனைக்கும் |
| 3. காக்கை | - இ. கூவும் |
| 4. சிங்கம் | - ஈ. முழங்கும் |
| 5. குதிரை | - உ. ஊளையிடும் |
| | - ஊ. குரைக்கும் |
| | - எ. கரையும் |

**VII • அகராதி காணும் பயிற்சி**

ந, ப, ம, ய, வ - எழுத்துகளின் வருக்கங்கள் முறையாக அமையும்படி கீழ் உள்ள சொற்களை ஒன்றன் கீழ் ஒன்றாக எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| நேற்று | வடக்கு | மேகம் | நெய்தல் |
| மௌனம் | வீண் | மின்னல் | யுத்தம் |
| பிடி | வாழை | நிறம் | வெற்றி |
| மென்மை | யோகம் | நட்பு | பை |
| யூகம் | பேறு | யானை | பாகல் |

# 7. தெருக் கூத்து

எங்கள் மாமா வீடு திண்டிவனத்திற்கு அண்மையில் ஒரு கிராமத்தில் இருந்தது. கோடை விடுமுறையின்போது அங்கே திரௌபதியம்மன் கோயிலில் திருவிழா நடந்தது. அதற்கு நானும் என் தங்கை வஞ்சியும் சென்னையிலிருந்து சென்றோம். அன்று இரவு உணவு உண்டபிறகு நாங்கள் கூத்துப் பார்க்கும் ஆவலில் காத்திருந்தோம். அதற்குமுன் நாங்கள் தெருக் கூத்து பார்த்ததில்லை. எங்களோடு சேர்ந்து கூத்து பார்க்க மாமா மகன் கலிய பெருமாளும் ஆர்வமாக இருந்தான். வீட்டு வேலைகளை முடித்துக்கொண்டு மாமாவும் அத்தையும் புறப்பட்டனர். சிறுவர்களாகிய நாங்கள் அவர்களுடன் சென்றோம்.

திரௌபதியம்மன் கோயிலுக்கு அருகில் உள்ள திடலில் மக்கள் பெருந்திரளாகக் கூடியிருந்தனர். அத் திடலில் இரண்டு கழிகளை நட்டு, அவற்றில் விளக்குகளைக் கட்டியிருந்தனர். கழிகளுக்கு இடையே இருந்த இடத்தை விட்டமாகக் கொண்டு, மக்கள் வட்டமாக அமர்ந்திருந்தனர். நாங்கள் வசதியாக ஓர் இடத்தில் உட்கார்ந்தோம். ஓர் ஓரத்தில் மட்டும் கழிகளுக்கு இணையாக ஒரு விசுப் பலகை போடப்பட்டிருந்தது. அதற்குப் பின்னே தென்னங் கிடுகுகளால் ஓர் அறை அமைத்திருந்தார்கள்.

“இந்த இடத்திலேதான் கூத்து நடக்குமா?” என வஞ்சி கேட்டாள். உடனே கலியபெருமாள், “ஆம், அங்கேதான் நடக்கும். அந்த இடத்திற்குக் ‘களரி’ என்று பெயர்” என்றான். அந்தச் சமயத்தில் சிலர் வந்து விசுப் பலகையில் அமர்ந்தனர். அவர்களிடம் முகவீணை, ஆர்மோனியம், மத்தளம், தாளம் முதலான இசைக் கருவிகள் இருந்தன. கூத்தின் பின்னணி வாத்திய இசைக் குழுவினர் அவர்களே யாவர். அவர்களுடன் வேறு சிலரும் வந்து கலந்து கொண்டனர். அவர்கள் பின் பாட்டுக்காரர்களாவர்.

இரவு மணி பத்து இருக்கும்; இசைக் கருவிகள் முழங்கின. பின்பாட்டுக்காரர்கள் பாடல் ஒன்றைப் பாடினர். ''களரி கட்டியாச்சு'' என்று கலியபெருமாள் சொன்னான். உடனே மாமா, "கூத்து தொடங்கப் போகிறது என மக்களுக்கு அறிவிக்கும் இந்த முறைக்குக் களரி கட்டுதல் என்று பெயர்" என்றார்.

பலவேறு ஊர்களிலிருந்து வந்த மக்கள் எல்லாரும் அங்குச் சேர்ந்து உட்கார்ந்தனர். ஊருக்குள்ளிருந்து மேலும் மக்கள் வந்து குழுமினர். சிறிது நேரத்தில் ஆடுகளத்தின் நடுவில் இருவர் வந்து நின்று வெள்ளை வேட்டி ஒன்றைத் திரையாகப் பிடித்தனர். திரைக்குப் பின்னால் ஒருவர் வந்துநின்று பாடத் தொடங்கினார். அவர் ஒவ்வொரு வரியாகப் பாடப் பாட, பின் பாட்டுக்காரர்கள் திரும்பக் கூட்டாகப் பாடினார்கள். பாடிய பாட்டிலிருந்து வந்திருப்பவர் கட்டியங்காரன் எனத் தெரிந்தது. கட்டியங்காரன், கூத்தின் கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்தினார். அப் பணியைச் செய்ததோடு இடையிடையே தேவைப்பட்ட சிறு சிறு பாத்திரங்களை ஏற்றும் நடித்தார். மேலும் அவரே கதையை விளக்குதல், மக்களை மகிழ்ச்சிப்படுத்தும் நகைச் சுவை நிகழ்ச்சிகளைக் கையாளுதல், கூத்தை முடித்து வைத்தல் ஆகிய வேலைகளையும் செய்ததைப் பின்னால் தெரிந்துகொண்டேன்.

பாட்டு முடிந்ததும் திரையை விலக்கிக்கொண்டு முழுக் கால் சட்டையும் பல வண்ணக் கோலம் கொண்ட மேல் சட்டையும் கோமாளித் தொப்பியும் அணிந்திருந்த கட்டியங்காரன் வேடம் பூண்டவர், சபை முன்னால் வந்தார். அவர் மட்டுமல்லர், அன்று கூத்தில் பல்வேறு வேடங்களில் நடித்த நடிகர்கள் எல்லாரும், முதல் முறையாகத் தோன்றியபோது திரைக்குப் பின்னால் நின்று பாடிய பின்னரே மக்கள்முன் தோன்றினர். அவர்கள் பாடிய பாடலின் வழியாக, அவர்கள் ஏற்றிருந்த பாத்திரங்களின் பண்புகளை அறிய முடிந்தது. அவர்கள் உடலோடு ஒட்டிய முழுக் கால்சட்டையையும், அதன்மேல் குட்டைப் பாவாடை போன்ற உடையையும் அணிந்திருந்தனர். பாத்திரங்களுக்கு ஏற்ற மேல் உடைகளையும், கட்டைகளாலான மகுடம், மார்புப் பதக்கம், புஜகீர்த்திகள் போன்ற அணிகளையும் அணிந்திருந்தனர். வண்ணக் காகிதங்கள், பாசிமணிகள், கண்ணாடித் துண்டுகள் போன்றவற்றால் அணிகலன்கள் அழகுபடுத்தப்பட்டிருந்தன. பெண் வேடதாரிகள் சேலையும் ரவிக்கையும் அணிந்து, குறைவான அணி மணிகளோடு காட்சி தந்தனர்.

கட்டியங்காரனைத் தொடர்ந்து கதைக்கு ஏற்ப நடிகர்கள் வருவதும் போவதுமாகக் கூத்து தொடர்ந்தது. எல்லாரும் பாடிக் கொண்டே அடி இட்டு ஆடினர். பெரும்பாலும் சுழன்று சுழன்று பாடலுக்கேற்ப ஆடினர். இதனை 'அடவு' என்று கூறினர். பாடல்களுக்கு இடையே வசனம் பேசினர். அப்போது மட்டும் இசைக் கருவிகள் ஓய்ந்திருந்தன.

நாங்கள் கூத்து பார்க்கச் சென்ற அன்று நடந்தது, 'பாஞ்சாலி கதை. பாஞ்சாலியாக வேடம் அணிந்து நடித்ததும் ஓர் ஆண்தான். தெருக் கூத்தில் பெண்கள் நடிக்கும் பழக்கம் இல்லையாம். பாஞ்சாலி பாத்திரம் பார்வையாளர்களிடம் சோகத்தை ஏற்படுத்தியது. துச்சாதனன், துரியோதனன் கதாபாத்திரங்கள் பார்வையாளர்களுக்குச் சினத்தை ஏற்படுத்தின. சுருங்கச் சொன்னால், பாத்திரங்களோடு ஒன்றி மக்கள் கவலைப்பட்டனர்; கோபப்பட்டனர்; மகிழ்ச்சி யடைந்தனர். இறுதியாகக் காலை ஆறு மணி அளவில் கூத்து நிகழ்ச்சி முடிவுக்கு வந்தது.

தெருக் கூத்து தமிழர்களின் பழங்கலைகளுள் ஒன்று. அது ஆடலும் பாடலும் இணைந்த நாட்டிய நாடகம். தெருக் கூத்து வெறும் பொழுதுபோக்காக நிகழ்த்தப்பெறும் கலை அன்று. மக்கள் வாழ்க்கையின், இன்ப துன்பங்களோடு கலந்துவிட்ட ஒன்று. பாமர மக்களுக்கும் சமுதாயத்தின் நெறிமுறைகளை அவ்வப்போது எடுத்துரைக்கும் கலையாகத் தெருக் கூத்து விளங்குகிறது. காந்தியடிகள் சத்திய நெறியைக் கடைப்பிடிக்கக் காரணமாக இருந்தது, அவர் இளம் பருவத்தில் கண்ட அரிச்சந்திர நாடகம்தானே! அதனால்தான் அக் கலைக்கு இன்றும் வரவேற்பு இருக்கிறது. ஆயினும் அதன் இன்றைய நிலை மகிழ்வூட்டுவதாக இல்லை. ஒரு காலத்தில் தமிழகம் முழுவதும் நடைபெற்றுவந்த தெருக் கூத்து, இன்று வட மாவட்டங்களில் மட்டுமே நடத்தப்படுகிறது. தெருக் கூத்துக் கலையை ஆதரித்துப் போற்றி வளர்க்க வேண்டியது நம் கடமை.

I.. சொற்களஞ்சியம்

அ. அருஞ்சொற்பொருள்:

அண்மை - பக்கத்தில்; திடல் - திறந்த வெளி, ஊர்ப் பொது இடம்; விட்டம் - வட்டத்தின் குறுக்கு அளவு; விசுப் பலகை - பலர் உட்கார வசதியான நீளமான மர இருக்கை; கிடுகு - பாய்போல் பின்னிய தென்னங் கீற்று; கூட்டாக

- ஒன்று சேர்ந்து; பணி - வேலை, செயல்; மகுடம் - கிரீடம், தலையில் அணியும் முடி; புஜகீர்த்தி - தோள்களில் இறக்கைபோல் அணியும் மரத்தால் செய்யப்பட்ட அலங்காரப் பொருள்; பாசி மணி - சிறு மணிவகை.

**ஆ. சொல்லாட்சித் திறன் :**

**கீழ் உள்ள சொற்களை வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

1. குழுமினர் 2. சுழன்று சுழன்று 3. ஆதரித்து

## II. பொருளுணர்திறன் பயிற்சி

### அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இளமையில் நாடகம் பார்த்ததால் காந்தியடிகளின் உள்ளத்தில் உருவான நெறி............
   அ. சத்திய நெறி ஆ. அகிம்சை நெறி இ. போராட்ட நெறி

2. தெருக் கூத்து என்பது ....................
   அ. கிராமங்களில் கோயில் விழாவில் நடத்தப்படுவது
   ஆ. ஆடலும் பாடலும் இணைந்த நாட்டிய நாடகம்
   இ. மக்கள் பொழுது போக்கப் பயன்பட்ட கலை

3. தெருக் கூத்தில் பாடலுக்கு ஏற்ப அடியிட்டுச் சுழன்று சுழன்று ஆடுவது .......
   அ. அடவு எனப்படும் ஆ. களரி எனப்படும்
   இ. கூத்து எனப்படும்

4. தெருக் கூத்தில் கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்துவதும் கதையை விளக்குவதும் ................
   அ. கதாசிரியர் பணி ஆ. பின் பாட்டுக்காரர் பணி
   இ. கட்டியங்காரன் பணி

### ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

5. மாமா, அத்தை முதலானவர்களோடு வஞ்சி முதலானோர் எங்கு, ஏன் சென்றனர்?
6. விசுப் பலகையில் அமர்ந்தோர் யாவர்? அவர்கள் கொண்டுவந்த இசைக் கருவிகள் யாவை?
7. 'களரி கட்டுதல்' எனப்படுவது என்ன?
8. திரைக்குப்பின் நின்று பாடிய பாடலால் வெளிப்பட்டன யாவை?
9. 'அடவு' எனப்படுவது யாது?

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

10. கூத்தாடும் இடத்தை என்னவென்று குறிப்பிடுகின்றனர்? அதை எவ்வாறு ஆயத்தப் படுத்திப் பயன்பாட்டுக்குக் கொண்டுவருகின்றனர்?
11. கட்டியங்காரன் செய்யும் பணிகளை வரிசைப்படுத்தி எழுதுக.
12. கட்டியங்காரன் களரியில் எவ்வாறு வந்து தோன்றினான்?
13. கூத்தின் கதாபாத்திரங்கள் மக்களைக் கவர்ந்த நிலைபற்றி எழுதுக.
14. தெருக் கூத்துக் கலையின் இன்றைய நிலைபற்றி அறியப்படும் செய்திகளை எழுதுக.

## III. மொழித்திறன் வளர் பயிற்சி

**அ கீழுள்ள தொடர்கள் அமைந்த வாக்கியங்களைப் பாடத்திலிருந்து எடுத்தெழுதுக.**

1. சிறுசிறு
2. இடையிடையே
3. முதன்முறை
4. சுழன்று சுழன்று

**ஆ. கீழ் உள்ள சொற்களில் முதல் எழுத்தைக் குறிலாகவோ,நெடிலாகவோ மாற்றி எழுதிப் பொருள் வேறுபாட்டை அறிந்து கூறுக.**

1. வட்டம் -------
2. ---------- கூத்து
3. மக்கள் --------
4. அணி -----------
5. _____ பாடல்
6. துண்டு ----------
7. சட்டை --------
8. --------- பாத்திரம்

**இ. எடுத்துக் காட்டில் உள்ளதுபோல் சேர்த்தெழுதுக.**

**எ-கா:** பார்த்து கொண்டு - பார்த்துக் கொண்டு
சூழ்ந்து கொண்டு - சூழ்ந்துக் கொண்டு

1. படுத்து கொண்டு
2. வந்து கொண்டு
3. எடுத்து சொல்லி
4. கலைந்து சென்று
5. முடித்து தந்து
6. வரைந்து தள்ளி
7. போர்த்து படுத்து
8. சென்று பார்த்து

## IV. திறன்வளர் தொடர் பணி

அ. திருவள்ளுவர் காலத்தில் தமிழகத்தில் தெருக் கூத்து நடந்துள்ளது. செல்வம் சேருவதையும், குறைந்து மறைவதையும் விளக்கக் கூத்தாடும் அவையை வள்ளுவர் உவமையாக எடுத்தாண்டுள்ளார். அக் குறளைக் கீழே தருகிறோம். அதன் பொருளை அறிந்து உரைநடையில் எழுதுக.

கூத்தாட்டு அவைக்குழாத்(து) அற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.

ஆ. தனது ஊரில் நடைபெறவிருக்கும் திருவிழாவைக் காண வருமாறு உன் நண்பன் உன்னை அழைத்துக் கடிதம் எழுதியிருந்தான். அதற்குச் செல்ல முடியாமைக்கான காரணத்தை விளக்கிப் பதில் கடிதம் எழுதுக.

## V. இலக்கணம்

### பண்புப் பெயர்

பெயர்ச் சொல் வகைகளுள் பண்புப் பெயர் பற்றிச் சற்று விரிவாக அறிந்து கொள்வோம். உலகில் உள்ள பொருள்களுக்கு உரிய பண்புகளை நிறம், அளவு, வடிவம், சுவை, குணம் முதலான வகைகளாகப் பிரிக்கலாம்.

வெண் தாமரை - வெண்மை + தாமரை
கருங்குதிரை - கருமை + குதிரை

இவற்றில் வெண்மை, கருமை ஆகியன நிறப் பண்பைக் குறிக்கும் சொற்கள்.

முப்பால் - மூன்று + பால்
குறுங்கோல் - குறுமை + கோல்

இவற்றில் மூன்று, குறுமை ஆகியன அளவுப் பண்பைக் குறிக்கும் சொற்கள்.

வட்டக் கல் - வட்டம் + கல்
சதுரக் குழி - சதுரம் + குழி

இவற்றில் வட்டம், சதுரம் ஆகியன வடிவப் பண்பைக் குறிக்கும் சொற்கள்.

கசப்பு மருந்து - கசப்பு + மருந்து
புளிக் குழம்பு - புளிப்பு + குழம்பு

இவற்றில் கசப்பு, புளிப்பு ஆகியன சுவைப் பண்பைக் குறிக்கும் சொற்கள்.

அன்பகம் - அன்பு + அகம்
ஈகையுள்ளம் - ஈகை + உள்ளம்

இவற்றில் அன்பு, ஈகை ஆகியன குணப் பண்பைக் குறிக்கும் சொற்கள்.

இவ்வாறு நிறம், அளவு, வடிவம், சுவை, குணம் ஆகியவற்றைக் குறிக்கும் பெயர்கள் ' பண்புப் பெயர்' எனப்படும்.

### பயிற்சி

1. பண்புப் பெயராவது யாது?
2. பண்புப் பெயரை எத்தனை வகைகளாகப் பிரிப்பர்? அவை யாவை?
3. கீழ் உள்ள தொடர்களைப் பிரித்து, அவற்றிலுள்ள பண்புப் பெயர்கள் எந்த வகையைச் சேர்ந்தவை எனக் குறிக்க.
   செங்காலன்னம், அறுமுகத்தான், வட்டப்பாதை, நற்செயல், இன்சுவை .

## VI மொழிப்பயிற்சி

### அடை மொழி

| | | |
|---|---|---|
| செந்தாமரை | - | செம்மை + தாமரை |
| வெண்டாமரை | - | வெண்மை + தாமரை |
| பாற்குடம் | - | பால் + குடம் |
| நெய்க்குடம் | - | நெய் + குடம் |

பொருள்களின் பெயரைக் குறிக்கும்பொழுது, ஒரு பொருள் பலவகைப்பட்டதாக இருக்குமாயின், அவற்றை இனம் பிரித்துக் காட்ட ஒரு தனிச் சொல்லைச் சேர்த்துக் குறிப்பர். அச் சொல்லுக்கு அடை மொழி என்று பெயர்.

தாமரை - என்று சொல்லும்போது, அதன் (வண்ண) வகை குறித்து ஐயம் தோன்றும். அதைப் போக்க வண்ணப் பண்பை அடை மொழியாகக் கொடுத்துச் செந்தாமரை, வெண்தாமரை எனக் கூறவேண்டும்.

குடங்கள் பல இருக்கின்றன. அவற்றுள் என்ன பொருள் வைக்கப்பட்டுள்ளது என்பதை அடை மொழியாகக் கொடுத்து, வகை பிரித்து உணர்த்தப் பால் குடம், நெய்க் குடம் எனக் கூறவேண்டும்.

இவ்வாறு பொருள்களை இனம பிரித்து அறிய உதவும் அடை மொழி, 'இனமுள்ள அடை மொழி ' எனப்படும்.

கருங்காக்கை - கருமை + காக்கை
செம்போத்து - செம்மை + போத்து

காக்கை, கருமை நிறமானது. போத்து, சிவப்பு நிறமானது. காக்கையிலும் போத்திலும் வேறு வகை (வண்ண இனம் ) இல்லை. எனினும் அடைமொழி கொடுத்துக் 'கருங்காக்கை' என்றும் 'செம்போத்து' என்றும் குறிப்பிடுவது, அவற்றைச் சிறப்பித்துக் கூறுவது ஆகும். இவ்வாறு இனம் இல்லாதனவற்றிற்கு அடைமொழி கொடுத்துக் கூறுவது 'இனமில்லா அடைமொழி 'எனப்படும்

### பயிற்சி

கீழ் உள்ள தொடர்களை இனமுள்ள அடைமொழி, இனமில்லா அடைமொழி பெற்றனவாகப் பிரித்து எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1. கார்த்திகை விளக்கு | 2. உப்பளம் | 3. பூ மரம் | 4. இலை மரம் |
| 5. வெண் திங்கள் | 6. நீல மயில் | 7. கருமேகம் | 8. கருங்குயில் |
| 9. செஞ்ஞாயிறு | 10. தோய் தயிர் | 11. வெண்புறா | 12. வெள்ளைப்பசு |

## VII அகராதி காணும் பயிற்சி

கீழ் உள்ள சொற்களை இரண்டாம் எழுத்து 'ட' வருக்க வரிசையில் அமையும்படி ஒன்றன் கீழ் ஒன்றாக எழுதுக (அவ்வாறு எழுதும்பொழுது முதலில் மெய்யும் பின்னர் உயிர்மெய்யும் அமைதல் வேண்டும).

படுக்கை, படி, பட்டு, படாடோபம், படை, படர், படம்.

# 8. உணவே மருந்து

நடு நிசி, நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த மணி திடீரென்று விழித்துக் கொண்டான். அவனை விழிப்படையச் செய்தது எது? முதலில் அவனுக்குப் புரியவில்லை. வயிற்றில் கடாமுடாச் சத்தம். அத்துடன் வலி. அதுதான் அவன் விழித்து எழுந்ததற்குக் காரணம். வயிறு ஏன் வலிக்கிறது? இரவு சாப்பிட்டது காரணமாக இருக்கலாம். கல்லையும் செரிக்கும் வயதாயிற்றே மணிக்கு..! பிறகு ஏன் இப்படியாயிற்று? இரைப்பையும் குடலும் என்ன இரும்பால் ஆனவையா? இரும்பால் செய்த இயந்திரங்களுக்கும் தேய்மானம் உண்டன்றோ? அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு என்பதை மறந்து விட்டு, இரவில் தேவையற்றதைச் சாப்பிட்டதுதான் காரணம்.அவன் படுக்கப் போகும் சமயத்தில் ஊரிலிருந்து அவன் மாமா வந்தார். அவர் வாங்கி வந்த தின்பண்டங்களை உடனே சாப்பிட்டான் மணி.

மணி எழுந்து அம்மாவை எழுப்பி விவரம் சொன்னான். அந்த நடு இரவில் எந்த மருத்துவரைத் தேடிப் போவது? அம்மா உடனே வெள்ளைப் பூண்டை உரித்து நான்கைந்து பற்களைச் சுட்டுக் கொடுத்தார்; சுடு தண்ணீர் வைத்துக் கொடுத்தார். மணி பூண்டைச் சாப்பிட்டு, சுடு தண்ணீரைக் குடித்தான். அரை மணி நேரத்தில் வயிற்றுவலி குறைந்தது. அது சரி, பூண்டு உணவுப் பொருள்களுள் ஒன்று. அது எப்படி வயிற்று வலிக்கு மருந்தானது? இதைத்தான் நாம் உணவே மருந்து என்கிறோம். உலகில் ஏறக்குறைய அறுபதாயிரம் தாவரங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.அவற்றுள் நாம் உணவாகப் பயன்படுத்தும் தாவரங்கள் எல்லாம் மருத்துவக் குணம் வாய்ந்தவை. அவற்றை முறையாகப் பயன்படுத்தினால் மருந்து என ஒன்று தனியாகத் தேவை இல்லை.

உயிர் வாழ்வதற்கு உணவு இன்றியமையாதது. நாம் உண்ணும் உணவு உடல் வளர்ச்சிக்கு உதவுகின்றது; தேய்ந்துபோகும் திசுக்களைப் புதுப்பிக்கின்றது. மூளை, இதயம், நுரையீரல் முதலான

உடல் உறுப்புகள் தத்தம் தொழிலைத் தவறாது செய்து வர நமக்குப் பல்வேறு சத்துகள் தேவைப்படுகின்றன. அவற்றை யெல்லாம் நாம் உணவின் வழியாகத்தான் பெறவேண்டும்.

எல்லாச் சத்துகளும் கிடைக்கும்படியாக நம் உணவுப் பழக்கம் அமைய வேண்டும். ஆனால் இன்று நாம் நாகரிகம் என்னும் பெயரால் மேற்கத்திய உணவு முறைகளைப் பின்பற்றத் தொடங்கியுள்ளோம். அவை பெருமளவு கொழுப்புச் சத்தையே கொண்டவை. குளிர் நாடுகளான மேலை நாடுகளுக்கு அவை பொருத்தமானவையாக இருக்கலாம். வெப்பம் மிகுந்த நமது நாட்டுக்கு அவை பொருந்தா. மேற்கத்திய உணவு வகைகளில் நமக்குத் தேவையான நார்ச் சத்துகளும் நீர்ச் சத்துகளும் கிடைக்காமல் போகும். பிறகென்ன? நோய்கள் ஓடோடி வந்து நம்முடன் ஒட்டிக்கொள்ளும். விரைவு உணவகங்களுக்குச் சென்று சாப்பிடுவது, பொட்டலப் படுத்தப்பட்ட தின்பண்டங்களை வாங்கிக் கொறிப்பது, புட்டிகளில் அடைக்கப்பட்ட குளிர் பானங்களை அருந்துவது தவறு. இவற்றில் உள்ள கொழுப்புச் சத்தும் சுவை யூட்டச் சேர்க்கப்படும் வேதிப்-பொருள்களும் உடலுக்கு ஊறு செய்பவையே. எனவே, காசைக் கொடுத்து நோயை வாங்குவது அறிவுடைமை ஆகாது. நாம் தண்ணீரை அதிகமாகக் குடிக்க வேண்டும். தண்ணீரை வடிகட்டிக் கொதிக்க வைத்துக் குடிப்பதே நல்லது.

எல்லாச் சத்துகளும் கிடைக்கும் உணவுக்காக, நாம் அதிகம் செலவு செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. நாம் செய்ய வேண்டுவது ஒன்றே ஒன்றுதான். நம் ஊரில் கிடைக்கும் எல்லாக் காய்கறிகளையும் பழ வகைகளையும் வாங்கிச் சாப்பிடுவதுதான் அது. நமக்குப் பிடிக்கிறது என்பதற்காக அடிக்கடி சிலவற்றையே சாப்பிடுவது நல்லதன்று. பாகற்காய் நல்லதுதான், ஆனால் அடிக்கடி சாப்பிடக்கூடாது. வாரத்திற்கு ஒருமுறை சாப்பிட்டால் போதும். எந்தக் காயையும் எந்தப் பழத்தையும் பிடிக்காது, நன்றாக இராது என ஒதுக்காமல் சாப்பிட்டாலே எல்லாச் சத்துகளும் இயல்பாகக் கிடைக்கும்.

நாம் சாப்பிடுவது உடலைப் பேணுவதற்காக; சுவைத்து மகிழ்வதற்காக அன்று. சுவைத்துச் சாப்பிடுவதில் என்ன தவறு? தவறு இல்லைதான். ஆனால், எப்போது? உடலுக்குத் தீங்கு செய்யாத வகையில் சமைத்த உணவையும், காய்கறிகளில் உள்ள சத்துகள் கெடாதவாறு சமைத்த உணவையும் சாப்பிடுவதில் தவறில்லை.

வெப்பம் மிகுந்த கோடைக் காலத்தில் வெள்ளரிக் காய், பப்பாளிப் பழம், முலாம் பழம் முதலானவற்றைச் சாப்பிடலாம்; இளநீர் பருகலாம்; நீர் மோர் அருந்தலாம். இவை எல்லாம் நம் நாட்டில் கிடைப்பவை. இவை கோடைக் காலத்தில் நம் உடலை வெப்பு நோய் முதலானவை அணுகாமல் காப்பாற்றும். நார்ச் சத்து மிகுந்த கீரை வகை மருத்துவப் பண்பும் நிறைந்தவை. அகத்திக் கீரை, சிறு கீரை, முளைக் கீரை, வெந்தயக் கீரை, அரைக் கீரை முதலானவற்றை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். சாதாரணமாகக் கிடைக்கும் முருங்கைக் கீரையில் இரும்புச் சத்து மிகுதியாக உள்ளது. இவை அனைத்தும் உணவாக உட்கொள்ளப்படுகின்றன. இவற்றில் மருத்துவக் குணமும் இருப்பதால் உணவே மருந்து என்று கூறுவது பொருத்தமாகிறது.

மக்கள் அனைவரும் நெடுநாள் வாழவே விரும்புவர். நெடுநாள் வாழ நல்ல உடல் வேண்டும். எனவேதான் திருமூலர், 'உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே' என்றார். உடல் வளர்ச்சிக்குத் தேவையான உணவு, உடலைப் பாதுகாப்பதாக இருக்க வேண்டும். 'பசித்துப் புசி' என்பதுதான் நம் நாட்டில் வழங்கும் பழமொழி. எனவே, நாம் நமது சூழ்நிலைக்கு ஏற்ற சத்தான உணவை அளவோடு உண்போம்! நோயற்ற வாழ்வு வாழ்வோம்!

## I. சொற்களஞ்சியம்

### அ. அருஞ்சொற்பொருள்:

தாவரம் - செடி கொடி மர வகை; ஊறு - துன்பம், கேடு; பேணுவது - பாதுகாப்பது.

## II. பொருளுணர்திறன் பயிற்சி

### அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. நமது நாட்டுச் சூழலுக்கு நாம் உண்ணும் உணவில் அதிகம் இருக்க வேண்டியவை .....

   அ. நார்ச் சத்தும் நீர்ச் சத்தும் ஆ. கொழுப்புச் சத்தும் நீர்ச் சத்தும்

   இ. சர்க்கரைச் சத்தும் நார்ச் சத்தும

2. விரைவு உணவகங்களில் சாப்பிடுவது ....................

அ. நாகரிகமான உணவு முறையாகும்

ஆ. காசைக் கொடுத்து நோயை வாங்குவதாகும்

இ. நமது நாட்டுக்கு மிகவும் பொருத்தமானதாகும்

3. 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' எனக் கூறியவர் ..................

அ. திருவள்ளுவர் ஆ. திருமூலர் இ. மணியின் மாமா

4. நமக்கு எல்லா வகைச் சத்துகளும் கிடைக்க உதவுவது ..................

அ. மேலை நாட்டு ணவு முறை

ஆ. நாம் செலவு செய்யும் அதிகப் பணம்

இ. நம் ஊரில் கிடைக்கும் காய்கறிகளை அளவோடு சாப்பிடுவது

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

5. மருந்து என ஒன்று நமக்கு எப்போது தேவைப்படாது?
6. நம் உணவுப் பழக்கம் எவ்வாறு அமைய வேண்டும்? ஏன்?
7. எது ,அறிவுடைமையாகாது என இக் கட்டுரை கூறுகிறது?

**ஈ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

8. மணிக்கு இரவு வயிற்று வலி ஏற்படக் காரணம் என்ன?
9. உணவே மருந்தாகும் என்பதற்கு விளக்கமாக அமைந்த நிகழ்ச்சியை எழுதுக.
10. நம் நாட்டுச் சூழலுக்குப் பொருத்தமான, பொருத்தமற்ற உணவு குறித்து எழுதுக.
11. தவறான உணவு முறை குறித்து இக் கட்டுரை கூறும் செய்தி யாது?
12. அதிகம் செலவு செய்யாமல் சத்துள்ள உணவைப் பெறக் கட்டுரையில் தரப்பட்டுள்ள செய்தியை எழுதுக.

## III. மொழித்திறன் வளர் பயிற்சி

**கீழ் உள்ள தொடர்களை, எடுத்துக்காட்டைப் போன்று தடித்த எழுத்தில் அமைந்த சொற்களுடன் பொருத்தமாக 'இல்', 'உள்' சேர்த்து எழுதுக.**

எ-கா: 1. பூண்டு **தாவரங்கள்** ஒன்று.

பூண்டு தாவரங்களுள் ஒன்று.

2. **காய்கறிகள்** உயிர்ச்சத்து உள்ளது.

காய்கறிகளில் உயிர்ச் சத்து உள்ளது.

1. பெருங்கடைகள் பெருநகரங்கள் உண்டு.
2. சிவாஜி மராட்டிய வீரர்கள் சிறந்தவர்.
3. உயிர்ச் சத்து பழங்கள் அதிகம்.
4. மாம்பழம் முக்கனிகள் ஒன்று.

## IV. திறன்வளர் தொடர் பணி

அ. உணவுப் பழக்கம் குறித்த கீழ் உள்ள இரு தொடர்களை அறிக.
1. மீதூண் விரும்பேல்.
2. பாலோடாயினும் காலம் அறிந்து உண்.

ஆ. உணவு உண்ணுதலால் விளையும் பயன் பற்றி விளக்கும் திருக்குறளைப் படிக்க. அதன் பொருளை எழுதுக.

மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துஉண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு.

இ. காஞ்சிபுரம், மதுரை, தஞ்சாவூர், திருவண்ணாமலை, கோவை ஆகிய ஊர்களுள் ஒன்று பற்றி ஒரு வருணனைக் கட்டுரை எழுதுக.

## V. இலக்கணம்

### தொழிற் பெயர்

பெயர்ச் சொல் வகைகளுள் தொழிற் பெயர் பற்றிச் சற்று விரிவாக அறிந்து கொள்வோம். ஒரு பொருள் செய்யும் தொழிலை உணர்த்தும் பெயர் தொழிற் பெயராகும்.

ஆடுதல் -' ஆடல் ' என்னும் தொழிலை உணர்த்துகிறது.
வருகை -' வருதல்' என்னும் தொழிலை உணர்த்துகிறது.

தொழிற் பெயரின் ஈற்றில் (கடைசியில்) தல், அல், அம் , ஐ, கை முதலியவற்றுள் ஒன்று விகுதியாக அமையும்.

| | | |
|---|---|---|
| பேசுதல் | - | 'தல்' விகுதி |
| பாடல் | - | 'அல்' விகுதி |
| ஓட்டம் | - | 'அம்' விகுதி |
| கொலை | - | 'ஐ' விகுதி |
| செய்கை | - | 'கை' விகுதி |

இவ்வாறு விகுதி பெற்று வரும் தொழிற்பெயரை 'விகுதி பெற்ற தொழிற்பெயர்' என்பர்.

காவலர் திருடனுக்கு ஓர் உதை கொடுத்தார்.

இத்தொடரில் 'உதைத்தல்' என்னும் தொழிற் பெயர், விகுதி பெறாது, 'உதை' என்னும் முதல்நிலை மட்டும் நின்று, தொழிற் பெயருக்குரிய பொருளை உணர்த்துகிறது.

இவ்வாறு சில தொழிற் பெயர்கள் விகுதியின்றி முதல்நிலை மட்டும் நின்று தொழிலை உணர்த்தும். அவை 'முதனிலைத் தொழிற் பெயர்' எனப்படும்.

கெடுவான் கேடு நினைப்பான்

இத் தொடரில் 'கெடுதல்' என்னும் தொழிற் பெயரின் முதனிலை 'கெடு' என்பது, 'கேடு' என மாறுபட்டு (திரிந்து) வந்து, தொழிலை உணர்த்துவதால் 'முதனிலை திரிந்த தொழிற் பெயர்' எனப்படும்.

**பயிற்சி**

1. விகுதி பெற்ற தொழிற் பெயர்களை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

2. கீழ் உள்ளன எவ் வகைத் தொழிற் பெயர்கள் எனக் கூறுக.
   ஓடுதல், பாடு, பேறு, அடி, ஆட்டம்.

## VI. மொழிப்பயிற்சி

### தொகைச் சொற்கள்

பேசும் பொழுது இரண்டு மூன்று பொருள்களைத் தொகுத்து, ஒரு சொல்லாகக் கூறுவது உண்டு. அதனைத் தொகைச் சொல் என்பர்.

எடுத்துக்காட்டாக 'முத்தமிழ்' என்னும் தொகைச்சொல் இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் ஆகிய மூன்றையும் குறிக்கும். அடிக்கடி பயன்படுத்தும் தொகைச் சொற்கள் குறிக்கின்ற பொருள்களை அறிதல் வேண்டும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள சில தொகைச் சொற்களையும் அவற்றின் விரிவையும் படித்தறிந்து கொள்க.

| தொகைச் சொல் | | விரிவு |
|---|---|---|
| இரு திணை | - | உயர் திணை, அஃறிணை |
| இரு வினை | - | நல் வினை, தீ வினை |
| முக்கனி | - | மா, பலா, வாழை |

| | | |
|---|---|---|
| முத்தமிழ் | - | இயல், இசை, நாடகம் |
| முந்நீர் | - | ஆற்று நீர், மழை நீர், ஊற்று நீர் |
| முப்படை | - | தரைப் படை, கப்பல் படை, விமானப் படை |
| நால்வகை உணவு | - | உண்ணல், தின்னல், பருகல், நக்கல் |
| நாற் குணம் | - | அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு |
| நானிலம் | - | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் |
| ஐம் பொறி | - | மெய், வாய், கண், மூக்கு, செவி |
| ஐம் பூதம் | - | நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் |
| அறு சுவை | - | இனிப்பு, கசப்பு, புளிப்பு, கரிப்பு, துவர்ப்பு, கார்ப்பு |
| எழு வண்ணம் | - | வெண்மை , கருமை, செம்மை(சிவப்பு), பசுமை, மஞ்சள், நீலம், கருநீலம் |
| எண் சுவை | - | நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம் பெருமிதம், வெகுளி, உவகை |
| நவதானியம் | - | நெல், துவரை, பச்சைப் பயறு, உளுந்து, அவரை, எள்ளு, கடலை, கொள்ளு, கோதுமை |

## VII. அகராதி காணும் பயிற்சி

க, ச, த, ந - வருக்க எழுத்துகளை வரிசையாகவும், அவற்றை அடுத்து வரும் மெய், உயிர்மெய் யெழுத்துகளை வரிசையாகவும் அமைத்துக் கீழ் உள்ள சொற்களை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| சம்மதம் | கட்டி | சமம் | தணிதல் |
| சாடுதல் | தண்ணீர் | சிரித்தல் | நகக்கண் |
| கடுகு | நகாசு | சமீபம் | நடுதல் |
| கடைப்பிடி | கடல் | கடிகாரம் | நகை |
| காலடி | குடம் | தணல் | சமாதானம் |

# 9 'பாரத ரத்னா' எம்.ஜி.ஆர்

'பாரத ரத்னா' எம்.ஜி.ஆர். இலங்கையிலுள்ள கண்டியில் 1917ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் நாளன்று கோபாலன், சத்யபாமா இணையருக்கு ஐந்தாவது மகனாகப் பிறந்தார். இவரது இரண்டாம் அகவையில் தந்தை மரணமடைந்தார். எனவே, குடும்பம் தமிழ்நாடு திரும்பிக் கும்பகோணத்தில் தங்கியது. சத்யபாமா அம்மையார் ஆனையடி பள்ளியில் அவரைச் சேர்த்தார். ஆயினும் குடும்பத்தின் வறுமைநிலை காரணமாக எம்.ஜி.ஆரும் அவர் தமையனாரும் சிறுவயதிலேயே நாடகத் துறையில் ஈடுபட்டு நடிகர்களாயினர்.



எம்.ஜி.ஆர். நடிப்பிலும் வயதிலும் வளர்ச்சி பெற்றார். திரைப்படத் துறையில் ஈடுபட்டுச் சிறுசிறு வேடங்களில் நடித்துக் கதா நாயகனாக உயர்ந்தார். பல திரைப்படங்களில் நடித்தார். காந்தியடிகளிடம் பற்றுக் கொண்டு கதர் அணிந்தார். காங்கிரசு இயக்கத்தின் கொள்கையைப் பிரச்சாரம் செய்தார். பின்னர், திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார்; அந்தக் கட்சியின் பொருளாளராக உயர்ந்தார்.

நடிப்புக் கலையையும் அரசியலையும் தமது இரு கண்களாகக் கருதினார். அவற்றை மக்கள் நலத்திற்குப் பயன்படுத்தத் தொடங்கினார். தாம் ஏற்ற பாத்திரங்களின் மூலம் மக்களுக்குப் புரட்சிக் கருத்துகளைப் புகட்டினார். அரசியல் மேடைகளிலும் கருத்துப் புரட்சி செய்தார். பேரறிஞர் அண்ணாவின் இதயக் கனியானார். 'புரட்சி நடிகர்', 'மக்கள் திலகம்' என்னும் பட்டங்களைப் பெற்றார்.

எம்.ஜி.ஆர். திரையுலகில் சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் முடிசூடா மன்னராக விளங்கினார். அக்காலத்தில் மக்கள் நலத்தையும் நாட்டின் நலத்தையும் மனத்தில் கொண்டு பல அரிய கருத்து நிறைந்த பாடல்களைப் பாடி நடித்தார். மனிதனாகப் பிறந்தவன் எவ்வாறு வாழ வேண்டுமென்பதைப் பாமரனும் அறிந்து கொள்ளுமாறு,

''கொடியில் பிறந்த மலரால் எங்கும் வாசம் கமழ்ந்தது,
அன்னை மடியில் பிறந்த உன்னால் என்ன பயன்தான் விளைந்தது?
பத்துத்திங்கள் சுமந்தாளே அவள் பெருமைப்பட வேண்டும்!
உன்னைப் பெற்றதனால் அவள் மற்றவராலே போற்றப்பட வேண்டும்''

என்று ஒரு படத்தில் பாடி நடித்துள்ளார்.

குழந்தைகள் இந்த நாட்டின் எதிர்காலச் செல்வங்கள் அல்லரோ? அவர்கள் எவ்வாறு வளர வேண்டும் என்பதை,

''சின்னப் பயலே! சின்னப் பயலே! சேதிகேளடா!
..............................
வேப்பமர உச்சியில் நின்னு பேயொன்னு ஆடுதுன்னு
விளையாடப் போகும்போது சொல்லி வைப்பாங்க - உந்தன்
வீரத்தைக் கொழுந்திலேயே கிள்ளி வைப்பாங்க - அந்த
வேலையற்ற வீணர்களின் மூளையற்ற வார்த்தைகளை
வேடிக்கையாகக்கூட நம்பி விடாதே - நீ
வீட்டுக்குள்ளே பயந்து கிடந்து வெம்பி விடாதே''

என்று பாடி நடித்துக் குழந்தைகளின் உள்ளங்களில் நம்பிக்கையைக் கூட்டியுள்ளார். அத்துடன், தாம் நடித்த படம் ஒன்றில்,

நல்ல பேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே!
நம்நாடு என்னும் தோட்டத்திலே
நாளை மலரும் முல்லைகளே !
நல்ல பேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே!
பாலூட்டும் அன்னை அவள் நடமாடும் தெய்வம்
அறிவூட்டும் தந்தை நல்வழிகாட்டும் தலைவன்
துணையாகக் கொண்டு நீ நடைபோடு இன்று
உருவாகும் நல்ல எதிர்காலம் ஒன்று''

என்று பாடி, அறிவுரை புகட்டியுள்ளார்.

மக்கள் சோம்பித் திரியாது நல்வாழ்வு நடத்த வேண்டும் என்பதை அறிவுறுத்த விரும்பிய காரணத்தால்,

'' நல்ல பொழுதையெல்லாம் தூங்கிக் கழித்தவர்கள்
நாட்டைக் கெடுத்ததுடன் தானும் கெட்டார்!
சிலர் அல்லும் பகலும் தெருக்கல்லாய் இருந்துவிட்டு
அதிஷ்டம் இல்லை என்று அலுத்துக் கொண்டார்!
விழித்துக் கொண்டோரெல்லாம் பிழைத்துக் கொண்டார்
உன் போல் குறட்டை விட்டோரெல்லாம் கோட்டை விட்டார்''

எனப் பாடி நடித்துள்ளார்.

'உழைப்பு முக்கியமானது. பிறரிடம் கை ஏந்தக் கூடாது. உழைப்பே மக்களை உயர்த்தும்' என்பதை மக்கள் மனத்தில் பதியச் செய்ய,

''என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்
ஒழுங்காய்ப் பாடுபடு வயல்காட்டில்
உயரும் உன் மதிப்பு அயல் நாட்டில் ''

எனப் பாடி, நாட்டு மக்களை உழைப்பின் பக்கம் உந்தித் தள்ள முயன்றார். அன்றியும்,

'' உழைக்கும் கைகளே உருவாக்கும் கைகளே
உலகைப் புதுமுறையில் உண்டாக்கும் கைகளே''

என்று பாடி, கைகளின் துணையோடு கடினமாக உழைத்து நாட்டின் தேவைகளை எல்லாம் நிறைவுபெறச் செய்ய முடியும் எனவும்

விளக்கினார். தாம் நடித்த படங்களில் இடம் பெற்ற பல திரை இசைப் பாடல்கள் மூலம், அவற்றை இயற்றிய கவிஞர்களின் புதுமைக் கருத்துகளைச் சாதாரண மக்களின் இதயங்களிலும் வெகு எளிதாகப் பதிய வைத்தார்.

நடித்து ஈட்டிய செல்வத்தை, நல்லவர் பலருக்குக் கொடுத்து உதவியவர் மக்கள் திலகம். அவர் 'செல்வத்துப் பயனே ஈதல்' என்பதனைத் தம் உள்ளத்தில் நிறுத்தி வாழ்ந்தார் .

புரட்சி நடிகர் நடிப்புத் துறையில் மட்டுமன்றி அரசியலிலும் ஈடுபட்டார். 1963 ஆம் ஆண்டு சென்னை மாநிலச் சட்ட மன்ற 'மேல் சபை' உறுப்பினரானார். 1967 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலின்போது பரங்கிமலைத் தொகுதியில் போட்டியிட்டுச் சிறப்பான வெற்றி பெற்றார்.

1972 ஆம் ஆண்டில் தாமிருந்த இயக்கத்திலிருந்து விலகிப் புதிய கட்சியைத் தொடங்கிப் 'புரட்சித் தலைவர்' ஆனார். 1977 ஆம் ஆண்டில் நடந்த தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தலில் பெருவெற்றி பெற்றுத் தமிழ்நாட்டின் முதல்வராகப் பதவி ஏற்றார். 1980 இல் நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு வென்று, மீண்டும் முதல்வரானார். 1984 ஆம் ஆண்டு உடல் நலக்குறைவால் அமெரிக்கா சென்றார்; விரைவாகக் குணமடைந்தார். அதே ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் வென்று மூன்றாவது முறையாகத் தமிழ்நாட்டின் முதல்வரானார். சுமார் பதினோராண்டுகள் தமிழ்நாட்டின் முதல்வராகப் பணியாற்றினார். சென்னைப் பல்கலைக் கழகம் அவரது பணிகளைப் பாராட்டி 'டாக்டர்' பட்டம் வழங்கியது. இந்தியாவில் சிறந்த நடிகருக்கு வழங்கப்பெறும் 'பாரத்' பட்டத்தையும் அவர் பெற்றுள்ளார்.

தமிழ் நாட்டின் முதலமைச்சராகி, ஏழை எளிய மக்களின் வாழ்வை உயர்த்த அரும்பாடுபட்டார். தமிழ் நாட்டின் பள்ளிகளில் குழந்தைகளுக்குச் சத்துணவுத் திட்டத்தை விரிவுபடுத்தினார். இலவச உடை, புத்தகம், காலணி முதலியன வழங்கவும் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தினார். தன்னிறைவுத் திட்டம், விவசாயிகளின் கடன் தள்ளுபடி, வீட்டு வசதித் திட்டம், ஆதரவற்ற மகளிருக்கு உதவும் திட்டம் எனப் பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தினார். அவருடைய படங்கள் மக்களுக்கு நல்ல பாடங்களாயின. 'புரட்சித் தலைவர்' என்று மக்களால் போற்றப்பட்ட எம்.ஜி.ஆர். 24.12.1987

அன்று மறைந்து தமிழகத்தைத் தாங்க முடியாத துயரத்தில் ஆழ்த்தினார். இந்திய அரசின் மிக உயரிய விருதான 'பாரத ரத்னா' விருதை மைய அரசு அவர் மறைவுக்குப்பின் வழங்கிப் பெருமைப்படுத்தியது.

திரைப் படத் துறையின் ஒரு பிரிவில் சிறந்து விளங்குவோர்க்கு எம்.ஜி.ஆர். பெயரில் தமிழ் நாடு அரசு ஆண்டுதோறும் விருது வழங்கி வருகிறது. கலை நுணுக்கத்துடன் கூடிய நினைவிடம் ஒன்றை அவருக்குச் சென்னைக் கடற்கரையில் அமைத்துப் பாதுகாக்கிறது. அவர் நினைவைப் பாதுகாக்கும் வகையில் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தையும் நிறுவியுள்ளது.

## I. சொற்களஞ்சியம்

### அ. அருஞ்சொற்பொருள்:

இணையர் - தம்பதியர், கணவன் மனைவியர்; அகவை - வயது ; தமையனார் - அண்ணன்; பாமரன் - ஓரளவும் கல்வி அறிவு பெறாதவன், மிகச் சாதாரண மனிதன்; அல்லும் பகலும் - இரவும் பகலும்; திங்கள் - மாதம்; ஈட்டிய - சம்பாதித்த.

### ஆ. கீழ் உள்ள சொற்களை வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

1. புகட்டினார் 2. பெருமைப்பட 3. ஆதரவற்ற

## II. பொருளுணர்திறன் பயிற்சி

### அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. எம்.ஜி.ஆர். சிறுவயதிலேயே நாடகத் துறையில் ஈடுபட்டதற்குக் காரணம் ...........
   அ. நடிப்புத் துறையை விரும்பியமை
   ஆ. குடும்பத்தின் வறுமைநிலை
   இ. தமையனார் நடிப்புத் துறையில் சேர்ந்தமை
2. எம். ஜி. ஆர். இரு கண்களாகக் கருதியவை ...........
   அ. குடும்பமும் அரசியலும்
   ஆ. நடிப்புக் கலையும் அரசியலும்
   இ. குடும்பமும் நடிப்புக் கலையும்

### ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

3. எம்.ஜி.ஆரின் இளமைப் பருவம் குறித்து எழுதுக.
4. எம்.ஜி.ஆரின் தொடக்க கால அரசியல் ஈடுபாடு குறித்து எழுதுக.
5. மனிதன் வாழ வேண்டிய முறையை எம்.ஜி.ஆர். எவ்வாறு உணர்த்தியுள்ளார்?
6. எதை வேடிக்கையாகக்கூட நம்பிப் பயந்து விடக்கூடாது எனப் பாடல் கூறுகிறது?

7. 'சோம்பலை நீக்கி வாழ வேண்டுமென்பதை எம்.ஜி.ஆர். எவ்வாறு தெளிவுபடுத்தியுள்ளார்?
8. எம்.ஜி.ஆர். பெற்ற பட்டங்கள் யாவை?

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

9. குழந்தைகள் வளர வேண்டிய முறையை எம்.ஜி.ஆர். தம் நடிப்பின் மூலம் எவ்வாறு உணரச் செய்துள்ளார்?
10. எம்.ஜி. ஆரின் திரை உலக வாழ்வு குறித்து எழுதுக.
11. மக்கள் திலகத்தின் அரசியல் வாழ்வு குறித்து எழுதுக.
12. முதலமைச்சர் எம்.ஜி.ஆர். மக்கள் வாழ்வை உயர்த்தச் செயல் படுத்திய நல்ல திட்டங்கள் குறித்து எழுதுக.

## III. மொழித்திறன் வளர் பயிற்சி

கீழ் உள்ள எடுத்துக்காட்டைப்போல் இரு வாக்கியங்களைச் சேர்த்து எழுதுக.

**எ-கா: எம்.ஜி.ஆர். நடிப்புத் துறையில் ஈடுபட்டார்; அரசியலிலும் ஈடுபட்டார்.**

எம்.ஜி.ஆர் நடிப்புத் துறையில் மட்டுமன்றி அரசியலிலும் ஈடுபட்டார்.

அன்றி - அத்துடன். இன்றி - இல்லாமல். 'நடிப்புத் துறையில் மட்டுமின்றி அரசியலிலும்' என எழுதினால் 'நடிப்புத் துறையில் இல்லாது அரசியலில்' எனப் பொருள் படும். 'நடிப்புத் துறையில் மட்டுமன்றி அரசியலிலும்' என எழுதினால் 'நடிப்புத் துறை - அத்துடன் அரசியலிலும்' எனப் பொருள் படும். இவ் வேறுபாட்டை அறிந்து கீழுள்ள தொடர்களைச் சேர்த்து எழுதுக.

1. தமிழ் மொழி தமிழ் நாட்டில் பேசப்படுகிறது; ஈழத்திலும் பேசப்படுகிறது.
2. வேலன் வகுப்புக்குப் பிந்தி வந்தான்; பொய்யும் சொன்னான்.
3. கந்தன் விளையாட்டில் வெற்றி பெற்றான்; படிப்பிலும் சிறந்து விளங்கினான்.
4. அறிஞர் அண்ணா தமிழில் அழகாகப் பேசினார்; ஆங்கிலத்திலும் சிறப்பாகப் பேசினார்.

## IV. திறன்வளர் தொடர் பணி

பேயொன்னு ஆடுதுன்னு சொல்லி வைப்பாங்க -இது பேச்சு வழக்கு.
பேயொன்று ஆடுகிறது என்று சொல்லி வைப்பார்கள்- இது எழுத்து வழக்கு.

கீழ் உள்ள பேச்சு வழக்குத் தொடர்களை எழுத்து வழக்குத் தொடர்களாக எழுதுக.

1. வள்ளி விடாம பேசிக்கிட்டிருந்தா.
2. எடை சரியான்னு பாத்துப் பொருளை வாங்கணும்.

3. நான் போய்ட்டு வரேன்னு சொன்னான்.
4. வ.உ.சி. பேச ஆரம்பிச்சதும் கூட்டம் அமைதியாச்சு.

## V. இலக்கணம்

### வினைமுற்று
### தெரிநிலை வினைமுற்று

கண்ணன் கடிதம் எழுதினான். உழவன் வயலை உழுகிறான்.

இத் தொடர்களில் 'எழுதினான்', 'உழுகிறான்' என்னும் வினைச் சொற்கள் செயல் முற்றுப் பெற்றதை உணர்த்துகின்றன. அதனால் அவை வினைமுற்றுகள் எனப்படும்.

எழுதினான், உழுகிறான் என்னும் சொற்கள் செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்னும் ஆறனையும் வெளிப்படையாக உணர்த்துகின்றன.

| | | எழுதினான் | உழுகிறான் |
|---|---|---|---|
| 1. செய்பவன் | - | கண்ணன் | உழவன் |
| 2. கருவி | - | எழுதுகோல் | ஏர், மாடுகள் |
| 3. நிலம் | - | அறை | வயல் |
| 4. செயல் | - | எழுதுதல் | உழுதல் |
| 5. காலம் | - | இறந்த காலம் | நிகழ்காலம் |
| 6. செய்பொருள் | - | கடிதம் | புழுதியாதல் |

இவ்வாறு தொழிலும் காலமும் பிறவும் வெளிப்படத் தெரியுமாறு வரும் வினைமுற்று, தெரிநிலை வினைமுற்று எனப்படும்.

### குறிப்பு வினைமுற்று

இராமன் இனியன்

இத் தொடரில் 'இனியன்' என்னும் சொல், வினைச் சொல்லாகும். இது தொழிலையும் காலத்தையும் வெளிப்படையாகக் காட்டவில்லை. எனினும், இனிய பண்பை உடையவனாக இருந்தான் எனக் குறிப்பால் காலத்தை உணர்த்துகிறது. இவ்வாறு செய்பவனை மட்டும் வெளிப்படையாக உணர்த்தி, பிறவற்றைக் குறிப்பாக உணர்த்தும் வினைமுற்று குறிப்பு வினைமுற்று எனப்படும். இஃது அறுவகைப் பெயர்களின் அடிப்படையில் பிறக்கும்.

எ-கா: புகழேந்தி **பொன்னன்** (பொருள்)
வேலன் **மதுரையான்** (இடம்)

| | | |
|---|---|---|
| நடராசன் | **திருவாதிரையான்** | (காலம்) |
| வள்ளல் | **செங்கண்ணன்** | (சினை) |
| இராமன் | **இனியன்** | (பண்பு) |
| சரவணன் | **நடிகன்** | (தொழில்) |

**பயிற்சி**

1. வினைமுற்று என்பது யாது?
2. தெரிநிலை வினைமுற்று - விளக்கிக் கூறுக.
3. கீழ் உள்ள வினைமுற்றுகள் எவ்வகை வினைமுற்று எனக் கூறுக.
   நெல்லையான், படித்தாள், செல்வன், நல்லன், கார்த்திகையான், வரைந்தான்.

## VI. மொழிப்பயிற்சி

`வா` என்பது வினைப் பகுதி. `வந்தான்` என்பது வினைமுற்று. `வந்து` என்பது வினையெச்சம். `வந்த` என்பது பெயரெச்சம். இது போன்று கீழ் உள்ள வினைப் பகுதிகளுக்கு வினைமுற்றும், வினையெச்சமும், பெயரெச்சமும் எழுதுக.

| **வினைப்பகுதி** | **வினைமுற்று** | **வினையெச்சம்** | **பெயரெச்சம்** |
|---|---|---|---|
| 1. படி | ----------- | -------------- | ------------- |
| 2. ஓடு | ----------- | -------------- | ------------- |
| 3. பேசு | ----------- | -------------- | ------------- |
| 4. வரை | ----------- | -------------- | ------------- |

## VII. அகராதி காணும் பயிற்சி

ப, ம, ய, வ- வருக்க எழுத்துகளை வரிசையாகவும், அவற்றை அடுத்து வரும் மெய், உயிர்மெய் யெழுத்துகளை வரிசையாகவும் அமைத்து, கீழுள்ள சொற்களை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ் | மன்றம் | பந்தயம் | வைத்தல் | பிறவி |
| மான் | யாகம் | வேடன் | மனம் | பாக்கம் |
| மார்பு | பன்னீர் | மீன் | பங்கு | யுகம் |
| வெற்றி | யோகம் | வேகம் | வலை | விற்படை |

# 10. அரிசிலார் வேண்டிய பரிசில்

(நாடகம்)

(மன்னன் பெருஞ்சேரல் இரும்பொறையின் அவை - அமைச்சரும் புலவர் அரிசில் கிழாரும் உரையாடிக் கொண்டிருக்கின்றனர்)

அமைச்சர் : புலவர் பெரும! வணக்கம், தாங்கள் இதுகாறும் இங்குத் தங்கி இருந்தமை எம் மன்னருக்குப் பெருமை சேர்ப்பதாய் இருந்தது.

புலவர் : அமைச்சரே! மன்னன் பெருஞ்சேரல் இரும்பொறை சாதாரணமான மன்னனா? எத்துணை புகழ் படைத்தவன்! அவன் படை நடத்திய இடமெல்லாம் வெற்றியே கண்டவன். இரும்பொறையின் நாற்படை வலிமையை இந்த நானிலமே நன்கு அறியுமே!

அமைச்சர் : மன்னரது படைகள் சூறைக் காற்றெனச் சீறி, கடல்போல் கொந்தளித்துப் பொங்கி, புயல்போல் பாய்ந்து, மலைபோல் மோதி அரும்போர் செய்வனவாயிற்றே! பொன்முடியாரும் தாங்களும் யாத்த 'தகடூர் யாத்திரை'யில் அப்போர்ச் செயல்களை அழகுற வருணித்துள்ளீர்களே!

புலவர் : இரும்பொறை மன்னனின் உடல் வீரம் ஒருபுறம் இருக்கட்டும்! அவன் உள்ளத்தின் ஈரத்தை என்னென்று சொல்வேன்! போர்க்களத்தில் தன்னை நாடி வந்த இரவலருக்குப் பரிசில்களை அள்ளிச் சிதறியதை நானே கண்டேன். இவன் தந்தை செல்வக் கடுங்கோ வாழியாதன் தன்னைப் பாடிய புலவர் கபிலருக்கு நூறு ஆயிரம் காணம் (பொன்) வழங்கியவராயிற்றே!

அமைச்சர் : அதுமட்டுமா? 'நன்றா' என்னும் குன்றேறி நின்று, கண்ணுக்கு எட்டிய நாடெல்லாம் காட்டிக் கொடுத்தவர் ஆயிற்றே!

புலவர் : ஆம்! அது சேரர் பரம்பரைக்குரிய குடிப்பண்பு அல்லவா? முரசு கட்டிலில் அறியாது படுத்து உறங்கிய மோசிகீரனாருக்குக் கவரி வீசிக் காத்துத் தமிழுக்குப் பெருமை தந்தவனும் இவனே அல்லனோ? பெருஞ்சேரல் இரும் பொறையின் தமிழ்ப் பற்று அளவிடற்கு அரியது. புன்னகை பூத்த முகத்தோடு புலவர்களை வரவேற்று, இன்சொல் பேசி, செவிக்கு விருந்தளிப்பான். பல்சுவை உணவை நல்விருந்தாக அருகிருந்து பரிமாறி உண்ணச் செய்து மகிழ்வதை யாரால் மறக்க முடியும்?

அமைச்சர் : மன்னர் உங்களுக்கு என்ன பரிசளித்து அனுப்புவாரோ, அறியேன்! இதுவரை எவரும் அளித்திராத பரிசைத் தங்களுக்கு அளித்தால் மட்டுமே அவர் மனம் குளிரும்! அதோ மன்னர் வருகிறார்!

(மன்னன் பெருஞ்சேரல் இரும்பொறையும் அரசி வேண்மாள் அந்துவஞ் செள்ளையும், மகன் இளஞ்சேரல் இரும்பொறை பின்தொடர வருகின்றனர். அவையோர் எழுகின்றனர்.)

அனைவரும்: மன்னர் பெருமானே, வருக! வருக! தங்கள் கொற்றம் நீடு வாழ்க! தங்கள் புகழ் எங்கும் ஓங்குக!

(அனைவரும் அமர்கின்றனர்)

மன்னன் : புலவர் பெருந்தகையீர்! தாங்கள் எங்களைப் பிரிந்து செல்ல விரும்புவதாக அறிந்தேன். அப்படியா?

புலவர் : மன்ன! உன் தமிழ்ப் பற்றை நான் அறிவேன். நீ இரவலர்க்கு எதையும் மறையாதவன், பொன்னையும் பொருளையும் வாரி வழங்குபவன் என்பதை

யெல்லாமும் நான் அறிவேன். ஒரு நாளன்று, இரு நாளன்று, பல நாள் தங்கினாலும், தலைநாள் போன்றே, அன்புடன் பேசி விருந்தோம்புபவன் என்பதையும் அனுபவித்து அறிந்துள்ளேன். இதுகாறும் உன் அருகிலிருந்து திளைத்தேன். தமிழ் வழங்கும் பிற நாடுகளையும் கண்டுவர என் மனம் விழைகிறது..... அதனால்தான் ...!

மன்னன் : பொறுங்கள்! பொறுங்கள்....புலவரே! இத்துணை நாள்களும் தங்களுக்கு நான் பரிசில் ஏதும் வழங்கவில்லையே! தாங்கள் பாடிய பாடல்களின் சொற்சுவையும் பொருட்சுவையும் என்னை மிகவும் கவர்ந்தன. சிந்திக்க வைத்தன. தமிழுக்கு நான் சிறப்பு செய்யவேண்டு மல்லவா?

புலவர் : தமிழ் மீது நீ கொண்டுள்ள பற்றையும் புலவர்களைப் போற்றும் பண்பையும்விடச் சிறந்த பரிசில் வேறென்ன உள்ளது?

மன்னன் : இல்லை, புலவரே! இதுவரை எவரும் வழங்காத பரிசிலைத் தங்களுக்கு நான் வழங்க விழைகிறேன். நாடி வந்தோருக்கு என் முன்னோர் பொன் கொடுத்தனர்! பொருள் ஈந்தனர்! பல ஊர்களைப் பரிசாகத் தந்தனர்! நான் முற்றிலும் புதுமையான பரிசில் அளிக்க விரும்புகிறேன்.

புலவர் : அப்படியா? அப் புதுமைப் பரிசில் யாதோ?

மன்னன் : எதைப் பரிசாக அளித்தாலும் என் உள்ளம் நிறைவு பெறுவதாகத் தெரியவில்லை. புலவர் பெருமானே! இந்த அரண்மனை, இதனுள் அடங்கிய பொருள்கள், என் அரசு கட்டில், இந்த நாடு ஆகிய அனைத்தையும் உமக்கே வழங்கினேன். இனி இவையெல்லாம் உமக்கே உரியன. தயை கூர்ந்து ஏற்றுக் கொள்ளுங்கள். நானும் என் துணைவி வேண்மாளும்

இம் மாளிகையிலிருந்து இப்போதே வெளியேற அனுமதியுங்கள். மறுக்காமல் இவை அனைத்தையும் ஏற்று அருள வேண்டும். அப்போதுதான் என் மனம் நிறைவு பெறும்.

(மன்னனும் அரசியும் அரசு கட்டிலிலிருந்து எழுகின்றனர்)

புலவர் : (திடுக்கிட்டு, செய்வதறியாது திகைத்து) மன்னா! மன்னர் மன்னா! சற்றே பொறுமையோடு அரியணையில் அமர்க! என் அறிவு நிலை மயங்குகிறது! சற்றே பொறுமையுடன் இருக்க!

(மன்னனும் அரசியும் அரியணையில் அமர்கின்றனர். அவையில் சிறிது நேரம் அமைதி நிலவுகிறது. அவையினர் பரபரப்போடு புலவரையே நோக்குகின்றனர். தம் இருக்கையிலிருந்து எழுந்த புலவர் குரலெழுப்பிப் பேசத் தொடங்குகின்றார்)

புலவர் : மன்னவ! உனக்கு மங்கலம் பெருகட்டும்! உன் முன்னோர் புகழை எல்லாம் நீ உனதாக்கிக் கொண்டாய். நீ எவ்வளவு பெரியவன்! உன் கொடை எவ்வளவு அரியது? உன் உள்ளத்து உயர்வைவிட, நீ தமிழ் மொழியிடம் கொண்டுள்ள பற்றை எண்ணி வியக்கிறேன்! என் தமிழுக்கு இவ்வளவு பெரிய பரிசா? இப் பரிசை வழங்கியதால் உன் மனம் நிறைவு பெறுகிறது! வேந்தே! இவற்றையெல்லாம் பெற்ற பிறகும்.... என் மனம் நிறைவு அடையவில்லையே! நான் இன்னும் உன் முன், இரவலனாகவே நிற்கிறேன். என் மனம் நிறைவு பெறும் பரிசிலை நீ வழங்கினால், அதை மட்டுமே ஏற்பேன்!

மன்னன் : (புலவரின் சிந்தனை ஓட்டத்தை அறியாதவனாய்) புலவர் பெரும! என் உடைமை அனைத்தையும் உமக்கு வழங்கிவிட்டேன்! இனியும் தாங்கள் என்பால் பெற விரும்புவது யாதென்று புரியவில்லை? கேளும் ... என் இன்னுயிராயினும் விருப்பத்தோடு தங்களுக்கு அளிக்கச் சித்தமாக இருக்கிறேன்.

புலவர் : (தம் இருக்கையினின்றும் சில அடிகள் முன்னே நடந்து, மன்னனை நெருங்கிச் சென்று) மன்னவ! எனக்கு அளித்த இந்த அரசு கட்டிலை, நீயே ஏற்றருள வேண்டும். இதுவே யான் விரும்பி வேண்டும் பெருங்கொடை! இக் கொடை ஒன்றை மட்டும் எனக்கு வழங்குவாயாக!

(கொடுத்துப் புகழ் கொண்ட மன்னன், புலவர் கேட்டதனைக் கொடுக்க முடியாதென மறுக்க இயலாமல் திகைக்கிறான்)

மன்னன் : புலவர் பெருந்தகையே! தாங்கள் இந்தச் சேர நாட்டிலேயே தங்கி, எனக்குச் செந்நெறி காட்டும் அவைப் புலவராகவும், அமைச்சராகவும் இருக்க உடன்பட்டால், தாங்கள் வேண்டும் பரிசிலை அளிக்கிறேன்!

(புலவர் உடன்பட்டார். புலவரும் புரவலனும் அவரவர் இருக்கைகளில் அமர்கின்றனர். அவையோர் 'மன்னர் இரும்பொறை... வாழ்க', 'புலவர் அரிசில் கிழார்... வாழ்க' என முழங்குகின்றனர்).

## I. சொற்களஞ்சியம்

### அ அருஞ்சொற்பொருள்:

அவை - அரச சபை; நாற்படை - தேர், யானை, குதிரை,காலாள் படைப் பிரிவு; சூறைக் காற்று - சுழன்று அடிக்கும் காற்று; யாத்த - எழுதிய; ஈரம் - இரக்கம், கருணை; இரவலர் - வறுமையால் பொருள் கேட்டு வருபவர்; காணம் - பொன் காசு; கவரி - சாமரம், கவரிமான் மயிரால் அமைந்தது; குளிரும் - நிறைவு பெறும்; கொற்றம் - வெற்றிச் சிறப்பு; திளைத்தோம் - அனுபவித்தோம்; அரியணை - சிம்மாசனம், அரசு கட்டில் ; விழைகிறது - விரும்புகிறது; புரவலன் - பாதுகாப்பவன், கொடை அளிப்பவன், அரசன்; இருக்கை - அமரும் இடம்.

### ஆ. சொல்லாட்சித் திறன்:

**கீழ் உள்ள சொற்களை வாக்கியங்களில் அமைத்தெழுதுக.**

| | | |
|---|---|---|
| 1. புகழ்படைத்த | 2. அளவிடற்கு அரியது | 3. நிறைவடைய |
| 4. சிந்திக்க வைத்த | 5. கருணை கூர்ந்து | 6. செய்வதறியாது |

## II. பொருளுணர்திறன் பயிற்சி

### அ. கோடிட்ட இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக.

1. பொன்முடியாரும் அரிசில் கிழாரும் எழுதிய நூல் ................................
2. கபிலருக்குக் கண்ணுக் கெட்டிய நாட்டை எல்லாம் வழங்கச் செல்வக் கடுங்கோ வாழியாதன் ஏறி நின்ற குன்று ............................
3. முரசு கட்டிலில் அறியாது படுத்து உறங்கியவர் ..................................
4. வேண்மாள் அந்துவஞ் செள்ளைக்கு மகன் ..................................

### ஆ பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

5. கபிலருக்கு நூறாயிரம் காணம் (பொன்) வழங்கியவன் ..........................
   அ. பெருஞ்சேரல் இரும்பொறை
   ஆ. செல்வக் கடுங்கோ வாழியாதன்
   இ. இளஞ்சேரல் இரும்பொறை

6. தகடூரில் நடந்த போரை வருணித்துப் பாடியோர் ..........................
   அ. பொன்முடியாரும் கபிலரும்
   ஆ. பொன்முடியாரும் மோசிகீரனாரும்
   இ. பொன்முடியாரும் அரிசில் கிழாரும்

7. அரிசில் கிழாருக்கு இரும்பொறை அளித்த பரிசு ..........................
   அ. நூறு ஆயிரம் காணம்
   ஆ. கண்ணுக்கு எட்டிய நாடெல்லாம்
   இ. அரச செல்வம் அனைத்தும்

8. போர்க் களத்தில் இரவலர்க்குப் பரிசில்களை அள்ளிச் சிதறியவன் ..... .....................
   அ. செல்வக் கடுங்கோ வாழியாதன்
   ஆ. இளஞ்சேரல் இரும்பொறை
   இ. பெருஞ்சேரல் இரும்பொறை

### இ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

9. தகடூர் யாத்திரையால் அறியப்படும் போர்க் கள வருணனையாக அமைச்சர் கூறியது என்ன?
10. கபிலருக்குச் சிறப்புச் செய்தவன் யார்? எவ்வாறு சிறப்புச் செய்தான்?
11. 'அப் புதுமைப் பரிசில் யாதோ?' எனப் புலவர் கேட்ட காரணத்தை எழுதுக.
12. புலவர் அரிசில் கிழார் தம் மனம் நிறைவு பெறும் பரிசிலாகக் கேட்டது என்ன?

ஈ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

13. இரும்பொறையின் பண்பு குறித்து அமைச்சரிடம் அரிசில் கிழார் கூறியவற்றை எழுதுக.
14. இரும்பொறை குறித்து அறிந்ததாகவும் தம் விழைவாகவும் புலவர் அரிசில் கிழார் கூறியவற்றை எழுதுக.
15. புலவர் அரிசில் கிழாருக்கு இரும்பொறை தந்த பரிசு குறித்து எழுதுக.
16. எழுந்த மன்னனை மீண்டும் அரியணையில் அமரச் செய்து, புலவர் அரிசில் கிழார் கூறியது என்ன?

## III. மொழித்திறன் வளர் பயிற்சி

**அ. குறில் நெடில் ஒலித்தல்:**

குறைந்த ஒலியுடைய எழுத்துகள் - குறில்: இ, எ, ந, ம, கு ...
நீண்ட ஒலியுடைய எழுத்துகள் - நெடில்: ஈ, ஏ, நா, மா, கூ ...

கீழ் உள்ள எடுத்துக்காட்டில் உள்ளதுபோல் குறிலை நெடிலாகவும் நெடிலைக் குறிலாகவும் மாற்றிச் சொற்களை எழுதுக.

| | | |
|---|---|---|
| எ-கா: | நாடி - நடி **நெடில்** | படி - பாடி **குறில்** |
| 1. | ----- | ஏறி |
| 2. | கோடு | ----- |
| 3. | ----- | குடி |
| 4. | ----- | மனம் |
| 5. | நாடு | ----- |

**ஆ. கீழ் உள்ள சொற்களின் வேறுபாடு உணர்ந்து தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

6. அரிய - அறிய
7. ஏரி - ஏறி
8. மங்கலம் - மங்களம்
9. அளித்தல் - அழித்தல்
10. புகல் - புகழ்
11. விளைகிறது - விழைகிறது

**இ. எடுத்துக்காட்டில் உள்ளதுபோல் கீழ் உள்ள தொடர்களைப் பிரித்தெழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| எ-கா: | இன்சொல் | = | இனிமை + சொல் |
| 12. | அரும்போர் | = | -------------- |
| 13. | நல்விருந்து | = | -------------- |
| 14. | இன்னுயிர் | = | -------------- |
| 15. | பெருங்கொடை | = | -------------- |
| 16. | செந்நெறி | = | -------------- |

## IV. திறன்வளர் தொடர் பணி

எடுத்துக்காட்டில் உள்ளதுபோல் கீழ் உள்ள தொடர்களைப் பிரித்தும் விரித்தும் எழுதுக.

| | | பிரித்தெழுதுதல் | விரித்தெழுதுதல் |
|---|---|---|---|
| எ.கா : | முத்தமிழ், | மூன்று + தமிழ் | இயல், இசை, நாடகம் |
| 1. | நாற்படை | ------------ | --------------- |
| 2. | நானிலம் | ------------- | --------------- |
| 3. | முக்கனி | ------------ | --------------- |
| 4. | ஐம்பொறி | ------------ | --------------- |

## V. இலக்கணம்

### பெயரெச்சம் - வினையெச்சம்

வந்தான் வந்து வந்த

இம்மூன்று சொற்களையும் படிக்க .

'வந்தான்' என்பது வினை, முற்றுப் பெற்றதை உணர்த்துகிறது. எனவே, அது வினைமுற்று.

'வந்து', 'வந்த' என்பன முற்றுப் பெறாமல் உள்ளன. அவை எச்சங்கள் எனப்படும். அவை வேறு ஏதேனும் ஒரு சொல்லைப் பெற்று முற்றுப் பெறும்.

'வந்து' என்பது 'சென்றான், படித்தான், பார்த்தது' என ஏதேனும் ஒரு வினையைப் பெற்றுப் பொருள் முடிவு பெறும். இவ்வாறு வினையைக் கொண்டு பொருள் முடிவைப் பெறும் எச்சம், வினையெச்சம் எனப்படும்.

**உண்டு** வந்தேன் - இறந்தகால வினையெச்சம்
**உண்ண** வருகிறேன் - நிகழ்கால வினையெச்சம்
**உண்டால்** நல்லது - எதிர்கால வினையெச்சம்

'வந்த' என்பது 'சிறுவன், நாய், பெண்' என ஏதேனும் ஒரு பெயரைக் கொண்டு பொருள் முடிவு பெறும். இவ்வாறு ஒரு பெயரைக் கொண்டு முடியும் எச்சம், பெயரெச்சம் எனப்படும்.

படி**த்த** பாடம் - இறந்தகாலப் பெயரெச்சம்
படி**க்கிற** பாடம் - நிகழ்காலப் பெயரெச்சம்
படி**க்கும்** பாடம் - எதிர்காலப் பெயரெச்சம்

### பயிற்சி

1. பெயரெச்சத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
2. வினையெச்சத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

3. கீழ் உள்ள தொடர்களில் உள்ள எச்சங்களைஎடுத்தெழுதி, அவற்றை வினையெச்சம், பெயரெச்சம் எனப் பிரிக்க.

| | | |
|---|---|---|
| 1. பார்த்துப் படித்தாள் | 2. ஓடிய குதிரை | 3. வரைகிற காட்சி |
| 4. எழுதிக் கொடுத்தான் | 5. நடிக்கும் படம் | 6. பாட வருகிறாள் |

## VI. மொழிப்பயிற்சி

### நிறுத்தல் குறிகள்

ஒரு பகுதியைப் படிக்கும்பொழுது, பொருளைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள உரிய இடங்களில் நிறுத்திப் படிக்கவும், என்ன உணர்ச்சியோடு படிகக வேண்டும் எனக் குறிக்கவும் உதவுவன நிறுத்தல் குறிகள். இன்றியமையாத சில நிறுத்தல் குறிகளைப் பற்றி அறிந்து கொள்வோம்.

1. முற்றுப் புள்ளி ( . )

ஒரு வாக்கியம் முற்றுப் பெற்றதைக் குறிக்க முற்றுப் புள்ளி இட வேண்டும்.
எ-கா: கல்வியால் நாடு முன்னேற்றம் அடையும் .

2. காற் புள்ளி ( , )

பல பொருள்களைத் தொடர்ச்சியாகச் சொல்லும்பொழுது ஒவ்வொன்றின் பின்னும் காற் புள்ளி இடவேண்டும். (இறுதிச் சொல்லுக்குப்பின் தேவையில்லை).
எ-கா: கந்தன் பேனா, பென்சில், குறிப்பேடு ஆகிய அனைத்தையும் எடுத்துச் சென்றான்.

3. அரைப் புள்ளி ( ; )

ஓர் எழுவாய் பல வினை முற்றுகளைக் கொண்டு முடியும்பொழுது, ஒவ்வொரு வினை முற்றுக்குப் பின்னரும் அரைப் புள்ளி இடவேண்டும்.
எ-கா: காந்தியடிகள் விடுதலைக்காக உழைத்தார்; நாட்டு மக்களை ஒற்றுமைப்படுத்தினார்; மக்களின் வறுமையை நீக்கப் பாடுபட்டார்

4. வினாக் குறி ( ? )

ஒரு வினாத் தொடரின் இறுதியில் வினாக் குறி இட வேண்டும்.
எ-கா: உன் பெயர் என்ன?

5. உணர்ச்சிக் குறி ( ! )

ஒரு செய்தியை உணர்ச்சி வெளிப்படும்படி கூறும்பொழுது உணர்ச்சிக் குறி இடவேண்டும்.
எ-கா: இப் பூங்கா எத்துணை அழகானது !

6. ஒற்றை மேற்கோள் குறி ( '....' )

ஓர் எழுத்தையேனும் சொல்லையேனும் சொற்றொடரையேனும் தனியே குறிக்கும் இடத்திலும், ஒரு சொற்றொடரில் நூல் பெயர், பழமொழி முதலியன

வருமிடத்திலும் ஒற்றை மேற்கோள் குறி இடவேண்டும்.

எ-கா : 'எழில்' என்றால் அழகு என்பது பொருள்.
பாரதியாரின் 'பாஞ்சாலி சபதம்' மிகச் சிறந்த நூல்.
'சுத்தம் சோறு போடும்' என்பது நாம் அறிந்த பழமொழி.

7. இரட்டை மேற்கோள் குறி ( " " )

ஒருவர் கூறியதை நேர்க் கூற்றாகக் கூறும்பொழுதும், ஒரு தொடரை மேற்கோளாகக் கூறும்பொழுதும் இரட்டை மேற்கோள் குறி இடவேண்டும்.

எ-கா : "நான் இமய மலைக்குச் சென்றேன்" என்று முருகன் கூறினான்.

"முகநக நட்பது நட்பன்று" என்றார் திருவள்ளுவர்.

### பயிற்சி

**கீழ் உள்ள தொடர்களைப் பொருத்தமான நிறுத்தற் குறியிட்டு எழுதுக.**

1. நீ எப்பொழுது மதுரையிலிருந்து வந்தாய்
2. தஞ்சைக் கோபுரம் எத்துணை உயரமானது
3. அவன் பெட்டி படுக்கை புத்தகக் கட்டு அனைத்தையும் தூக்கிச் சென்றான்
4. வருக வருக என்று மன்னன் புலவரை வரவேற்றான்
5. எறும்பு ஊரக் கல்லும் தேயும் என்பது பழமொழி

## VII.அகராதி காணும் பயிற்சி

**கீழ் உள்ள சொற்களுக்கு அகராதி பார்த்துப் பொருள் எழுதுக.**

| | | |
|---|---|---|
| வரம்பு | அரவம் | எகினம் |
| புனல் | இடர் | பொழில் |
| மல்குதல் | எல் | கமழ்தல் |
| கார் | ஆழி | சிதடன் |

# அறிவுரைக் கதைகள்

## 1. ஏழைக்கு நீதி கிடைத்தது

பூனாவுக்கு அருகே உள்ள கிராமத்தில், பலராம் என்று ஓர் ஏழைச் சிறுவன் வசித்து வந்தான். அவனுக்குத் தந்தை இல்லை; வயதான தாய் மட்டுமே இருந்தாள்.

அறுவடைக் காலத்தில் ஒரு நாள் வழக்கப்படி பலராம் வேலை செய்த பிறகு கஞ்சி குடித்து, களைப்பாறிக் கொள்வதற்காக ஒரு வீட்டுத் திண்ணையில் படுத்துக் கொண்டிருந்தான். அவன் காலடியில் ஒரு சிறு குருவிக்கல் (செம்மண் கட்டி) கிடந்தது. அதை அவன் கையில் எடுத்து, வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று கிராமத் தலைவரின் பணியாள்கள் அங்கு வந்து, அவனைக் கைது செய்தனர். "ஐயா! நான் எந்தக் குற்றமும் செய்யவில்லையே! எதற்காக என்னைக் கைது செய்கிறீர்கள்? " என்று கேட்டான் பலராம்.

"கிராமத் தலைவரைப் பற்றி அவதூறாய் எழுதிவிட்டு, துளியும் பயமில்லாமல், எழுதப் பயன்படுத்திய குருவிக் கல்லையும் கையில் வைத்துக்கொண்டு, அதற்குக் கீழேயே படுத்துக் கொண்டிருக்கிறாயே..! உனக்கு எவ்வளவு தைரியம் இருக்க வேண்டும்?" என்று கூறி அவர்கள், அவனை அடித்தார்கள். அதற்குப் பிறகுதான் பலராம், தான் படுத்துக் கொண்டிருந்த இடத்திலிருந்த சுவரை நிமிர்ந்து நோக்கினான். சுவரில், சற்று உயரத்தில், அந்தக் கிராமத் தலைவரைப் பற்றிச் செம்மண்ணால் அவதூறாக எழுதப்பட்டிருந்தது.

"ஐயா! நீங்கள் கூறிய பிறகுதான் இப்படி எழுதப்பட்டுள்ளதையே நான் கவனிக்கிறேன். இதற்கும் எனக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. நான் இந்தக் குற்றத்தைச் செய்யவும் இல்லை" என்று பலராம் கெஞ்சினான். பணியாள்கள் அவன் கூறியதை ஏற்கவில்லை.

அன்று மாலையே ஊர்ப் பஞ்சாயத்து கூடியது. விளையாட்டாகக் கையில் எடுத்து வைத்துக்கொண்டிருந்த குருவிக் கல், பலராமுக்கு எதிராக வேலை செய்தது. அவன்தான் குற்றவாளி என்று பஞ்சாயத்தார் அனைவரும் கூறிவிட்டனர். ஏழையின் சொல் அம்பலம் ஏறாத காரணத்தால், பலராம் குற்றவாளி யாக்கப்பட்டு, அவனுக்குத் தண்டனையாகப் பத்துக் கசையடிகள் கொடுக்கத் தீர்ப்பு வழங்கப்பட்டது. தண்டனையை நிறைவேற்றப் பலராமைக் காவலாளிகள் இழுத்துக்கொண்டு போனார்கள்.

"இந்த நாட்டில் நீதியே அற்றுவிட்டதா? செல்வாக்கு இல்லாத ஏழை என்பதால், செய்யாத குற்றத்திற்கு இப்படித் தண்டனை கொடுக்கிறார்களே! இதைக் கேட்க நாதியே இல்லையா?" என்று துக்கம் மேலிடப் பலராம் வழியெல்லாம் புலம்பிக்கொண்டே சென்றான்.

பலராமன் அதிர்ஷ்டத்தால், அந்த நேரத்தில் நானா தம் பல்லக்கில் அந்த வழியே வந்து கொண்டிருந்தார். அருகிலுள்ள ஒரு கிராமத்தில் நடைபெற்ற தம் உறவினர் வீட்டுத் திருமணத்திற்குச் சென்றுவிட்டு, நானா பூனாவுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். பலராமின் புலம்பல் அவரது செவிகளைத் தொட்டது. அவர், பல்லக்கை நிறுத்தச் சொல்லி, பலராமையும் காவலாளிகளையும் அருகில் அழைத்து விசாரித்தார். காவலாளிகள், பலராம் செய்த குற்றத்தையும், ஊர்ப் பஞ்சாயத்தாரின் தீர்ப்பையும் விளக்கினார்கள்.

"ஐயா! நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை. உண்மையாகவே அதை நான் எழுதியிருந்தால் அதற்கு அருகிலேயே குருவிக் கல்லைக் கையில் வைத்துக்கொண்டு படுத்துக் கிடப்பேனா?" என்று விசும்பிய பலராமின் குரல், நானாவின் மனத்தைத் தொட்டது.

அதற்குள், நானா வந்திருக்கும் செய்தியறிந்து ஊர்த் தலைவரும், பொதுமக்களும் விரைந்து வந்து, அவரை அழைத்துக்கொண்டு

போனார்கள். அவதூறு எழுதப்பட்டிருந்த சுவரை நானா கவனித்துப் பார்த்தார். மிகவும் அழகான கையெழுத்தில் இருந்த அந்த அவதூறு, சுவரின், மிக உயரத்தில் எழுதப்பட்டிருந்தது. உடனே நானா, இன்னொரு குருவிக் கல்லைக் கொண்டுவரச் சொன்னார். அதைப் பலராமிடம் கொடுத்து, "உன் பெயரை இந்தச் சுவரில் எழுதிக் காட்டு!" என்று பணித்தார்.

பலராம், எவ்வளவு உயரத்திற்குத் தன்னால் எம்ப முடியுமோ அவ்வளவு உயரத்திற்கு எம்பி, தன் பெயரை அந்தச் சுவரில் எழுதினான். கோணல் மாணலான அந்தக் கையெழுத்தைச் சிரித்துக்கொண்டே நோக்கிய நானா, "பலராம், நீ படிக்கிறாயா?" என்று கேட்டார்.

"ஓரளவுக்கே எனக்கு எழுதவும் படிக்கவும் தெரியும். வேலைக்குப் போனால்தான் சாப்பாடு என்று இருக்கும்போது, நான் எப்படிப் படிக்க முடியும், ஐயா?" என்று பலராம் பரிதாபமாகக் கேட்டான் .

"இந்தக் கிராமத்தில் பாடம் சொல்லித் தரும் பள்ளிகள் எத்தனை இருக்கின்றன?" என்று நானா கிராமத் தலைவரிடம் கேட்டார்.

"ஒரே ஒரு பள்ளிக்கூடந்தான் இருக்கிறது. அதுவுங்கூடத் திண்ணைப் பள்ளிக்கூடந்தான்" என்றார் கிராமத் தலைவர்.

"அந்தத் திண்ணைப் பள்ளிக்கூடத்து ஆசிரியர் நானேதான்!" என்று கூட்டத்திலிருந்து வெளியே வந்த பெரியவர் ஒருவர், நானாவை வணங்கினார்.

"உங்களிடம் பாடம் படிக்கும் எல்லா மாணவர்களையும் உடனே வரவழையுங்கள். அவர்களுக்கு நான் ஒரு போட்டி வைக்கவிருக்கிறேன். போட்டியில் கலந்துகொள்ளும் எல்லா மாணவர்களுக்கும் பரிசு உண்டு" என்றார் நானா. உடனே, கிராமப் பஞ்சாயத்து கூடும் மிகப் பெரிய அரச மரத்தடியில் பள்ளிச் சிறுவர்கள் அனைவரும் வந்து கூடினார்கள். பெரியவர்களையெல்லாம் விலகிப் போகுமாறு பணித்த நானா, எல்லாப் பிள்ளைகளும் வந்துவிட்டனரா என்பதை ஆசிரியரிடம் கேட்டு உறுதி செய்து கொண்டு, 'எங்கள் கிராமம் நல்ல கிராமம்' என்று எழுதும்படி எல்லாப் பிள்ளைகளையும் பணித்தார்.

எல்லோரும் மணலில், நானா கூறியதை வேப்பங் குச்சியால் எழுதிக் காட்டினார்கள். ஒவ்வொருவர் எழுதியதையும் பார்த்துக்கொண்டே வந்தார், நானா. பின்னாலேயே வந்த அவர் பணியாள், ஒரு பெரிய கூடையிலிருந்து ஒவ்வொரு மல்கோவா மாம் பழமாக எடுத்து, ஒவ்வொரு சிறுவனுக்கும் கொடுத்துக் கொண்டே வந்தான். ஒரு சிறுவனுக்கு அருகே வந்த நானா, அங்கேயே நின்றார்.

அந்தச் சிறுவனுக்கு ஆறு வயதுதான் இருக்கும். அவன் தன் காதுகளில் கடுக்கன் அணிந்திருந்தான். ஓடோடி அங்கே வந்த ஆசிரியர், "இந்தச் சிறுவன் பெயர், பாண்டு. நம் கணக்குப் பிள்ளையின் பேரன்" என்று சிறுவனைப்பற்றிய தகவல்களைக் கூறிவிட்டு, அவன் மணலில் எழுதி யிருப்பதைப் படித்துவிட்டு, "இருபது பிள்ளைகளில் இவன் ஒருவன்தான் தவறாக எழுத்துப் பிழையோடு எழுதியிருக்கிறான" என்று வருத்தம் தெரிவித்தார்.

நானா சிரித்துக்கொண்டே, "அதனால் வருந்த வேண்டா, பண்டிதரே! இந்த எழுத்துப் பிழைதான் இவனைக் காட்டிக் கொடுத்திருக்கிறது. சுவரில் அவதூறு எழுதிய கை இவனுடைய கையே" என்றார். எல்லாரும் திடுக்கிட்டனர்.

"சுவரில் எழுதப்பட்டுள்ள கையெழுத்து, பள்ளியில் பயிலும் ஒரு மாணவனின் கையெழுத்து என்பதை, கோடு போட்டு அழகாக அதில் எழுதியிருப்பதே தெரிவிக்கிறது. அதோடு, சுவரில் எழுதப்பட்டுள்ளவற்றில் 'கிராமம்' என்னும் சொல்லில் ஓர் எழுத்துப் பிழை காணப்படுகிறது. அதே எழுத்துப் பிழையை இந்தச் சிறுவனும் செய்திருக்கிறான். அதற்காகத்தான் 'எங்கள் கிராமம் நல்ல கிராமம்' என்று, இருமுறை 'கிராமம்' என்னும் சொல் வரும் சொற்றொடரை இவர்களை எழுதும்படி பணித்தேன். சுவரில் எழுதப்பட்டுள்ள எழுத்தின் கொக்கிகள், புள்ளிகள், இணைப்புகள் எல்லாவற்றையும் நோக்குங்கள்" என்று நானா, தம் கண்டுபிடிப்பைக் கூறியதும் எல்லோரும் திகைத்தனர்.

"இந்தச் சிறுவன் பாண்டுவின் உயரத்தையும் அவதூறு எழுதப்பட்டிருக்கும் உயரத்தையும் நோக்கினால், உங்கள் கண்டுபிடிப்பு சரி என்று கருத முடியவில்லையே" என்றார் கிராமத் தலைவர்.

“சரியான சந்தேகந்தான் . இவனால் தனியாக அந்த உயரத்திற்கு எம்பி எழுத முடியாது என்பது உண்மைதான். யாரோ ஒருவர் இவனைத் தம் தோளில் உட்கார வைத்துக் கொண்டு அப்படி எழுதும்படி பணித்திருக்கிறார். அதுவும், கோடு இட்டு, அச்சு எழுத்தில் அழகாய் இவன் எழுதும் அளவுக்கு யாரோ பொறுமையாய் இவனைத் தோளில் சுமந்துகொண்டு நின்றிருந்து இருக்கிறார். பெரும்பாலும் இவனுக்கு மிகவும் நெருக்கமான உறவினர் யாரோதான் இவனைத் தூக்கி வைத்துக்கொண்டு, அப்படி எழுதும்படி பணித்திருக்க வேண்டும். பலராம் கண்டிப்பாக இதைச் செய்திருக்க முடியாது. காரணம் அவன் இந்த அளவுக்கு எழுதப் படிக்கத் தெரியாதவன். அதோடு அவனின் கோணலான கையெழுத்தும், இடக்கைப் பழக்கமும் ‘அவன் இதைச் செய்திருக்கவே முடியாது’ என்பதை உறுதிப்படுத்துகின்றன. பாண்டுவை விசாரியுங்கள்” என்றார் நானா. இதைக் கேட்டுப் பாண்டு அழத் தொடங்கிவிட்டான்.

“ஐயா! எனக்கும் பாண்டுவின் தந்தைக்கும் சற்று மனக் கசப்பு ஏற்பட்டுள்ளது உண்மைதான். அவர் யாருக்கோ சலுகை காட்டினார் என்பதற்காக, மாப்பிள்ளை என்று மன்னிக்காது அவரைக் கண்டித்தேன். அதைக் காரணமாகக்கொண்டு, என் பேரனைக் கொண்டே என்னைப் பற்றி அவதூறு எழுதியிருக்கிறார், என் மாப்பிள்ளை” என்று விரக்தியாகக் கூறிய கிராமத் தலைவர், பேரனுக்கு அருகே வந்தார்.

“தாத்தா! அப்பாதான் என்னைத் தம் தோளில் தூக்கி வைத்துக்கொண்டு அந்தச் சுவரில் குருவிக் கல்லால், தாம் கூறுவதை எழுதும்படி கட்டாயப்படுத்தினார்” என்று விம்மிக்கொண்டே வந்த பாண்டு தன் தாத்தாவின் கால்களைக் கட்டிக்கொண்டான்.

“தெய்வம் மாதிரி வந்து ஏழைக்கு நீதி வழங்கினீர்கள், ஐயா!” என்று நானாவின் கால்களில் விழுந்து வணங்கிப் பலராம் கண்ணீர் விட்டான்.

(பொன்வண்ணன் எழுதிய ‘நானாவின் கதைகள்’ என்னும் நூலிலிருந்து எடுக்கப்பெற்றது)

# அறிவுரைக். கதைகள்

## 1. ஏழைக்கு நீதி கிடைத்தது

பூனாவுக்கு அருகே உள்ள கிராமத்தில், பலராம் என்று ஓர் ஏழைச் சிறுவன் வசித்து வந்தான். அவனுக்குத் தந்தை இல்லை; வயதான தாய் மட்டுமே இருந்தாள்.

அறுவடைக் காலத்தில் ஒரு நாள் வழக்கப்படி பலராம் வேலை செய்த பிறகு கஞ்சி குடித்து, களைப்பாறிக் கொள்வதற்காக ஒரு வீட்டுத் திண்ணையில் படுத்துக் கொண்டிருந்தான். அவன் காலடியில் ஒரு சிறு குருவிக்கல் (செம்மண் கட்டி) கிடந்தது. அதை அவன் கையில் எடுத்து, வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று கிராமத் தலைவரின் பணியாள்கள் அங்கு வந்து, அவனைக் கைது செய்தனர். "ஐயா! நான் எந்தக் குற்றமும் செய்யவில்லையே! எதற்காக என்னைக் கைது செய்கிறீர்கள்? " என்று கேட்டான் பல்ராம்.

"கிராமத் தலைவரைப் பற்றி அவதூறாய் எழுதிவிட்டு, துளியும் பயமில்லாமல், எழுதப் பயன்படுத்திய குருவிக் கல்லையும் கையில் வைத்துக்கொண்டு, அதற்குக் கீழேயே படுத்துக் கொண்டிருக்கிறாயே..! உனக்கு எவ்வளவு தைரியம் இருக்க வேண்டும்?" என்று கூறி அவர்கள், அவனை அடித்தார்கள். அதற்குப் பிறகுதான் பலராம், தான் படுத்துக் கொண்டிருந்த இடத்திலிருந்த சுவரை நிமிர்ந்து நோக்கினான். சுவரில், சற்று உயரத்தில், அந்தக் கிராமத் தலைவரைப் பற்றிச் செம்மண்ணால் அவதூறாக எழுதப்பட்டிருந்தது.

"ஐயா! நீங்கள் கூறிய பிறகுதான் இப்படி எழுதப்பட்டுள்ளதையே நான் கவனிக்கிறேன். இதற்கும் எனக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. நான் இந்தக் குற்றத்தைச் செய்யவும் இல்லை" என்று பலராம் கெஞ்சினான். பணியாள்கள் அவன் கூறியதை ஏற்கவில்லை.

அன்று மாலையே ஊர்ப் பஞ்சாயத்து கூடியது. விளையாட்டாகக் கையில் எடுத்து வைத்துக்கொண்டிருந்த குருவிக் கல், பலராமுக்கு எதிராக வேலை செய்தது. அவன்தான் குற்றவாளி என்று பஞ்சாயத்தார் அனைவரும் கூறிவிட்டனர். ஏழையின் சொல் அம்பலம் ஏறாத காரணத்தால், பலராம் குற்றவாளி யாக்கப்பட்டு, அவனுக்குத் தண்டனையாகப் பத்துக் கசையடிகள் கொடுக்கத் தீர்ப்பு வழங்கப்பட்டது. தண்டனையை நிறைவேற்றப் பலராமைக் காவலாளிகள் இழுத்துக்கொண்டு போனார்கள்.

"இந்த நாட்டில் நீதியே அற்றுவிட்டதா? செல்வாக்கு இல்லாத ஏழை என்பதால், செய்யாத குற்றத்திற்கு இப்படித் தண்டனை கொடுக்கிறார்களே! இதைக் கேட்க நாதியே இல்லையா?" என்று துக்கம் மேலிடப் பலராம் வழியெல்லாம் புலம்பிக்கொண்டே சென்றான்.

பலராமன் அதிர்ஷ்டத்தால், அந்த நேரத்தில் நானா தம் பல்லக்கில் அந்த வழியே வந்து கொண்டிருந்தார். அருகிலுள்ள ஒரு கிராமத்தில் நடைபெற்ற தம் உறவினர் வீட்டுத் திருமணத்திற்குச் சென்றுவிட்டு, நானா பூனாவுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். பலராமின் புலம்பல் அவரது செவிகளைத் தொட்டது. அவர், பல்லக்கை நிறுத்தச் சொல்லி, பலராமையும் காவலாளிகளையும் அருகில் அழைத்து விசாரித்தார். காவலாளிகள், பலராம் செய்த குற்றத்தையும், ஊர்ப் பஞ்சாயத்தாரின் தீர்ப்பையும் விளக்கினார்கள்.

"ஐயா! நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை. உண்மையாகவே அதை நான் எழுதியிருந்தால் அதற்கு அருகிலேயே குருவிக் கல்லைக் கையில் வைத்துக்கொண்டு படுத்துக் கிடப்பேனா?" என்று விசும்பிய பலராமின் குரல், நானாவின் மனத்தைத் தொட்டது.

அதற்குள், நானா வந்திருக்கும் செய்தியறிந்து ஊர்த் தலைவரும், பொதுமக்களும் விரைந்து வந்து, அவரை அழைத்துக்கொண்டு

போனார்கள். அவதூறு எழுதப்பட்டிருந்த சுவரை நானா கவனித்துப் பார்த்தார். மிகவும் அழகான கையெழுத்தில் இருந்த அந்த அவதூறு, சுவரின், மிக உயரத்தில் எழுதப்பட்டிருந்தது. உடனே நானா, இன்னொரு குருவிக் கல்லைக் கொண்டுவரச் சொன்னார். அதைப் பலராமிடம் கொடுத்து, "உன் பெயரை இந்தச் சுவரில் எழுதிக் காட்டு!" என்று பணித்தார்.

பலராம், எவ்வளவு உயரத்திற்குத் தன்னால் எம்ப முடியுமோ அவ்வளவு உயரத்திற்கு எம்பி, தன் பெயரை அந்தச் சுவரில் எழுதினான். கோணல் மாணலான அந்தக் கையெழுத்தைச் சிரித்துக்கொண்டே நோக்கிய நானா, "பலராம், நீ படிக்கிறாயா?" என்று கேட்டார்.

"ஓரளவுக்கே எனக்கு எழுதவும் படிக்கவும் தெரியும். வேலைக்குப் போனால்தான் சாப்பாடு என்று இருக்கும்போது, நான் எப்படிப் படிக்க முடியும், ஐயா?" என்று பலராம் பரிதாபமாகக் கேட்டான் .

"இந்தக் கிராமத்தில் பாடம் சொல்லித் தரும் பள்ளிகள் எத்தனை இருக்கின்றன?" என்று நானா கிராமத் தலைவரிடம் கேட்டார்.

"ஒரே ஒரு பள்ளிக்கூடந்தான் இருக்கிறது. அதுவுங்கூடத் திண்ணைப் பள்ளிக்கூடந்தான்" என்றார் கிராமத் தலைவர்.

"அந்தத் திண்ணைப் பள்ளிக்கூடத்து ஆசிரியர் நானேதான்!" என்று கூட்டத்திலிருந்து வெளியே வந்த பெரியவர் ஒருவர், நானாவை வணங்கினார்.

"உங்களிடம் பாடம் படிக்கும் எல்லா மாணவர்களையும் உடனே வரவழையுங்கள். அவர்களுக்கு நான் ஒரு போட்டி வைக்கவிருக்கிறேன். போட்டியில் கலந்துகொள்ளும் எல்லா மாணவர்களுக்கும் பரிசு உண்டு" என்றார் நானா. உடனே, கிராமப் பஞ்சாயத்து கூடும் மிகப் பெரிய அரச மரத்தடியில் பள்ளிச் சிறுவர்கள் அனைவரும் வந்து கூடினார்கள். பெரியவர்களையெல்லாம் விலகிப் போகுமாறு பணித்த நானா, எல்லாப் பிள்ளைகளும் வந்துவிட்டனரா என்பதை ஆசிரியரிடம் கேட்டு உறுதி செய்து கொண்டு, 'எங்கள் கிராமம் நல்ல கிராமம்' என்று எழுதும்படி எல்லாப் பிள்ளைகளையும் பணித்தார்.

எல்லோரும் மணலில், நானா கூறியதை வேப்பங் குச்சியால் எழுதிக் காட்டினார்கள். ஒவ்வொருவர் எழுதியதையும் பார்த்துக்கொண்டே வந்தார், நானா. பின்னாலேயே வந்த அவர் பணியாள், ஒரு பெரிய கூடையிலிருந்து ஒவ்வொரு மல்கோவா மாம் பழமாக எடுத்து, ஒவ்வொரு சிறுவனுக்கும் கொடுத்துக் கொண்டே வந்தான். ஒரு சிறுவனுக்கு அருகே வந்த நானா, அங்கேயே நின்றார்.

அந்தச் சிறுவனுக்கு ஆறு வயதுதான் இருக்கும். அவன் தன் காதுகளில் கடுக்கன் அணிந்திருந்தான். ஓடோடி அங்கே வந்த ஆசிரியர், "இந்தச் சிறுவன் பெயர், பாண்டு. நம் கணக்குப் பிள்ளையின் பேரன்" என்று சிறுவனைப்பற்றிய தகவல்களைக் கூறிவிட்டு, அவன் மணலில் எழுதி யிருப்பதைப் படித்துவிட்டு, "இருபது பிள்ளைகளில் இவன் ஒருவன்தான் தவறாக எழுத்துப் பிழையோடு எழுதியிருக்கிறான" என்று வருத்தம் தெரிவித்தார்.

நானா சிரித்துக்கொண்டே, "அதனால் வருந்த வேண்டா, பண்டிதரே! இந்த எழுத்துப் பிழைதான் இவனைக் காட்டிக் கொடுத்திருக்கிறது. சுவரில் அவதூறு எழுதிய கை இவனுடைய கையே" என்றார். எல்லாரும் திடுக்கிட்டனர்.

"சுவரில் எழுதப்பட்டுள்ள கையெழுத்து, பள்ளியில் பயிலும் ஒரு மாணவனின் கையெழுத்து என்பதை, கோடு போட்டு அழகாக அதில் எழுதியிருப்பதே தெரிவிக்கிறது. அதோடு, சுவரில் எழுதப்பட்டுள்ளவற்றில் 'கிராமம்' என்னும் சொல்லில் ஓர் எழுத்துப் பிழை காணப்படுகிறது. அதே எழுத்துப் பிழையை இந்தச் சிறுவனும் செய்திருக்கிறான். அதற்காகத்தான் 'எங்கள் கிராமம் நல்ல கிராமம்' என்று, இருமுறை 'கிராமம்' என்னும் சொல் வரும் சொற்றொடரை இவர்களை எழுதும்படி பணித்தேன். சுவரில் எழுதப்பட்டுள்ள எழுத்தின் கொக்கிகள், புள்ளிகள், இணைப்புகள் எல்லாவற்றையும் நோக்குங்கள்" என்று நானா, தம் கண்டுபிடிப்பைக் கூறியதும் எல்லோரும் திகைத்தனர்.

"இந்தச் சிறுவன் பாண்டுவின் உயரத்தையும் அவதூறு எழுதப்பட்டிருக்கும் உயரத்தையும் நோக்கினால், உங்கள் கண்டுபிடிப்பு சரி என்று கருத முடியவில்லையே" என்றார் கிராமத் தலைவர்.

“சரியான சந்தேகந்தான் . இவனால் தனியாக அந்த உயரத்திற்கு எம்பி எழுத முடியாது என்பது உண்மைதான். யாரோ ஒருவர் இவனைத் தம் தோளில் உட்கார வைத்துக் கொண்டு அப்படி எழுதும்படி பணித்திருக்கிறார். அதுவும், கோடு இட்டு, அச்சு எழுத்தில் அழகாய் இவன் எழுதும் அளவுக்கு யாரோ பொறுமையாய் இவனைத் தோளில் சுமந்துகொண்டு நின்றிருந்து இருக்கிறார். பெரும்பாலும் இவனுக்கு மிகவும் நெருக்கமான உறவினர் யாரோதான் இவனைத் தூக்கி வைத்துக்கொண்டு, அப்படி எழுதும்படி பணித்திருக்க வேண்டும். பலராம் கண்டிப்பாக இதைச் செய்திருக்க முடியாது. காரணம் அவன் இந்த அளவுக்கு எழுதப் படிக்கத் தெரியாதவன். அதோடு அவனின் கோணலான கையெழுத்தும், இடக்கைப் பழக்கமும் ‘அவன் இதைச் செய்திருக்கவே முடியாது’ என்பதை உறுதிப்படுத்துகின்றன. பாண்டுவை விசாரியுங்கள்” என்றார் நானா. இதைக் கேட்டுப் பாண்டு அழத் தொடங்கிவிட்டான்.

“ஐயா! எனக்கும் பாண்டுவின் தந்தைக்கும் சற்று மனக் கசப்பு ஏற்பட்டுள்ளது உண்மைதான். அவர் யாருக்கோ சலுகை காட்டினார் என்பதற்காக, மாப்பிள்ளை என்று மன்னிக்காது அவரைக் கண்டித்தேன். அதைக் காரணமாகக்கொண்டு, என் பேரனைக் கொண்டே என்னைப் பற்றி அவதூறு எழுதியிருக்கிறார், என் மாப்பிள்ளை” என்று விரக்தியாகக் கூறிய கிராமத் தலைவர், பேரனுக்கு அருகே வந்தார்.

“தாத்தா! அப்பாதான் என்னைத் தம் தோளில் தூக்கி வைத்துக்கொண்டு அந்தச் சுவரில் குருவிக் கல்லால், தாம் கூறுவதை எழுதும்படி கட்டாயப்படுத்தினார்” என்று விம்மிக்கொண்டே வந்த பாண்டு தன் தாத்தாவின் கால்களைக் கட்டிக்கொண்டான்.

“தெய்வம் மாதிரி வந்து ஏழைக்கு நீதி வழங்கினீர்கள், ஐயா!” என்று நானாவின் கால்களில் விழுந்து வணங்கிப் பலராம் கண்ணீர் விட்டான்.

(பொன்வண்ணன் எழுதிய ‘நானாவின் கதைகள்’ என்னும் நூலிலிருந்து எடுக்கப்பெற்றது)

# 2. நான் செலவு செய்த விதம்

ஒரு நாள் காலையில் அரசர் தம் நாட்டைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டார். வழி இடையே, வயல் வெளியில் உழவன் ஒருவன் மகிழ்ச்சியோடு பாடியவாறு தன் வேலையில் ஈடுபட்டிருப்பதைக் கண்டார். உழவனின் மகிழ்ச்சிக்கு உரிய காரணத்தைத் தெரிந்துகொள்ள அரசர் விரும்பினார். எனவே உழவனிடம், "நீ ஒரு நாளில் எவ்வளவு சம்பாதிக்கிறாய்?" என்று கேட்டார்.

"அரசே! ஒரு நாளில் நான் நான்கு பணம் சம்பாதிக்கிறேன்"

"அதை நீ எப்படிச் செலவு செய்கிறாய்?"

"ஒரு பணத்தில் சாப்பிடுகிறேன். ஒரு பணத்தைக் கடனாகக் கொடுக்கிறேன். இன்னொரு பணத்தால் கடனை அடைக்கிறேன். மற்றொரு பணத்தை எப் பயனும் கருதாமல் பிறருக்குக் கொடுக்கிறேன்"

"உன் புதிர்ப் பேச்சு எனக்குப் புரியவில்லை. விளக்கமாகச் சொல்!"

"மன்னர் பெருமானே! ஒரு பணத்தை நானும் என் மனைவியும், உண்ணவும் உடுக்கவும் செலவு செய்கிறேன். ஒரு பணத்தைப் பிற்காலத்தில் என்னையும் என் மனைவியையும் பாதுகாக்கக்கூடிய என் பிள்ளைகளுக்குச் செலவு செய்கிறேன்."

"மூன்றாவது பணத்தால் என்ன கடனை அடைக்கிறாய்?"

“அதைக் கொண்டு என் பெற்றோருக்கு உணவு அளித்துப் பாதுகாக்கிறேன். அரசே! என்னைப் பிள்ளைப் பருவத்தில் பேணிப் பாதுகாத்து வளர்க்க அவர்கள் என்ன பாடுபட்டிருப்பார்கள்? அதை ஈடு செய்யும் வகையில் நான் செயல்படா விட்டால், நன்றி கொன்றவன் ஆகிவிட மாட்டேனா? அவர்கள் எனக்கு எவ்வளவு செலவு செய்திருப்பார்கள்? அந்த அளவுக்கு நானும் செலவு செய்து அவர்களைக் காப்பாற்ற வேண்டாமா? ஆகவே, என் பெற்றோரைப் பாதுகாக்கச் செய்யும் செலவைத்தான் ‘கடனை அடைக்கிறேன்’ என்று சொன்னேன்.”

“நீ சொல்வது முற்றிலும் உண்மை! நான்காவது பணத்தை யாருக்குக் கொடுக்கிறாய்? எதற்குச் செலவு செய்கிறாய் என்பதை அறிந்துகொள்ள நான் ஆவலோடு இருக்கிறேன்” என்றார் அரசர்.

“மன்னவ! நான்காவது பணத்தை ஆதரவு இல்லாதவர்களுக்கு உதவுவதற்காகக் கருணையோடு செலவு செய்கிறேன். அவர்களிடத்தில் என்ன பயனை எதிர்பார்க்க முடியும்?”

“உன் விவேகத்தை நான் பாராட்டுகிறேன். நீ எனக்காக ஒரு காரியம் செய்ய வேண்டும்”

“என்ன செய்ய வேண்டும், சொல்லுங்கள்..... அரசே”

“நான் சொல்வதைக் கேட்டு, அதன்படி நீ நடந்தால் உனக்கு நான் சன்மானமாக நூறு பொற் காசுகள் தருவேன்”

“அரசே! தாங்கள் ஆணை இட்டால், அதை நிறைவேற்ற வேண்டிய கடமை எனக்கு உண்டு. தங்கள் சொற்படி நடந்தால் நூறு பொற் காசுகளைச் சன்மானமாகத் தருவதாக வேறு கூறுகிறீர்கள். கரும்பு தின்னக் கூலி கொடுத்தால் யார்தான் வேண்டாம் என்பார்கள்? நான் என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள்”

“என் முகத்தை நூறுதடவை பார்க்கின்ற வரையில் இப்போது என்னிடம் கூறிய புதிர்ச் செய்தியைப் பற்றி யாரிடமும், உன் மனைவி, மக்கள், பெற்றோர், உற்றார், உறவினரிடமும்கூடப் பேசக்கூடாது. மீறிப்

பேசினால், நான் உன்னைக் கடுமையாகத் தண்டிக்க நேரிடும். உன் சம்பாத்தியமும் செலவும் குறித்த புதிரான பேச்சையும் அதன் விளக்கத்தையும் யாரிடமும் கூறாமல், ரகசியமாகக் கருதிப் பாதுகாப்பேன் என்று எனக்குச் சத்தியம் செய்து கொடு'' என்று அரசர் கேட்டார்.

''அரசே! உங்கள் விருப்பப்படியே சத்தியம் செய்கிறேன். நிச்சயமாக ரகசியத்தைப் பாதுகாப்பேன்'' என்று விவசாயி உறுதி அளித்தான்.

''சத்தியத்தைக் காக்கத் தவறினால் கடுமையான தண்டனைக்கு ஆளாவாய் என்பதை நன்றாக நினைவில் வைத்துக்கொள். அதுமட்டு மில்லை, நீயாக வலிய என்னைத் தேடிவந்து பார்க்கக் கூடாது. தற்செயலாக மட்டுமே பார்க்க வேண்டும். நூறுமுறை பார்த்த பிறகே இச் செய்திபற்றிப் பேச வேண்டும் தெரிந்ததா?'' என்றார் அரசர்.

அரண்மனை திரும்பிய அரசர் அவையைக் கூட்டினார். ''அமைச்சர்களே! அவையில் உள்ளவர்களே! நான் கூறும் செய்தியைக் கவனமாகக் கேளுங்கள். நான்கு பணம் சம்பாதிக்கும் ஒருவன், அந்த நான்கு பணத்தில் ஒரு பணத்தைத் தனக்காகச் செலவு செய்கிறான். ஒரு பணத்தைக் கடனாகக் கொடுக்கிறான். ஒரு பணத்தால் கடனை அடைக்கிறான். ஒரு பணத்தைப் பயன் கருதாச் செலவுக்கு அளிக்கிறான். இந்தச் செய்தி ஏதோ புதிர்போல் இருக்கிறது அல்லவா? உண்மையில் இது ஒரு புதிர்தான். இந்தப் புதிரின் உள்ளடக்கத்தை உங்களில் யார் வேண்டுமானாலும் விடுவிக்கலாம்! இதற்கு ஒரு நாள் கால அவகாசம் கொடுக்கிறேன். புதிரை விடுவிப்பவருக்கு நூறு பொற்காசுகள் பரிசாகக் கொடுக்கப்படும்'' என்று அரசர் கூறினார்.

புதிருக்குரிய விடை தெரியாமல் அமைச்சர்களும் மற்றவர்களும் விழித்தார்கள். அந்த அமைச்சர்களுள், உழவன் ஒருவனிடம் அரசர் பேசிக்கொண்டிருந்ததைக் கவனித்த அமைச்சர் ஒருவர் மட்டும், விரைவாக அந்த உழவனைத் தேடிப் புறப்பட்டார். அந்த உழவனை நெருங்கிச் சென்று, தம்மை அறிமுகம் செய்துகொண்ட அமைச்சர், ''நீ அரசரிடம் சொன்ன புதிருக்கு உரிய விடையை, நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்'' என்றார். உழவன் வாயைத் திறக்காமல் நின்றிருந்தான்.

உழவனின் மௌனத்தைக் கலைக்க "இங்கே நீயும் நானும் மட்டும்தானே இருக்கிறோம்! நான் யாரிடமும் நீ சொன்னதைப் பற்றிக் கூறமாட்டேன், கவலைப்படாதே! நான் அந்தப் புதிரை விடுவித்தால், அரசர் என்னைப் பாராட்டுவார். அரச சபையில் என் மதிப்பு உயரும். தயவு செய்து சொல்லிவிடு'' என்றார் அமைச்சர்.

"அமைச்சரே, உமக்குப் பாராட்டுக் கிடைக்கும்! அரசருக்குத் தெரிந்தால் எனக்குக் கடுமையான தண்டனை கிடைக்கும்.''

"அப்படியானால் எப்போதுதான் நீ புதிருக்கு உரிய பதிலை வெளியில் கூறுவாய்?'' என்று கேட்டார் அமைச்சர்.

உழவன் இருதலைக் கொள்ளி எறும்பாகத் தடுமாறினான். பின்னர், "அமைச்சரே! நான் அரசரின் முகத்தை நூறு தடவை தற்செயலாகப் பார்ப்பதற்குமுன் அதைப் பற்றி எவரிடமும் பேசமாட்டேன் என்று அரசரிடமே சத்தியம் செய்துள்ளேன். செய்த சத்தியத்தைக் காப்பாற்ற வேண்டியது நல்ல குடியானவனின் கடமை அல்லவா? என்னை மன்னித்து விடுங்கள்'' என்றான்.

அமைச்சர் விடுவதாக இல்லை. அமைச்சர் மூளையில் சிறு பொறி தட்டியது. அமைச்சர் அல்லரோ? கிடைத்த இழையைப் பிடித்துக் கொண்டு ஏற ஆரம்பித்தார். அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பதைத் தெளிவாக உணர்ந்தவர் அமைச்சர். முயன்றால் முடியாதது உண்டா? அமைச்சர் புதிய முயற்சியை மேற்கொண்டார். 'புதிரை விடுவித்தால் அரசர் நூறு பொற் காசுகளைப் பரிசாகத் தருவார். இந்த முயற்சியில் நமக்கு எதுவும் இழப்பு இல்லை! ' என்று அமைச்சர் முடிவு செய்தார்.

உழவனை நோக்கி, "நீ அரசரின் முகத்தை நூறு தடவை தற்செயலாகப் பார்த்துவிட்டால் புதிர்ச் செய்தியைக் கூறிவிடுவாய் அல்லவா?'' என்றார்.

"அமைச்சரே, அதில் என்ன சந்தேகம்! நூறு தடவை தற்செயலாக அரசரின் முகத்தைப் பார்த்துவிட்டால் கூறிவிடலாமே! அரசரிடம் செய்த சத்தியமும் அதுதானே.''

"நான் இப்போதே ஏற்பாடு செய்கிறேன். அரசரின் முகம் பொறித்த நூறு பொற் காசுகளை நான் உனக்குத் தருகிறேன். அவற்றை ஒவ்வொன்றாக எண்ணினால், அரசரின் முகத்தை நூறு முறை பார்த்ததாகி விடும். அதன் பிறகு அந்தப் புதிருக்கு உரிய விடையை என்னிடம் சொல்லலாம் அல்லவா?" என்று கூறி, அரசரின் முகம் பொறித்த நூறு பொற் காசுகளை அமைச்சர் கொடுத்தார். அவற்றை எண்ணி முடித்த குடியானவன் புதிருக்குரிய விடையை விளக்கினான். அமைச்சர் மகிழ்ச்சியோடு தம் இருப்பிடம் திரும்பினார்.

மறுநாள் அரச சபை கூடியது. அமைச்சர் எழுந்து புதிரை விடுவித்தார். ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைந்த அரசர், ஒருவாறு காரணத்தை ஊகித்துச் சினங்கொண்டார். உழவன் சத்தியம் தவறிவிட்டதாக எண்ணி அவனை இழுத்துவரச் செய்தார். அரசர் முன்நின்ற உழவன், "வேந்தே! நான் செய்த சத்தியத்தை இறுதிவரை காப்பாற்றியுள்ளேன். தவறிவிடவில்லை. அமைச்சர் எனக்கு அளித்த நூறு பொற் காசுகளில் தங்களின் முகத்தை நூறு தடவை தற்செயலாகத் தரிசித்தேன். அதன்பிறகே அமைச்சரிடம் புதிருக்குரிய விளக்கத்தைக் கூறினேன். இதோ, அமைச்சர் எனக்கு அளித்த நூறு பொற் காசுகள்" என்று கூறினான்.

"ஓ! அப்படியா செய்தி? நீ புத்திசாலி மட்டும் அல்லன்; தெளிவானவனும் கூட! அவற்றை நீயே வைத்துக்கொள். நான் உன் புத்திசாலித் தனத்திற்காக நூறு பொற் காசுகள் தருகிறேன். கொடுத்த வாக்கை மீறாமைக்காக மேலும் நூறு பொற் காசுகளை வெகுமதியாக அளிக்கிறேன்" என்று அரசர் கூறினார்.

"மன்னர் பெருமானே! நான் தங்களுக்குப் பெரிதும் நன்றியுடையவன் ஆவேன்! தங்களால் எனக்கு முந்நூறு பொற் காசுகள் கிடைத்துள்ளன. என்னுடைய மனைவி, மக்கள், பெற்றோரை எல்லாம் நன்றாகக் காப்பாற்றுவேன். மேலும் அதிகமாக ஏழைகளுக்கு உதவி செய்வேன். அதனால் தங்கள் பேரன்புக்கு அவர்கள் பெரிதும் நன்றி செலுத்துவார்கள்" என்று கூறிவிட்டு, உழவன் மகிழ்ச்சியுடன் அரச சபையிலிருந்து அரசர் முதலிய அனைவரையும் வணங்கிவிட்டு வெளியேறினான். (பாடநூல் குழுவினரால் எழுதப்பெற்றது)

# 3. உலகைக் காப்போம்

கணிப்பொறியை இயக்கிக் கொண்டிருந்தான் பிரபு. அருகில் அவனது செல்ல நாய் ஜிம்மி இருந்தது. திடீரெனப் பிரபுவை எதிர்காலத்துக்கு அழைத்துச் சென்றது கணிப்பொறி.

அங்கே அவன் நடக்கத் தொடங்கினான். அவன் செல்லும் வழியில் எல்லாம் பாலைவனமும் புகையும் தூசுமாய் இருந்தன. இவையெல்லாம் அவனுக்குப் பயத்தை ஏற்படுத்தின. அங்கே ஒரு பெரிய மலைக்குகை இருந்தது. அதனுள் சென்றான் பிரபு. மற்றொரு பக்கத்தின் வழியே அவன் வெளியே வந்தபோது, எதிரே ஒரு பெரிய சிலை காணப்பட்டது. அதன் வாய் திறந்து நாக்கு மட்டும் வெளியே தள்ளிக் கொண்டிருந்தது.

அந்த மலைக்கும் சிலைக்கும் இடையே உள்ள நடைபாதையே அந்த நாக்குதான். பிரபுவும் அவனது செல்ல நாய் ஜிம்மியும் நடந்து மலைக்குச் சென்றனர். அங்கே அபூர்வத் தோற்றம் கொண்ட மனிதர்கள் இருந்தனர். பார்ப்பதற்கு மிகவும் பயங்கரமாய்க் காணப்பட்டனர். ஒரு மனிதனுக்கு ஒரு கண் மட்டும் இருந்தது. மற்றொரு மனிதனுக்கு மூன்று கைகள் இருந்தன. அங்கு நின்ற ஒரு மனிதனிடம் " இது எந்த ஆண்டு?" என்று கேட்டான் பிரபு.

அதற்கு அவன் " கி. பி. 2500" என்று பதில் சொன்னான். "நீ எந்தக் காலத்தைச் சேர்ந்தவன்?" என்று பிரபுவிடம் அந்த மனிதன் கேட்டான்.

"நான் கி. பி. 2003 ஆம் ஆண்டைச் சேர்ந்தவன்" என்று பதில்

அளித்த பிரபு, "ஏன் உங்களுக்கு இப்படி ஆயிற்று?" என்று கேட்டான்.

அந்த விசித்திர மனிதன் கூறிய பதில் பிரபுவைத் திடுக்கிடச் செய்தது. "மக்கள் பிளாஸ்டிக் பொருள்களை மிகுதியாகப் பயன்படுத்தினர். அளவுக்கு அதிகமாக மரங்களை வெட்டி மண் அரிப்புக்குக் காரணமாயினர். கணக்கற்ற வாகனங்களாலும், தொழிற்சாலைகளாலும் ஏற்பட்ட மாசு கலந்த புகை, மக்களை மட்டுமல்லாமல், வளி மண்டலத்தையும் அதிகம் பாதித்தது. இதன் காரணமாக ஓசோன் மண்டலமே அழிந்து போய் விட்டது"

இதனைக் கேட்ட பிரபு, "ஓசோன் மண்டலமா? அது என்ன?" என்று கேட்டான்.

"அதுவா? சொல்லுகிறேன்; கேள்" என்று அந்த மனிதன் தொடர்ந்து கூறத் தொடங்கினான். "ஓசோன் படுகை ஒரு மெல்லிய வாயு படுகையாகும். பூமியின் மீது நமது தலைக்கு மேலே 12 முதல் 45 கி.மீ உயரத்திற்கு, நமது பூமிக் கோளத்தைச் சூழ்ந்து ஓசோன் படுகை அமைந்துள்ளது. சூரியனிலிருந்து வெளிப்படும் புற ஊதாக் கதிர் போன்றவை உலகில் வாழும் மனிதர், விலங்குகள், தாவரங்கள் முதலிய அனைத்து உயிரினங்களுக்கும் மிகவும் தீங்கு விளைவிக்கக் கூடியனவாகும். இக் கொடிய புற ஊதாக் கதிர் போன்றவை, பூமியை அடையாமல் தடுக்கும் தடுப்புச் சுவராக வானில் அமைந்திருப்பது ஓசோன் படுகையே."

"ஓசோன் படுகை அழிந்ததால் மட்டுமா நீங்கள் எல்லாரும் இப்படி மாறினீர்கள்?" என்று பிரபு கேட்டான்.

"அது மட்டும் இல்லை. 21,22 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த மனிதர்கள் அறிவியல் துறையில் மிகவும் முன்னேறி இருந்தார்கள். அவர்களின் கண்டு பிடிப்புகளும் அறிவும் உலகிற்கு நன்மையோடு சில தீய விளைவுகளையும் ஏற்படுத்தின. அந்தக் கால விஞ்ஞானிகள் அறிவியல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திப் பல அணு ஆயுதங்களையும், கண்டம் விட்டுக் கண்டம் பாயும்

ஏவு கணைகளையும் கண்டறிந்தார்கள். அவற்றைத் தங்கள் எதிரி நாடுகளின்மீது செலுத்தி உலகம் அழியக் காரணமானார்கள். அதனால் அணுக் கதிர்வீச்சு மக்களையும் பிற உயிரினங்களையும் பல்வேறு குறைபாடுகளுக்கு உள்ளாக்கியது. அணுக் கதிர்வீச்சாலும் சூரியப் புற ஊதாக்கதிர்களின் பாதிப்பாலும் பயிர்கள் அழிந்தன. இயற்கை முழுமையாகப் பாதிப்படைந்தது. மண்ணின் வளம் குறைந்தது. கடல் நீர் முழுமையும் ஆவியாயிற்று. பூமியில் நில நடுக்கமும் எரிமலை வெடிப்பும் அதிக அளவில் ஏற்பட்டன.''

இவ்வாறு அந்த அதிசய மனிதன் கூறியவற்றைப் பயத்துடன் கேட்டுக் கொண்டிருந்தான் பிரபு. அப்போது அங்கிருந்த சிலை சிறிது சிறிதாக இடிந்து விழத் தொடங்கியது.

திடீரெனப் பிரபு அலறினான். கண் விழித்துப் பார்த்தபோதுதான் அவனுக்குப் புரிந்தது, ' நடந்தது எல்லாம் கனவு' என்று! அருகே ஜிம்மி ஆழ்ந்த நித்திரையில் இருந்தது.

அதே நேரத்தில் பிரபு ஒரு சிறந்த முடிவை எடுத்தான். 'என்னால் முடிந்த அளவுக்குச் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பேன்' என்பதே அது. அம் முடிவைக் கடைப்பிடிக்குமாறு தன் நண்பர்களையும் ஊர் மக்களையும் வற்புறுத்தவும் செய்தான்.

(9.9.2003 அன்று 'தினமணி' - 'சிறுவர் மணி'யில் வெளியான கதை. 10 ஆம் வகுப்பில் பயிலும் சிறுவன் ச.பிரபு வெங்கடேஷ் எழுதியது. அமெரிக்காவின் கலிபோர்னியா தமிழ் அகாதெமி வழங்கும் முதல் பரிசு பெற்றது).

# 4. மாறியது நெஞ்சம்

சென்னைக்கு அருகில் சுமார் பதினெட்டுக் கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது பம்மல். அ மை ம தி ய ா ன சூ ழ லு ம் காற்றோட்டமும் வேண்டி, பம்மல் பகுதியில் குடியேறியவர்களுள் சிங்காரமும் ஒருவர். அவருக்கும் அவர் மனைவி அகிலாவிற்கும் நாட்டு நடப்பு நன்றாகத் தெரியும். ஒரே குழந்தையோடு இருவரும் இன்பமுடன் வாழ்ந்து வந்தனர். சிங்காரம் படித்த நூல்களுள் அவரை மிகவும் கவர்ந்த நூல் சிலப்பதிகாரம். அந்நூலை எழுதிய இளங்கோவடிகளின் பெயரையே தம் ஒரே மகனுக்குச் சூட்டினார்

மழலை மாறாத குழந்தையாய் இருந்தாலும் கற்றவர்களின் மனத்தைத் தொடும் அளவிற்குப் பணிவும் பேச்சும் அவனிடத்தில் நிறைந்து காணப்பட்டன. தந்தையைத் தேடி யாராவது வீட்டிற்கு வந்தால், அவர்களைத் தனது கைகளைத் தாமரை மொட்டுப்போல் குவித்து வணக்கம் சொல்லி உள்ளே அழைத்து அமரச் செய்வான்.

ஒரு நாள், இளங்கோ அக்கம் பக்கத்து வீட்டுக் குழந்தைகளோடு ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது, சாலையைக் கடந்து ஓடிய சிறுவனைப் பிடிக்கப் போனபோது, வேகமாக வந்த லாரியில் அடிபட்டுக் கீழே விழுந்தான்.

மது அருந்திவிட்டு லாரியை ஓட்டி வந்தவன், வேகமாக லாரியை ஓட்டிச் சென்று விட்டான். இளங்கோவோடு விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் ஓடிவந்து செய்தியைச் சொன்னார்கள். பதறி அடித்துக் கொண்டு ஓடினாள், அவன் தாய் அகிலா.

இளங்கோவுக்குக் காலில் இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. பெரியவர் ஒருவர் தமது ஆடையைக் கிழித்து இளங்கோவிற்குக் கட்டு போட்டு முதலுதவி செய்தார். முதலுதவி செய்து ஆறுதல் கூறிய

பெரியவருக்கு அகிலா நன்றி சொன்னாள். மருத்துவ மனைக்கு இளங்கோவை அழைத்துச் செல்ல வாகனம் தேடிச் சாலைக்கு ஓடி வந்தாள். கண்ணுக்கு எட்டிய தூரம்வரை ஒரு சைக்கிள் ரிக்ஷாவைக்கூடக் காண முடியவில்லை.

பேருந்தில்தான் போக வேண்டும் என்ற நிலைக்கு ஆளானாள் அகிலா. நிழற்குடையின் கீழாக இருந்த சிமெண்ட் இருக்கையில் மகனை உட்கார வைத்தாள். பேருந்து வரும் திசையை நோக்கிப் பார்வையைச் செலுத்தினாள். ஒரு சில நிமிடங்களில் ஓரளவு கூட்டத்தோடு ஒரு பேருந்து வந்தது. முந்தியடித்து எல்லாரும் ஏறினார்கள்.

"ஏம்மா, நீ இப்படி எல்லாருக்கும் வழி விட்டுட்டு நின்னுக்கிட்டிருந்தா அவ்வளவுதான்...! நீங்க புள்ளைய வேற வச்சுக்கிட்டு இருக்கிறீங்க! போயி முன்னாடி ஏறிக்கோங்க..."

நல்ல நெஞ்சமுள்ள நடத்துநரின் பேச்சை ஏற்று, முன் பக்கமாகக் குழந்தையோடு பேருந்தில் ஏறினாள் அகிலா. நல்ல இதயமுள்ள பெண் ஒருத்தி, தான் அமர்ந்திருந்த இடத்தில் குழந்தையோடு நின்ற அகிலாவை அமரச் சொன்னாள். பிள்ளையை மடிமீது வைத்துக்கொண்டு தன்னிடமிருந்த ஒரே ஒரு பத்து ரூபாயைப் பயணச் சீட்டு வாங்குவதற்காக எடுத்தாள் அகிலா. அங்கே நின்றுகொண்டிருந்த வாலிபன் ஒருவன், அவளின் குறிப்பறிந்து உதவுவதற்காகக் கை நீட்டினான்.

வலிய வந்து உதவி செய்யும் வாலிபனுக்கு நன்றி கூறிப் பத்து ரூபாயைக் கொடுத்தாள் அகிலா, இரண்டு டிக்கெட் குரோம்பேட்டை மருத்துவ மனைக்கு வாங்கச் சொன்னாள். பணத்தை மிகவும் பவ்வியமாகப் பெற்றுக் கொண்ட வாலிபன், பயணச்சீட்டு வாங்கி வருவதற்காகக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு நடத்துநரை நோக்கிச் சென்றான். அடுத்து வந்த திருப்பத்தில், வண்டி சற்று மெதுவாகப் போகும்போது பணத்தோடு அந்த வாலிபன் இறங்கிச் சென்று விட்டான். இது அகிலாவுக்குத் தெரிய நியாயமில்லை.

'கூட்டம் அதிகமாக இருப்பதால், பயணச்சீட்டு எடுக்கச் சென்ற வாலிபன், மீண்டும் கூட்டத்தில் இடிபட்டு வருவதற்கு முடியாமல், அங்கேயே நின்றிருப்பான்' என்று நினைத்தாள் அகிலா.

பயணச்சீட்டு வாங்கி வருவதாகக் கூறி வாலிபன் அகிலாவிடம் பணத்தை வாங்கிச் சென்றதையும், அவன் திரும்பி வராததையும் அங்கு நின்றபடி கவனித்துக் கொண்டிருந்தார் ஒருவர்.

சில நிமிடத்தில் பேருந்து நின்றது. நான்கைந்து பயணச் சீட்டுப் பரிசோதகர்கள் பேருந்தில் ஏறினார்கள். ஒவ்வொருவரிடமும் பயணச் சீட்டுகளை வாங்கி, தாங்கள் அவற்றைப் பார்த்ததற்கு அடையாளமாகக் குறி செய்துவிட்டுத் திரும்ப உரியவரிடம் ஒப்படைத்தார்கள். அகிலாவின் அருகில் வந்த பரிசோதகர் "சீட்டு எங்கே?" எனக் கேட்டார்.

"ஐயா, நான் இரண்டு சீட்டு வாங்கறதுக்காக இங்கே நின்னுக்கிட்டு இருந்த ஒருத்தர்கிட்டே பத்து ரூபாய் குடுத்தனுப்பினேன்! இதுவரைக்கும் எனக்குச் சீட்டு வந்து சேரவே இல்லை, ஐயா" என்றாள் அகிலா.

"அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. உங்ககிட்டே பயணச் சீட்டு இல்லை... நீங்க எங்கே ஏறினீங்க?"

"பம்மல்ல ஏறினேங்க..."

அடுத்த நிமிடம் அவள் கையில் அபராதத் தொகைக்கான ரசீதினைக் கொடுத்தார் பரிசோதகர். வேறு பணமே இல்லாது போகவே, அவள் மிகவும் வேதனைப்பட்டாள். அவளின் உள்ளத் துடிப்பை முகத்தின் குறிப்பால் உணர்ந்த ஒருவர், தமது ரூபாயை எடுத்து நீட்டினார்.

'இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு சிலர் இருப்பதால்தான் நாடு நாடாக இருக்கின்றது' என்று தனக்குத்தானே நினைத்தாள். அவர் கொடுத்த பணத்தை வாங்கி நடத்துநரிடம் கொடுத்தாள்.

'இந்த நல்ல மனிதர் மட்டும் இல்லாமல் போயிருந்தால், அந்த டிக்கெட் பரிசோதகர் எப்படியெல்லாம் பேசியிருப்பார்? பேருந்தில் உள்ளவர்கள் மத்தியில் நம் மானமே போயிருக்குமே... நாம் கும்பிடும் தெய்வம்தான் மனித உருவில் வந்து என்னைக் காப்பாற்றி இருக்கிறது' என நினைத்தபடி "ஐயா... நீங்க சமயத்திலே செய்த இந்த உதவிக்கு ரொம்ப நன்றி" என்று கூறினாள்.

எதிர்பார்ப்பு இல்லாமல் பணத்தை எடுத்துக் கொடுத்து உதவிய அந்தப் பெருந்தன்மையான மனிதர் லேசான புன்னகையை மட்டும் வெளிப்படுத்தினார்.

குரோம்பேட்டை பொது மருத்துவமனை நிறுத்தத்தில் பேருந்து நின்றது. இளங்கோவைத் தூக்கிக் கொண்டு இறங்கி, சாலையைக் கடந்து மருத்துவ மனையை நோக்கி வேகமாக நடந்தாள். அலைய வேண்டிய இடத்தில் எல்லாம் அலைந்து திரிந்து, புதிய சீட்டை வாங்கிக்கொண்டு மருத்துவ அதிகாரியின் அறைக்குள் நுழைந்தாள். அகிலாவின் கண்களால் நம்பவே முடியவில்லை. பேருந்தில் தனக்குப் பணம் கொடுத்து உதவிய அந்தப் பரந்த உள்ளம் படைத்தவரே மருத்துவ அதிகாரியாக அமர்ந்திருந்தார்.

“வாம்மா, குழந்தையை இப்படி உட்காரவையுங்க... தம்பி உன் பேரு என்னப்பா? குழந்தைக்கு என்னம்மா?”

“இவன் குழந்தைகளோடு விளையாடும்போது விழுந்துட்டான் டாக்டர்... ஒரு பெரியவர் முதல் உதவி செய்தாருங்க.”

“அப்படியா .... தம்பி, உன் பேரு என்னப்பா?” கட்டை அவிழ்த்தபடி கேட்டார் டாக்டர்.

“என் பேரு இளங்கோ, எங்கம்மா பேரு அகிலா. எங்கப்பா பேரு சிங்காரம்.”

“எந்த வகுப்பு படிக்கிறே?”

“முதல் வகுப்பு”

“உங்க வகுப்பிலே நீதான் முதல் மாணவன்னு சொல்லு...!”

“ஆமாங்க டாக்டர், நான்தான் எங்க வகுப்பிலே முதல்

மாணவன்... உங்களுக்கு எப்படி டாக்டர் தெரியும்? ஆ... வலிக்குது டாக்டர்...'' என்று கத்தினான் இளங்கோ.

இளங்கோவிடம் பேச்சு கொடுத்துக்கொண்டே சோதனை செய்தார் டாக்டர். டாக்டர் எழுதிக் கொடுத்த சீட்டை எடுத்துக்கொண்டு எக்ஸ்ரே எடுக்கும் இடத்தைத் தேடிப் பிடித்து, எக்ஸ்ரேவை எடுத்துவிட்டு, பழையபடி டாக்டரிடம் வந்தாள்அகிலா. அவர் அங்கு இல்லாமல் போகவே, சுவர் ஓரமாகப் போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்தாள். ஒரு சில நிமிடங்களுக்குள் டாக்டர் அங்கு வந்து சேர்ந்தார்.

''வாங்கம்மா, இளங்கோவோட எக்ஸ்ரேவைத்தான் பார்த்துட்டு வரேன். குழந்தைக்கு எலும்பு முறிவு எதுவும் ஏற்படல. கட்டு கட்டும் அறைக்குப் போய், கட்டு மட்டும் கட்டிக்கிட்டு வாங்கம்மா.''

அவளின் நெஞ்சத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த அச்சமும் கவலையும் இருக்குமிடம் தெரியாமல் போயின, மருத்துவரிடமிருந்து மருந்துச் சீட்டை வாங்கிக் கொண்டு கட்டு கட்டும் இடத்திற்குச் சென்றாள். உள்ளே, பலமாக அடிபட்ட ஒருவருக்குப் பரபரப்போடு நாலைந்து பேர் கட்டு கட்டிக்கொண்டிருந்தார்கள். அகிலா அங்கிருந்த இருக்கையில் ஏற்கெனவே அமர்ந்திருந்த இரண்டு பேருக்குப் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

முகத்தைத் தவிர மற்ற இடங்களில் எல்லாம் துணிகளால் நிரப்பப்பட்ட அந்த ஆளைத் தள்ளு வண்டியில் வைத்துத் தள்ளிக் கொண்டு வெளியே வந்தார்கள். இளகிய மனதுடைய அகிலா, அந்த நபர் விரைவில் குணமடைவதற்காகத் தன் குல தெய்வத்திடம் வேண்டிக் கொண்டாள்.

தள்ளு வண்டியில் கிடந்த உருவம், மருத்துவமனைச் சிப்பந்தியிடம் எதையோ மெதுவாகச் சொன்னது. அடுத்த நிமிடம் அந்தச் சிப்பந்தி அகிலாவின் அருகில் வந்தான். ''அம்மா உங்ககிட்டே அந்த ஆள் ஏதோ பேசணுமாம், ஒரு நிமிடம் வந்து போங்க.''

அகிலாவிற்குத் தூக்கி வாரிப் போட்டது. ‘என்னைப் பார்க்க வேண்டும் என்று சொல்வதைப் பார்த்தால்..... ஆண்டவனே, இதென்ன சோதனை!’ மனத்திற்குள்ளே குழம்பியபடி எழுந்து சென்றாள்.

“அம்மா என்னை மன்னிச்சிடுங்க அம்மா..”

“ஏம்பா, நீ யாரு?“

“இந்தாங்கம்மா, உங்க பத்து ரூபா ...! இது உங்களோட பணம். தயவு செஞ்சு வாங்கிக்கோங்க... பேருந்துலே நீங்க பயணச் சீட்டு வாங்கக் குடுத்த பத்து ரூபாயை எடுத்துக்கிட்டு, பாதி வழியிலே இறங்கிட்ட படுபாவி நான்தான். உங்களை ரொம்ப சுலபமா ஏமாத்திட்டேங்கிற திமிர்ல, ரோட்டை கடக்கும்போது என் மேல லாரி மோதிடுச்சு... நான் செஞ்ச காரியத்துக்கு ஆண்டவன் என்னைக் கொன்னு இருக்கணும். தயவு செஞ்சு என்னை மன்னிச்சேன்னு ஒரு வார்த்தை சொல்லுங்கம்மா” என்றான் அடிபட்டுக் கிடந்த அந்த வாலிபன்.

குற்றத்தை உணர்ந்தவனின் கண்களில் கண்ணீர் தாரை தாரையாகக் கொட்டியது. கையெடுத்து அவளைக் கும்பிட்டபடி தன்னைக் கொண்டு செல்லும்படி மருத்துவமனைச் சிப்பந்திக்குச் சைகை மூலம் தெரிவித்தான்.

மனிதனாக மாறியவனை மனத்திற்குள்ளே வாழ்த்தியபடி, இளங்கோவைத் தூக்கிக்கொண்டு கட்டு கட்டுவதற்காக அறையின் உள்ளே நுழைந்தாள் அகிலா.

**(இராம.ராகவேந்திரன் எழுதிய ‘குழந்தைகள் விரும்பும் குட்டிக் கதைகள்’ என்னும் நூலிலிருந்து எடுக்கப்பெற்றது).**

# 5. வீண் கனவின் விளைவு

அரபு நாட்டிலே பாக்தாத் மிகவும் வளமான நகரம். அதனைப் பணபலம் மிக்க பாதுஷா ஆண்டு வந்தார். அதில் தனவான்கள், கனவான்கள், வணிகர்கள் முதலான செல்வச் சீமான்கள் பலர் நிறைந்திருந்தனர். அங்குச் செல்வம் கொழித்தது. மாட மாளிகைகள், கூட கோபுரங்கள், அகண்ட வீதிகள், அளவிலா விதவிதமான வாகனங்கள், காண்போர் கண்கவரும் கடை வீதிகள், விலை உயர்ந்த உடுப்பு அணிந்த ஆண்கள், பகட்டான பட்டாடையும் பளிச்சிடும் பொன்னும் மணியும் அணிந்த எழில் மிகு பெண்கள். இவை யாவும் அந்நகருக்கு அழகும் ஆடம்பரமும் ஊட்டின. ஆக மொத்தம் பாக்தாத் நகரின் சீரும் சிறப்பும் எளிதில் எடுத்து இயம்ப இயலாது.

அச் சீர்மிகு பாக்தாத் நகரில் பல ஆண்டுகளுக்குமுன் அபூபக்கர் என்றொரு வணிகன் வாழ்ந்தான். அவன் பீங்கான், கண்ணாடி வியாபாரம் செய்பவன். நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவன். ஆனால், பேராசை பிடித்தவன். அவன் தன் பீங்கான், கண்ணாடிச் சாமான்களை ஒரு கூடையில் வைத்து, தலையில் சுமந்து, தெருத் தெருவாய்ச் சுற்றி விற்பவன். வருமானம் அதிகமில்லை. சுமாரான சம்பாத்தியந்தான். அதனால் அவனுக்குப் பெரும் மனக்குறை. எனவே, சீக்கிரமாய்ச் செல்வச் சீமானாக அவாவுற்றான். எப்படியும் பணக்காரனாகத் துடித்தான்.

ஒரு நாள் நல்ல வெயில். அந்த வெப்பத்தில் ஊரைச் சுற்றி அலைந்து, சில பீங்கான் சாமான்களை விற்றான். களைப்பு மிகுதியால் சோர்ந்தான். ஒரு மரத்தடி நிழலில் கல்லின்மீது அமர்ந்தான். அருகில் தரையில் தன் காலடியில் பீங்கான், கண்ணாடிச் சாமான்கள் நிறைந்த கூடையை வைத்தான். நிம்மதியாய் ஒய்வு எடுத்தான்.

சில்லென்னு தென்றல் காற்று வீசிற்று. அபூபக்கர் அயர்ந்து தூங்கிவிட்டான். தன் வியாபாரம் பெருகி, தான் பெரும் பணக்காரன் ஆக வேண்டுமெனச் சதா கற்பனை செய்வது அவன் வழக்கம். அவன் சிந்தையில் அந்தப் பேராசை நிரந்தரமாய்க் குடிகொண்டிருந்தது. ஆகவே, அவன் தூக்கத்திலும் அந்த எண்ணமும், ஏக்கமுமே இன்பக் கனவாய் வந்தன. சுவையாய்க் கனவு காணத் தொடங்கினான்.

தெருத் தெருவாய்ச் சுற்றிச் சாமான்களை விற்ற அபூபக்கர், விரைவில் ஒரு கடையை அமர்த்தினான். அதில் மும்முரமாய்ப் பீங்கான், கண்ணாடி வியாபாரம் செய்யத் தொடங்கினான். நாளடைவில் வியாபாரம் பெருகி, ஒரு கடை, பல கடையாய் விரிந்தன. அடுத்து ஒரு பீங்கான் தொழிற்சாலையும் ஏற்படுத்தினான். அளவற்ற செல்வம் அவனை வந்தடைந்தது. அழகான மாளிகைகள், மகால்கள், பூங்காக்கள், தோட்டங்கள் அவனுக்குச் சொந்தமாயின. அவற்றைக் கண்ட பாதுஷா தாமே வலிய வந்து தமது ஒரே மகள் மஜ்னுவை அபூபக்கருக்கு ஆடம்பரமாய்த் திருமணம் செய்தார். அபூபக்கரை ஓர் இளவரசனாய் ஆக்கினார்.

இவ்விதம் செல்வச் செருக்கில் மிதந்தான் அபூபக்கர். தன்னை மறந்து இன்பத்தில் ஆழ்ந்தான். பாதுஷாவின் மகள் மஜ்னு, அபூபக்கரின் காலடியில் அமர்ந்து, அவனுக்குப் பணிவிடைகள் செய்தாள். அபூபக்கர் தன் அதிகாரத்தை இளவரசியிடம் காட்ட எண்ணினான். உடனே அவளைத் தன் காலால் எட்டி உதைத்துக் கண்டித்தான்.

அவன் தூக்கத்தில் இவ்விதம் கனவு கண்டு, காலைத் தூக்கி உதைக்கவே, அது அவன் காலடியில் வைத்திருந்த கூடைமீது பலமாகப் பட்டது. உடனே அந்தக் கூடை கீழே விழுந்து உருண்டது. அதிலிருந்த பீங்கான், கண்ணாடிச் சாமான்கள் யாவும் சிதறுண்டு உடைந்து நொறுங்கின. அச் சத்தம் கேட்ட அபூபக்கர், தன் கனவிலிருந்து பதறி விழித்து எழுந்தான்.

அவனால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. தனது மூலதனமான பீங்கான், கண்ணாடிச் சாமான்கள் யாவும் சுக்கல் நூறாய் தன் எதிரே உடைந்து கிடப்பதைக் கண்டான். அவன் கண்கள் கலங்கின. அவன் பேராசையால் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினான். காணக்கூடாத கனவெல்லாம் கண்டான். அதன் பலன், தனது வியாபாரப் பொருள்களான பீங்கான், கண்ணாடி எல்லாம் தன் காலடியில் தூள் தூளாய் உடைந்து சிதறிக் கிடக்கக் கண்டான். துக்கம் தாளாது தரையில் விழுந்து புரண்டு வாய்விட்டுப் புலம்பி அழுதான். தனது பேராசையால் தனக்குப் பெருநட்டம் ஏற்பட்டு, தனது பிழைப்பே பாழ்பட்டது கண்டு சிந்தை கலங்கிப் போனான். இறுதியில் சித்தப்பிரமை பிடித்து அலைந்தான்.

ஆசைக்கு ஓர் அளவு வேண்டும். பேராசையால் பெருநட்டம் ஏற்படும்.

(பொன்.பரமகுரு எழுதிய 'தாயுள்ளம்' என்னும் நூலிலிருந்து எடுக்கப் பெற்றது)

# 6. நன்றி மறந்த தவளை

ஒரு குளத்தின் மேட்டுக் கரைப் பகுதியில் எலி வளை ஒன்று இருந்தது. அதில் தங்கியிருந்த எலி பக்கத்து வயல்களுக்குச் சென்று தானியங்களைக் கொண்டுவந்து வளையில் சேர்த்து வைக்கும். மழைக் காலத்திலோ, வெளியில் செல்ல முடியாத நாள்களிலோ தான் சேர்த்து வைத்திருக்கும் தானியங்களை வயிறாரத் தின்று மகிழ்ச்சியாக நாள்களைக் கழித்து வந்தது.

இந்த எலிக்கும் அந்தக் குளத்தில் வசித்து வந்த தவளை ஒன்றுக்கும் சிநேகம் ஏற்பட்டது. மாலை நேரங்களில், தவளை நீரின் மேல் மட்டத்திற்கு வந்து எலியை அழைக்கும். எலி வளையை விட்டு வெளியே வந்து தன் நண்பனோடு பேசிக் கொண்டிருக்கும். இப்படியாக இவை உல்லாசமாக உரையாடி நாள்களைக் கழித்துக் கொண்டிருந்தன.

சிறிது காலத்திற்குப் பிறகு கோடைக்காலம் வந்தது. வெயில் கடுமையாகக் காய்ந்தது. அனல் காற்று வீசியது. அந்தக் குளத்திலுள்ள தண்ணீர் வற்றத் தொடங்கியது. இன்னும் இரண்டு மூன்று நாள்களில் குளத்தின் நீர் முழுவதும் வற்றித் தரையே காய்ந்து விடும்போல் தோன்றியது. தவளையின் வாழ்வு அபாயத்திற்கு உள்ளாயிற்று. குளத்தில் நீர் வற்றிவிட்டால் எப்படிப் பிழைக்கும்? நீரின்றி அது மடிய வேண்டியதுதானா? நீருள்ள இடத்தை அதனால் எப்படிக் கண்டு பிடிக்க முடியும்?

தவளை தனது நண்பன் எலியுடன் ஆலோசித்துத் தன் பிரச்சினைக்கு வழிகாண விரும்பியது. இரண்டும் ஆலோசித்து வேறு ஒரு குளத்தைத் தேடிப் பார்க்க முடிவு செய்தன. தனது நண்பனுக்காக எலி இப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது.

இரண்டு மூன்று நாள்களாக எலி எங்கெல்லாமோ சுற்றி அலைந்து பெருமுயற்சி எடுத்துத் தேடியது. ஒரு நாள் அதன் கண்ணில் நீர் நிறைந்த ஒரு குளம் தென்பட்டது. எலியின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. தன் நண்பன் கவலையின்றித் தங்கிக்கொள்ள நல்ல இடம் கிடைத்து விட்டதல்லவா? அது ஓடோடி வந்து தன் நண்பனிடம் இச் செய்தியைத் தெரிவித்தது. இதைக் கேட்ட தவளைக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை!.

தவளை தான் இருந்த குளத்தை விட்டு விரைவில் வெளியேற முடிவு செய்தது. ஆனால் நீர் நிறைந்த குளம் அமைந்துள்ள இடம் அதற்குத் தெரியாதல்லவா? எனவே, அது தனது எலித் தோழனையும் தன்னோடு வருமாறு அழைத்தது. தன் நண்பன் தன்னைப் பிரியாதிருக்க விரும்புகிறானே என்று எலியும் இசைந்தது. போகும் இடத்தில் ஒரு வளையைத் தான் உருவாக்கி அதில் தங்கிக் கொள்ளலாம் அல்லவா? அது கொஞ்சம் கடினமான செயல்தான். எனினும் தன் நண்பன் தன்னை அழைக்கும்போது அதனால் மறுக்க முடியவில்லை.

இரண்டும் அந்த இடத்தை விட்டு வெளியேறிச் செல்லும்போது, ஒன்றை விட்டு மற்றொன்று பிரிந்து வழி தவறிப் போகாமல் இருக்க வேண்டுமல்லவா! எனவே இரண்டும் இணைந்து ஒரு கயிற்றால் தம்மைக் கட்டிக் கொண்டன. அந்தக் கயிற்றின் ஒரு முனையைத் தவளை தன் காலிலும், மறு முனையை எலி தன் காலிலும் கட்டிக்கொண்டன. இப்படியாக இரண்டும் ஒன்றை விட்டு ஒன்று பிரியாதபடிக்குத் தம்மைப் பிணைத்துக்கொண்டு தாம் தங்கியிருந்த இடத்தைவிட்டு வெளியேறின.

தவளையை எலி பாதுகாப்பாக அழைத்துச் சென்றது. நீண்ட தொலைவு கடந்து, இரண்டும் புதுக் குளத்தின் பக்கம் வந்து சேர்ந்தன. தவளை தண்ணீரின் குளிர்காற்றை உணர்ந்தது. அதற்கு அளவு கடந்த களிப்புப் பொங்கியது. அது தன் நிலை மறந்தது . அதோடு தனக்குப் புதிய குளத்தைத் தேடித் தந்த தன் நண்பன் எலியையும் அடியோடு மறந்து விட்டது. அந்தப் புதிய குளத்தின் நீரைக் கண்டதும் அதை நோக்கி ஒரே தாவாகத் தாவிப் பாய்ந்தது. பாவம்! தவளையோடு கயிற்றால் பிணைக்கப்பட்டிருந்த எலியும் அதோடு தொப்பென்று நீரில் விழுந்தது. தவளை தன் நண்பனின் நிலையைப் பற்றிச் சிறிதும் சிந்திக்கவே இல்லை. தண்ணீரில் விழுந்த எலி, அதில் கிடந்து தத்தளித்தது. நீரைக் குடித்து இறுதியில் இறந்தது. தவளையோ நன்றி மறந்த நிலையில், எலியைக் குறித்துச் சிறிதும் கவலை கொள்ளாமல், நீரின் அடிப்பகுதியில் மூழ்கி அங்கே புதிதாகக் கிடைத்த இரையைத் தின்று விளையாடிக் கொண்டிருந்தது.

வானத்தில் பறந்து கொண்டிருந்த பருந்து ஒன்றின் கூரிய பார்வையில் எலி நீரில் மிதப்பது தெரிந்தது. அது ஒரே பாய்ச்சலில் நீர் மட்டத்தை அடைந்து எலியைக் கால்களில் பற்றிக்கொண்டு மேலே பறந்தது. அத்துடன் கயிற்றில் பிணைக்கப்பட்டிருந்த தவளையும் கூடவே பருந்துக்குக் கிடைத்தது. எலியோடு சிக்கிய தவளையும் பருந்துக்கு விருந்தாயிற்று.

நன்றி மறந்தவர்களுக்கும் சுய நலவாதிகளுக்கும் தெய்வம் கொடுத்த தண்டனை அல்லவா இது !

**(கவிஞர்.தே.ப. பெருமாள் எழுதிய 'சிந்திக்க வைக்கும் சிறுகதைகள்' என்னும் நூலிலிருந்து எடுக்கப் பெற்றது).**

# 7. ஔவைக்குத் தந்த நெல்லிக் கனி

அதியமான் அஞ்சி என்னும் மன்னன் தகடூரை ஆட்சி செய்து வந்தான். இவன் தமிழின்பால் மிகுந்த பற்று கொண்டவன். தன்னை நாடி வரும் புலவர்களை அன்புடன் வரவேற்று உபசரித்து அவர்களுக்குப் பரிசுகளை அளித்து ஊக்குவிப்பான். இவன் வீரத்திலும் சிறந்தவன். இவன் பெயரைக் கேட்டால் பகையரசர்கள் அஞ்சி நடுங்குவார்கள். இவன் பல சிற்றரசர்களையும் பேரரசர்களையும் போரில் வென்று, தன் நாட்டைப் பலம் பொருந்திய நாடாக அமைத்துக் கொண்டான். இதனால் இவன் புகழ் தமிழகமெங்கும் பரவியது.

இவனது அரண்மனைக்கு ஔவையார் எனும் பெரும்புலவர் இவனிடம் பரிசில் பெற்றுச் செல்ல வந்திருந்தார். இவரது புலமையை நன்கு அறிந்த அதியமான், அவரைத் தன்னோடு தங்க வைத்தான். புலவருக்கு வேண்டிய வசதிகள் செய்துகொடுத்தான். புலவரும் இவனது வீரத்தையும் சிறந்த பண்புகளையும் பாடல்களாகப் பாடினார். மன்னனும் அவற்றைக் கேட்டு மகிழ்ந்தான். இவ்வாறு மாதங்கள் பல கழிந்தன.

ஆனால் புலவருக்கு மனத்தில் பெரும் வருத்தம் இருந்தது. 'மன்னன் நமக்குப் பரிசில் எதுவும் தரவில்லையே. அப்படித் தந்தால் தானே நாம் நமது நாட்டிற்குச் செல்ல முடியும்' என்று வருந்தினார். வருத்தம் கோபமாக வெடித்தது. எனவே, மன்னனின் காவலர்களிடம் "மன்னன் எனக்குப் பரிசுகள் ஏதும் தரவில்லை. ஆகவே, இனி நான் இங்குத் தங்கப் போவதில்லை" என்று கூறிவிட்டு அரண்மனையை விட்டுப் புறப்பட்டார்.

செய்தி அறிந்த மன்னன், 'புலவரின் கோபத்திற்கு நான் ஆளாகி விட்டேனே' என்று அஞ்சி அவரிடம் ஓடிச் சென்றான். படை பலம் மிக்க பகை மன்னரைக் கண்டு அஞ்சாத அதியமான், புலவர் ஔவையாருக்கு அஞ்சி அவரைத் தேடி ஓடினான். ஔவையைச் சந்தித்தான்.

"அம்மையீர், என்னை மன்னித்து விடுங்கள். நான் தங்களுக்குப் பரிசில் கொடுக்காமல் இருந்து தங்களை அவமதித்து விட்டேன் என்று

தவறாக எண்ணி விட்டீர்கள். ஆனால் நான் பரிசில் கொடுத்து விட்டால் தாங்கள் என்னை விட்டுப் பிரிந்து விடுவீர்களே! உங்கள் தமிழ்க் கவிதைகளைக் கேட்க முடியாமல் போய்விடுமே என்ற அச்சத்தால்தான் பரிசு கொடுப்பதற்குக் காலம் தாழ்த்தினேன். இதோ இருக்கும் பொருள்களை யெல்லாம் தாங்கள் பெற்றுக் கொள்ளுங்கள்'' என்று விலையுயர்ந்த பரிசுகளை வாரி வழங்கினான். 'அதியமானின் நல்ல உள்ளத்தை நாம் தவறாகப் புரிந்து கொண்டோமே' என்று ஔவையார் மிகவும் மனம் வருந்தினார். அதன் பின்னர் நீண்ட காலம் அதியமானது அரண்மனையில் தங்கி இருந்து பல பாடல்களைப் பாடினார். மன்னனும் கேட்டு மகிழ்ந்திருந்தான்.

ஒரு சமயம் அதியமான் மலைவளம் காணச் சென்றிருந்தான். அப்போது அங்கிருந்த நெல்லி மரத்தில் ஓர் அபூர்வ நெல்லிக்கனியைக் கண்டான். அதை உண்டால் பல காலம் நோய் நொடியின்றி நலமாக வாழ முடியும் என்று அறிந்தான். உடனே அதை எப்படியும் பறித்து உண்டுவிட முடிவு செய்தான். மிகவும் சிரமப்பட்டு மலையின் உச்சிக்குச் சென்று அந்நெல்லிக் கனியைப் பறித்தான். அதை உடனே உண்டுவிடத் தீர்மானித்து, வாயருகே கொண்டு சென்றான். அப்போது அதியமானுக்குத் திடீரென்று ஓர் எண்ணம் தோன்றியது. 'ஆம்! நாம் அக்கனியை உண்டு நீண்ட காலம் வாழ்ந்தால் நமது நாட்டுக்கு மட்டுமே நன்மை செய்ய முடியும். ஆனால் புலவர் ஔவையார் உண்டு நீண்ட காலம் வாழ்ந்திருந்தால், தமிழுக்கு அவரால் பல கவிதைகள் கிடைக்கும். அதனால் தமிழின் புகழ் சிறக்கும்' என்று எண்ணினான். உடனே அந்தக் கனியைத் தான் உண்ணாது, புலவர் ஔவையாரிடம் கொண்டு வந்து கொடுத்தான்.

'அக்கனியின் சிறப்பைக் கூறினால் புலவர் உண்ண மறுத்து விடுவாரோ' என்று எண்ணி, அவரிடம் அக்கனியின் சிறப்பைச் சொல்லாது மறைத்தான். புலவர் அக் கனியை உண்ட பிறகே கனியின் சிறப்பைக் கூறினான். இதைக் கேட்ட புலவரின் மனம் நெகிழ்ந்தது. மன்னன் அதியமான் தமிழின்பால் கொண்ட பற்றுதலும் தன்மீது கொண்ட அன்பும் எத்தகையன வென்று உணர்ந்தார். அதியமானது பெருமை குறித்தும் உயர் கொடை குறித்தும் பல பாடல்கள் பாடினார்.

ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்துப் புகழ் பெற்ற அதியமானின் புகழ் இன்றும் தமிழகத்தில் நிலைத்து நிற்கிறது.

**(பெ. தேசிக விநாயகம் எழுதிய 'தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த மன்னர்கள்' என்னும் நூலிலிருந்து எடுக்கப் பெற்றது)**

# 8. வள்ளல் வடிவேலு

பூங்கொடி எட்டு வயது சிறுமி. பள்ளி விடுமுறையில் தாத்தா வீட்டுக்குப் போனாள். தாத்தா பெருங்குடி என்ற ஊரில் வாழ்ந்து வந்தார். தாத்தாவுக்குப் பூங்கொடி, மகள் வயிற்றுப் பேத்தி. அவளை மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

பெருங்குடி என்ற ஊர் அழகான ஊர். எங்குப் பார்த்தாலும் தென்னந்தோப்புகள்; நடு நடுவே மாந்தோப்புகள். மா மரங்களில் குயில் கூவிக் கொண்டிருந்தது. சிற்றாறு ஒன்று ஊரைத் தழுவி ஓடியது. பூங்கொடி ஊரைச் சுற்றிச் சுற்றி வந்தாள். அவளுக்கு அந்த ஊர் மிகவும் பிடித்திருந்தது. அதைத் தாத்தாவிடமும் சொன்னாள். தாத்தா சொன்னார், "இந்த ஊர் மட்டுமன்று; இங்கே வசிக்கும் மனிதர்களையும் உனக்குப் பிடிக்கும். அவர்களை அறிமுகம் செய்துவைக்கிறேன்!"

"இந்த ஊரில் யாரை எனக்கு அறிமுகம் செய்துவைக்கப் போகிறீர்கள்?" என்று ஆவலோடு கேட்டாள்.

"இந்த ஊரில் கந்தசாமி என்று ஒருவர் இருக்கிறார். அவருக்குக் கைகளும் இல்லை, கால்களும் இல்லை. விபத்தினால் அப்படி ஆகிவிட்டார். ஆனால் மிகச் சிறந்த அறிவு படைத்தவர். இந்த ஊருக்கே ஆசிரியர்போல் விளங்குகிறார். எல்லோரும் அவரிடம் சென்று சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவு பெறுவார்கள்!"

"அப்படியா?" என்று கேட்டு வாயைப் பிளந்தாள் பூங்கொடி.

"இந்த ஊரில் ஆறுமுகம் என்று ஒருவன் இருக்கின்றான். மாடு மேய்ப்பது அவன் தொழில்; அருமையாகப் புல்லாங்குழல் ஊதுவான். அதைக் கேட்பவர்கள் அப்படியே சொக்கிப்போய்விடுவார்கள். குழல் ஊதுவதற்கு அவன் யாரிடமும் கற்றுக் கொள்ளவில்லை. தானே முயன்று கற்றுக் கொண்டான்!" என்றார் தாத்தா.

“ஆசிரியர் இல்லாமலே திறமையாக வாசிக்கிறான்! இன்னும் ஆசிரியரிடம் கற்றுக் கொண்டிருந்தால் எப்படி வாசிப்பான்!” என்று வியப்புடன் கேட்டாள். ‘ஆமாம்’ என்று தலை அசைத்தார் தாத்தா.

“வள்ளல் வடிவேலு என்று ஒருவர் இந்த ஊரில் வாழ்கிறார். யார், என்ன கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல் கொடுப்பவர். இதுவரை இல்லை என்ற சொல்லே அவர் வாயில் வந்ததில்லை!”

“தாத்தா! தாத்தா! நான் அவரை உடனே பார்க்க வேண்டுமே ! இப்போதே போய்ப் பார்க்கலாமா?” என்று ஆவலால் துடித்தாள்.

“ஏன் இப்படி அவசரப்படுகிறாய்? இந்த ஊரில் எல்லாரையும் உனக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன்” என்றார் தாத்தா.

“வள்ளல் வடிவேலுவை நான் உடனே பார்க்க வேண்டும் தாத்தா! நாம் இப்போதே புறப்படுவோம்” என்று குதித்தாள் பூங்கொடி.

“அவரிடம் என்ன கேட்கப் போகிறாய்? எதற்காக அவரைப் பார்க்கத் துடிக்கிறாய்?” என்று கேட்டார் தாத்தா.

“எல்லாம் பிறகு சொல்கிறேன். வாருங்கள் போகலாம்!”என்று தாத்தாவின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டே சென்றாள். இருவரும் வள்ளல் வடிவேலு வீட்டை அடைந்தனர்.

“ஐயா!” என்று குரல் கொடுத்தார் தாத்தா. வள்ளல் உள்ளே இருந்து வெளியே வந்தார். தாத்தா, பூங்கொடியை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். பூங்கொடி வணக்கம் தெரிவித்தாள். இருவரையும் வள்ளல் உள்ளே அழைத்துச் சென்றார். சிற்றுண்டி கொடுத்து உபசரித்தார். பூங்கொடியுடன் அன்போடு பேசினார். அவளுக்குச் சில கதைப் புத்தகங்களைக் கொண்டுவந்து கொடுத்தார்.

“ஐயா, உங்களிடமிருந்து எந்தப் பொருளையும் நான் பெற விரும்பவில்லை. ஆனால் விரும்புவது ஒன்று உண்டு...” என்று நிறுத்தினாள்.

“என்னம்மா விரும்புகிறாய்? தயங்காமல் சொல் ! உன் விருப்பம் எதுவாக இருந்தாலும் நிறைவேற்றி வைக்கிறேன்! ” என்றார் வள்ளல் வடிவேலு.

“நீங்கள் வள்ளலாக எப்படி ஆனீர்கள்? வள்ளலாக விளங்க வேண்டும் என்று ஏன் முடிவு செய்தீர்கள்? அந்த இரகசியத்தை எனக்குச் சொன்னால் போதும்! நீங்கள் வேறு எதுவும் எனக்குத் தர வேண்டியதில்லை” என்றாள்.

“இதில் இரகசியம் எதுவும் இல்லை. இதுவரை என்னிடம் இப்படி யாரும் கேள்வி கேட்டதில்லை. நீ மிகவும் அறிவுள்ள பெண். நான் ஒரு கதை சொல்லப் போகிறேன். கேள்...” என்று தொடங்கினார். பூங்கொடி கதை கேட்க ஆவலோடு நிமிர்ந்து உட்கார்ந்தாள். தாத்தாவும் ஆவலோடு நிமிர்ந்தார். வள்ளல் சொல்ல ஆரம்பித்தார்.

“என் பெற்றோர்கள் ஏழைகள். நான் கிழிந்த சட்டை போட்டுக்கொண்டு பள்ளிக்குப் போவேன். சில சமயம் பட்டினியோடும் போவேன். ஒரு நாள் வழியில் வித்தைக்காரன் ஒருவன் வித்தை காட்டினான். அதைப் பார்த்து அப்படியே நின்று விட்டேன். அவன் என்ன வித்தை காட்டினான் தெரியுமா? காலியான ஒரு தட்டில் வாழைப் பழத்தை வரவழைத்தான். என்னைப் போன்ற சிறுவன் ஒருவனுக்குக் கொடுத்தான்.

ஒருவன் மாம் பழம் வேண்டும் என்றான். அதை வரவழைத்துக் கொடுத்தான். ஒருவன் கொய்யாப் பழம் கேட்டான். அதையும் வரவழைத்துக் கொடுத்தான். கடைசியில் எல்லோரிடமும் காசு வாங்கிக்கொண்டு புறப்பட்டான். எனக்குப் பள்ளிக்குப் போக மனம் இல்லை. அவன் பின்னாலேயே போனேன். அவன் இருப்பிடத்தைத் தெரிந்து கொள்ள முயன்றேன். ஏன் தெரியுமா? மற்றவர் கேட்டதெல்லாம் கொடுக்கும் வித்தை அவனிடம் இருக்கிறதே! அதை எப்படியாவது அவனிடம் கற்றுக்கொள்ள வேண்டும். கற்றுக்கொண்டு என்னைப் போன்ற ஏழைப் பிள்ளைகளுக்கு வேண்டியதை எல்லாம் வரவழைத்துக் கொடுக்கவேண்டும் என்று முடிவு செய்தேன். அவன் வீட்டிற்குப் போனதும் இரண்டு சிறுவர்கள் ஓடி வந்து அழுதார்கள்.

'அப்பா பசிக்கிறது ! என்ன வாங்கி வந்தாய்? காலையிலிருந்து பட்டினியாக இருக்கிறோம்!' என்று சொல்லி அழுதார்கள். 'கொஞ்சம் பொறுங்கள் ! கடைக்குப் போய் அரிசி வாங்கிவந்து சமைத்துப் போடுகிறேன்!' என்று சொல்லி அவர்களைச் சமாதானம் செய்தான். அதைப் பார்த்ததும் எனக்கு வியப்பாக இருந்தது. 'அழுகிற தன் பிள்ளைகளுக்கு ஏதாவது தரக் கூடாதா?' என்று நினைத்தேன். ஓடிப்போய் அவன் எதிரே நின்றேன். என் மனத்தில் உள்ள சந்தேகத்தைக் கேட்டு விட்டேன்.

அதைக் கேட்டதும் அவன் சிரித்தான். 'வித்தை காட்டுவது நான் வயிறு வளர்ப்பதற்காக! உண்மையில் பிறர் நினைப்பதை எல்லாம் என்னால் கொடுக்க முடியாது! அத்தகைய சக்தி எனக்கு இருக்குமானால் நான் ஏன் ஏழையாக இருக்கிறேன்?' என்று கேட்டு விட்டு நடந்தான். அவன் பதில் எனக்கு மிகவும் ஏமாற்றத்தை அளித்தது. 'பிறர் கேட்பதை எல்லாம் கொடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?' இந்தக் கேள்வி என் மனத்தை விட்டு நீங்கவே இல்லை. ஓயாமல் ஒலித்துக் கொண்டே இருந்தது. இந்தக் கேள்விக்கு விடையை என் தமிழாசிரியரிடம் கேட்டேன். அவர் சொன்னார், 'நீ நன்றாக உழைத்து முன்னுக்கு வரவேண்டும். நீ முன்னுக்கு வரும்போது, உன்னிடம் பணம் இருக்கும். பிறர் கேட்பதை எல்லாம் கொடுக்கலாம்' என்றார்.

நான் பெரியவனானதும் நன்றாக உழைக்கத் தொடங்கினேன். நிறைய பணம் சம்பாதித்தேன். முன்னுக்கு வந்தேன். பிறர் கேட்பதை எல்லாம் மெய்யாகவே கொடுக்கத் தொடங்கினேன். என்னை எல்லோரும் 'வள்ளல் வடிவேலு' என்று அழைக்கத் தொடங்கினார்கள்'' என்று கதையை முடித்தார்.

''மற்றவர்களுக்குக் கொடுப்பதற்காகவே முன்னுக்கு வந்தீர்கள்! இதைக் கேட்கும்போது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. உங்களைப் பாராட்டுகிறேன். எதிர்காலத்தில் நானும் உங்களைப்போல ஆவேன். மற்றவர்களுக்கு ஏதாவது ஒரு வகையில் உதவி செய்யக் கூடியவளாக வருவேன்'' என்று உணர்ச்சியோடு பேசினாள் பூங்கொடி.

அவளை வாழ்த்தி வழியனுப்பினார் வள்ளல் வடிவேலு.

**(ஆலந்தூர் கோ.மோகன ரங்கன் எழுதிய 'அறம் வளர்ப்போம் வாருங்கள்' என்னும் சிறுகதைத் தொகுதியிலிருந்து எடுக்கப் பெற்றது).**

# 9. தன்னம்பிக்கை

"நம் பள்ளியில் செயல்படும் இலக்கிய மன்றத்தின் சார்பில் பாரதியின் பிறந்த நாளை முன்னிட்டு மாணவர்கட்குக் கவிதைப் போட்டி நடைபெற இருக்கிறது. 'தன்னம்பிக்கை' என்ற தலைப்பில் மாணவ, மாணவியர் கவிதை படைக்க வேண்டும். வெற்றி பெறுவோருக்கு முதல் பரிசு, இரண்டாம் பரிசு என இரு பரிசுகளும், முதல் பரிசைப் பெறுபவருக்கு 'இளங்கவி' என்ற பட்டமும் அளிக்கப்படும். பங்கு பெற விரும்புவோர் தங்களின் பெயர்களை ஆசிரியர் திரு.மகாதேவன் அவர்களிடம் பதிவு செய்துகொள்ள வேண்டுகிறோம்." பள்ளியின் அறிவிப்புப் பலகையில் இருந்த இந்த அறிவிப்பை மாணவர்கள் குழுமி நின்று படித்துக் கொண்டிருந்தனர்.

"பாடப் புத்தகத்தில் வரும் குறுந்தொகைப் பாட்டையே குறையில்லாமல் படிக்கமாட்டாய் நீ! கவிதைப் போட்டியில் கலந்துக்கப் போறியா? உனக்கு ஏண்டா இந்த விபரீத ஆசையெல்லாம்?" ஜோசப்பைப் பார்த்துக் கிண்டலாய்க் கேட்டான் நசீர்.

அறிவு மதி பெயர் குடுத்திருக்கான்னா, அதுல அர்த்தம் இருக்கு! பள்ளியில் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் எழுதிக்கிட்டிருப்பா. அவ எழுதற தமிழ்க் கட்டுரையில்கூட கவிதை வாசம் இருக்குன்னு, ஒரு சிலவற்றை அடிக்கோடிட்டுக் கொண்டுவந்து தமிழாசிரியர் வகுப்பில் படிச்சுக் காட்டுவார். அந்த அளவுக்குத் திறமை உள்ளவ பேர் குடுத்திருக்கா. உன் முயற்சி வீண் முயற்சிடா. அதுவும் அறிவுமதி கூட போட்டி போட்டு உன்னால் ஜெயிக்க முடியுமா?" உசுப்பேற்றினான் முருகன்.

"ஜெயிக்கிறேனா இல்லையாங்கிறத போட்டி முடிவு வரும்போது தெரிஞ்சுக்குவீங்க. 'இளங்கவி' பட்டத்தை நான் வாங்குகிறேனா இல்லையாங்கிறதைக் கொஞ்சம் பொறுத்திருந்து பாருங்க" சவாலாய்ச் சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தான் ஜோசப்.

ஜோசப்பும் அறிவுமதியும் ஒரே வகுப்பில் படிப்பவர்கள். அறிவுமதி படிப்பில் கெட்டிக்காரி. ஓய்வு நேரங்களில் கையில் குறிப்புச் சுவடியுடன் நூலகத்திற்குச் சென்று விடுவாள். எப்போதும் எதையாவது படித்துக் குறிப்பெடுத்துக் கொண்டிருப்பாள். ஆண்டு விழாவில் பரிசளிப்பு நிகழ்ச்சியின்போது அறிவுமதியின் பெயர்தான் அடிக்கடி ஒலிக்கும். அதைக் கண்டு பல நேரங்களில் எரிச்சல்பட்டிருக்கிறான் ஜோசப். அறிவுமதி பரிசு பெறும்போதெல்லாம் தனக்கு ஏதோ அகௌரவம் நடப்பதாக ஒருவகை உணர்வு அவன் மனத்தில் தோன்றும்.

ஜோசப்பும் படிப்பில் படுசுட்டிதான். இருந்தாலும் ஒரு தேர்வில்கூட அறிவு மதியை வென்று முதல் இடம் பெற அவனால் முடியவில்லை. அதிக மதிப்பெண் எடுத்து அவளை வென்று காட்ட வேண்டும் என்பதே அவனுக்குக் கடுமுயற்சியாய் இருந்ததனால் பிற வகைப் போட்டிகளில் அவனால் கவனம் செலுத்த இயலவில்லை. வெறுத்துப் போயிருந்த நேரத்தில்தான் இந்தக் கவிதைப் போட்டி பற்றிய அறிவிப்பு வந்திருந்தது.

‘எப்படியாவது இந்த இளங்கவி பட்டத்தை வாங்க வேண்டும். பள்ளி இறுதி வகுப்பில் படிக்கிறோம். இந்த ஆண்டில் நடைபெற இருக்கும் கடைசிப் போட்டியும் இதுதான். இதைத் தவறவிட்டால் வேறு வாய்ப்புமில்லை. என்ன செய்வது?’ என்று ஜோசப் தீவிரமாய்ச் சிந்தித்தான். அப்போது அவன் மனம் ஓர் அற்புதமான யோசனையைத் தர, ‘நிச்சயம் வென்று விடலாம்’ என்ற நினைப்பில், தன் பெயரைப் பதிவு செய்து கொண்டான்.

ஜோசப் படிக்கும் பள்ளியில் தமிழாசிரியராய்ப் பணிபுரியும் கன்னியப்பன், ஜோசப் வீட்டின் மாடிப் பகுதியில்தான் குடியிருக்கிறார். அவரின் துணையுடன், எப்படியாவது இந்தப் போட்டியில் வென்றுவிடலாம் என்பது அவன் திட்டமாக இருந்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. தமிழாசிரியர் கன்னியப்பனைப் பார்ப்பதற்காக மாடிக்குப் போனான் ஜோசப். வா... ஜோசப், என்ன செய்தி?” தனக்கே உரிய மெல்லிய புன்னகையுடன் அவனைப் பார்த்துக் கேட்டார்.

“ஒன்னுமில்லை சார். நம்ம பள்ளியிலே ‘தன்னம்பிக்கை’ அப்படிங்கிற தலைப்பில் நடக்கும் கவிதைப் போட்டியில் நான் பெயர் கொடுத்திருக்கேன்.”

“ரொம்ப மகிழ்ச்சி! ஆர்வம்தான் முயற்சிக்கு அடிப்படை. முறையான முயற்சியே வெற்றிக்கு ஆதாரம். நீ வெற்றிபெற என் நல் வாழ்த்துகள்.”

“ரொம்ப நன்றி சார். போட்டி தொடர்பாதான் உங்க உதவியை நாடி வந்திருக்கேன்.”

“என்னோட உதவியா? என்ன வேணும் சொல்லு?”

“சார்... எனக்குக் கவிதை எழுதி அவ்வளவா பழக்கம் இல்லை. ஏதோ ஓர் அசட்டுத் தைரியத்தில் போட்டியில் பேர் கொடுத்திட்டேன். கலந்துக்காம போயிட்டா, வகுப்பு மாணவ மாணவியர் மத்தியில் கேவலமாயிடும். நீங்கதான் எனக்கு எப்படியாவது....” தயங்கித் தயங்கிக் கூறினான். அவன் என்ன சொல்ல வருகிறான் என்பதைப் புரிந்துகொண்ட ஆசிரியர் “சரி அந்தத் தலைப்பில் நீ கவிதையை எழுதிக் கொண்டு வா. அதை நான் திருத்தி ஒழுங்குபடுத்தித் தருகிறேன்” என்றார்.

“நான் முயன்றேன். எனக்குச் சரியா வர மாட்டேங்குது. மேலும் நீங்களே எனக்கு எழுதிக் கொடுத்திங்கன்னா... வெற்றி உறுதியாயிடும்” தயக்கமில்லாமல் கேட்ட ஜோசப்பைப் பார்த்து, “அப்படியா, நானே எழுதித் தரணுமா... ? கொஞ்சம் பொறு” என லேசான புன்னகையுடன் அவனைப் பார்த்துக் கூறிவிட்டு உள்ளே சென்றவர், சற்று நேரம் கழித்துத் திரும்பி வந்தார். அவர் கையில் பழைய வாரப் பத்திரிகை ஒன்று இருந்தது.

இருக்கையில் அமர்ந்து, அதன் பக்கங்களைப் புரட்டியவர், “இதோ... ” எனக் கூறியபடியே அந்த இதழை மடித்து அவன் கையில் கொடுத்தார்.

‘தன்னம்பிக்கை’ என்ற தலைப்பில் யாரோ எழுதிய ஒரு கவிதை அதில் இருந்தது.

“தன்னம்பிக்கை என்ற தலைப்பில் உனக்கு ஒரு கவிதை தானே வேண்டும். இதை எழுதிக்கொள்” என்றார்.

“ஐயா! இது வேறு யாரோ எழுதி, பத்திரிகையிலே வெளிவந்திருக்கே” தயங்கினான் ஜோசப்.

“அதனா லென்ன? உன்னைப் பொறுத்தவரை யாராவது எழுதிக் கொடுத்து, நீ பரிசு வாங்கணும், அதுதா்னே உன் நோக்கம்?”

“இல்லை ஐயா ! நீங்க எழுதிக் கொடுத்திங்கன்னா... நீங்கதான் எழுதிக் கொடுத்தீங்கன்னு யாருக்கும் தெரியாது...”

“ இது நல்ல வேடிக்கை ஜோசப்! வேறு ஒருத்தர் எழுதிக் கொடுத்து, அதை நீ பயன்படுத்திக்கனும். ஆனா அது வேறு ஒருத்தர் எழுதிக் கொடுத்ததுதான் என்று யாருக்கும் தெரியக்கூடாது. இது கேவலமில்லையா? தப்பில்லையா? நான் ஒன்று கேட்கிறேன், பதில் சொல்லு. நீ கடுமையாக உழைத்துக் கண் விழித்துப் படித்துத் தேர்வு எழுதுகிறாய். தேர்வு அறையில் படிப்பில் ஆர்வமில்லா மாணவன், யாருமறியாமல் புத்தகத்தைப் பார்த்து முழுமையான விடை எழுதுகிறான். அதன் காரணமாக அந்த மாணவன் உன்னைவிட அதிக மதிப்பெண் பெற்று வெற்றி பெற்றால், உன் மனநிலை எப்படியிருக்கும்? நீ அதை நினைத்துக் கொதிப்படைய மாட்டாயா? கோபப்படமாட்டாயா? ஆசிரியர் என்ற முறையில் உன் வெற்றிக்கு நான் துணையிருக்கலாமே யொழிய, நானே முழு முயற்சி செய்து உன் வெற்றியை அமைத்துத் தருபவனாக இருப்பது நியாயமானது அன்று. அப்படிச் செய்தால், அது உன் முயற்சியை முளையிலேயே கிள்ளி எறிவதைப் போலாகும். சுயமாக முயற்சி செய் ஜோசப். ஒரு வேளை அந்த முயற்சியில் உனக்குத் தற்போது வெற்றி கிடைக்காமல் போகலாம். ஆனால் எதிர்காலத்தில் நீ பெறப்போகும் வெற்றிகட்கு அது ஒரு வலுவான படிக்கல்லாகவாவது அமையும் என்பதில் சந்தேகமில்லை.”

தன் தவறை மிக நயமாக உணர்த்திய ஆசிரியர் கன்னியப்பனை நன்றியோடு கை கூப்பித் தொழுதான் ஜோசப். ஆசிரியரின் வார்த்தைகள் அவன் மனத்தில் நம்பிக்கையையும் தைரியத்தையும் தோற்றுவித்தன. ‘நிச்சயம் இந்தப் போட்டியிலிருந்து பின்வாங்கப் போவதில்லை’ என்ற தன்னம்பிக்கை அவனுக்குப் பிறந்தது.

**(திரு மு. நடராஜன் எழுதிய சிறுகதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பெற்றது)**

# 10. இரண்டு வினாக்கள்

கோமேதக நாட்டின் மன்னர் மகுடபதிக்குத் திடீரென ஒரு சந்தேகம் ஏற்பட்டது. அந்தச் சந்தேகம் இரண்டு வினாக்களாக உருப்பெற்று, அவர் மனத்தை அரிக்கத் தொடங்கியது.

'இந்த உலகில் மிக மிக உயர்ந்தவர் யார்? இந்த உலகில் மிக மிகத் தாழ்ந்த அறிவிலி யார்?' இவைதாம் அவர் மனத்தை நெருடிக் கொண்டிருந்த இரண்டு வினாக்கள். 'இந்த வினாக்களுக்கு விடை காண்பது எப்படி?' யோசிக்கத் தொடங்கினார் மன்னர். அதன் விளைவு, ஊரெங்கும் முரசு ஒலிக்கப்பட்டது.

"நாளை மக்கள் சபை கூடும். மன்னரின் இரண்டு வினாக்களுக்குச் சரியாக யார் பதிலளிக்கிறாரோ அவருக்கு இளவரசி தெய்வானை மணம் முடித்துத் தரப்படுவாள். இது அரசர் ஆணை."

கூடியிருந்த கூட்டம் முரசு ஒலிப்பவனின் இந்த அறிவிப்பைக் கேட்டு வியந்து நின்றது. இளவரசியை மணந்து கொள்ள யாருக்குத்தான் ஆசை இருக்காது? மறு தினம் பலர் அரச சபைக்குச் செல்லத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டனர்.

மறு நாள் அரச சபை கூடியது. அமைச்சர் எழுந்தார். அரியணையில் அமர்ந்திருந்த மன்னர் மகுடபதியையும் அரசியையும் அவர்களுக்கு எதிரே அமர்ந்திருந்த இளவரசி தெய்வானையையும் வணங்கிவிட்டுக் கூட்டத்தைப் பார்த்துப் பேசினார்.

"அரசர் மனத்தில் இரண்டு வினாக்கள் உள்ளன. 'உலகில் மிகமிக உயர்ந்தவர் யார்?' இது முதல் வினா. 'உலகில் மிக மிகத் தாழ்ந்த அறிவிலி யார்?' இது இரண்டாம் வினா. முதல் வினாவுக்குச் சரியான பதிலைச் சொல்பவர், அடுத்த வினாவுக்கும் பதில் கூற அனுமதிக்கப்படுவார். இரண்டு வினாக்களுக்கும் சரியான பதில்

சொல்பவருக்குக் கேட்கும் பரிசுகள் தரப்படும். தவிர இளவரசி தெய்வானையும் மணம் முடித்துத் தரப்படுவார்.''

சொல்லி விட்டு அமைச்சர் அமர்ந்தார். போட்டி தொடங்கியது. வரிசையாகப் பலர் மன்னரின் வினாக்களுக்குப் பதில் சொல்லத் தொடங்கினர். ஊஹூம் ! எந்தப் பதிலும் மன்னருக்கு மன நிறைவு தரவில்லை. அப்போது, இடையில் முழங்கால் அளவு உடையுடன், சட்டையின்றி, கரத்தில் நீண்ட கம்புடன் மன்னரின் முன்னே வந்து நின்றான் ஒருவன்.

''அரசே, வணக்கம் ! ஆயர் பாடி ஏழை இளைஞன் நான். என் பெயர் வீரபத்திரன். நான் தங்கள் வினாக்களுக்குப் பதில் கூறலாமா?''தயக்கத்துடன் கேட்டான் வீரபத்திரன்.

'' எல்லாக் குடி மக்களும் எனக்கு ஒன்றே! உன் பதிலைத் தயங்காமல் சொல்'' என்றார் மன்னர்.

''நன்றி மன்னா'' என்ற வீரபத்திரன் ''இந்த உலகில் மிகமிக உயர்ந்தவர் தாய்தான்'' என்றான் நிதானமாக.

''விளக்கம் தேவை'' என்றார் மன்னர்.

''சொல்கிறேன் மன்னா'' என்ற வீரபத்திரன் தொடர்ந்தான். ''இந்த உலகில் நம்மைப் பெற்றெடுப்பவள் தாய்தான். தாயைத் தெய்வமாகப் போற்றும் பண்பாடு நம்முடையது. அனைத்தையும் நாம் அன்னை உருவிலேயே பார்க்கிறோம். நாட்டை நாம் 'தாய் நாடு' என்கிறோம். நம் மொழியை நாம் 'தாய் மொழி' என்கிறோம். இந்தப் பூமியை நாம் நம் 'அன்னை பூமி' என்கிறோம். நதிகளைக்கூட நாம் தாயெனக் கருதி, பெண் பெயரால் 'யமுனா, கங்கா, காவேரி' என அழைக்கிறோம். அவ்வளவு ஏன்? வாய் பேசத் தெரியாத பசுவை நாம் தெய்வமாக வணங்குகிறோம். அந்தப் பசுவுக்குத் தெரிந்த ஒரே வார்த்தை 'அம்மா' தான் ....''

''சபாஷ் வீரபத்திரா'' என்று உற்சாகத்தில் கூவிய மன்னர், ''சரியான விடையைச் சொன்னாய்! இருப்பினும் எனக்கு ஒரு

சந்தேகம்'' என்று மன்னர் கூறவும், வீரபத்திரனுக்கு எதுவும் புரியவில்லை.

"என்ன மன்னா?"

"மாடு மேய்க்கும் ஆயர்பாடி இளைஞனான நீ, குரு குலத்தில் பயின்றாயா?"

"இல்லை மன்னா! மாடு மேய்த்துக்கொண்டே, குரு குல மாணவர்கள் படிப்பதைக் கேட்பேன். எல்லாம் கேள்வி ஞானம்தான்."

"நல்லது, என் இரண்டாவது வினாவுக்கான பதிலைச் சொல்."

"மன்னர் அவர்கள் என்மேல் சினம் கொள்ள மாட்டீர்கள் என்று உறுதி தந்தால், பதில் சொல்வதில் எனக்குத் தயக்கமேதும் இல்லை."

சற்றே சிரித்தார் மன்னர். பின் "சினம் கொள்ள மாட்டேன். வீரபத்திரா, தைரியமாகப் பதிலைச் சொல்" என்றார்.

"உங்கள் இரண்டாவது வினாவுக்குச் சரியான விடை நீங்களே தான்" என்றான் வீரபத்திரன்.

"என்ன?" திடுக்கிட்ட மன்னர், கோபத்தோடு இருக்கையை விட்டு எழுந்தார்.

"மன்னா! இப்போதுதான் 'கோபம் கொள்ளமாட்டேன்' என்று வாக்குறுதி கொடுத்தீர்கள்..."

"ஆமாம்... ஆமாம்... "என்று சினம் தணிந்து அமர்ந்த மன்னர், "விளக்கம் தேவை" என்றார்.

"அரசே ! நீங்கள் தவமிருந்து பெற்று, சீராட்டி வளர்த்து ஆளாக்கிய பெண்தானே இளவரசி தெய்வானை..... இல்லையா?"

"ஆமாம்"

"இந்த நாட்டு வழக்கப்படி, தன்னுடைய வாழ்க்கையை முடிவு செய்ய வேண்டியவர் இளவரசி அவர்கள்தானே! அந்த உரிமை அவர்களுக்கு மட்டுமே உண்டு இல்லையா?"

"ஆமாம்"

"ஏதோ இரண்டு வினாக்களுக்குப் பதில் கேட்பதன் மூலம், வீம்புக்காக இளவரசியின் திருமணம் தொடர்பாகத் தலையிட

உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? சரியான பதிலைச் சொன்ன ஒரே காரணத்துக்காக, அந்த நபருக்கு இளவரசியை மணம் முடித்துத் தருவதாக நீங்கள் சொன்னது எந்த விதத்தில் நியாயம்? இளவரசியின் ஒப்புதல் கேட்காமல் இப்படி நீங்கள் முடிவு செய்தது ஏன்? சரியான பதிலைச் சொன்ன எனக்கு இளவரசியை மணந்துகொள்ள என்ன தகுதி இருக்கிறது? இளவரசியார் மனம்தான் இதை ஏற்குமா? அவர் உணர்வுக்கு நீங்கள் என்ன மதிப்பு அளித்தீர்கள்? எனவே, இப்படி அவசரப்பட்டு முடிவு எடுத்த நீங்களே உங்களது இரண்டாவது கேள்விக்குச் சரியான பதிலாகிறீர்கள்'' வீரபத்திரன் பேசி முடித்தான்.

'' சபாஷ், வீரபத்திரா ! சபாஷ் ! உன் அறிவுத் திறமையை மெச்சினோம். உன் விளக்கம் என் கண்களைத் திறந்து விட்டது. உனக்கு என்ன வேண்டும் ? கேள்'' மகிழ்வோடு கேட்டார் மன்னர் மகுடபதி.

'' மன்னா ! அரச குலத்தில் இளவரசி விரும்பும் மணமகனைத் தேர்வு செய்து, அவருக்கு மணம் முடித்து வையுங்கள்.''

'' ஆகட்டும். அப்புறம் ?''

''இனி இந்த மாதிரிப் போட்டி எதையும் அறிவிப்பதில்லை எனத் தாங்கள் உறுதி கூற வேண்டும். வேறு எதுவும் எனக்கு வேண்டாம்'' என்றான் வீரபத்திரன்.

''நீ சொன்னதை நான் ஏற்றுக் கொள்கிறேன். வாய்ப்புக் கிடைத்தும் இளவரசியை மணந்து, அரச செல்வத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற பேராசைக்கு அடிமையாகாத உன் பெருந்தன்மைக்கு நான் தரும் இந்த, எனது அன்புப் பரிசையாவது பெற்றுக்கொள்.''

'' நன்றி மன்னா'' என்று கூறிவிட்டுப் பரிசுடன் நடந்தான் வீரபத்திரன்.

(2000 - பிப்ரவரி திங்களில் வெளிவந்த 'கோகுலம்' இதழில் எம்.மல்லிகா எழுதிய சிறுகதை)

## பயிற்சி வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

### 1. ஏழைக்கு நீதி கிடைத்தது

1. பலராமனைக் குற்றவாளி எனக் கூறிக் கைது செய்யக் காரணம்............
   அ. செம்மண் கட்டியைக் கையில் வைத்திருந்தமை
   ஆ. சுவரில் கிராமத் தலைவரைப் பற்றி அவதூறாக எழுதியமை
   இ. கையில் செம்மண் கட்டியை வைத்து விளையாடியமை

2. பலராமன் ஒரு வீட்டுத் திண்ணையில் ------------
   அ. படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான்
   ஆ. செம்மண் கட்டியால் எழுதிக் கொண்டிருந்தான்
   இ. செம்மண் கட்டியைக் கையில் வைத்து விளையாடிக் கொண்டிருந்தான்

3. பஞ்சாயத்தார் பலராமனைக் குற்றவாளி எனக் கூறிய காரணம்------------
   அ. கிராமத் தலைவரின் பணியாளர் அவனைக் குற்றவாளி எனக் கூறியமை
   ஆ. செம்மண் கட்டியால் பலராமன் அவதூறாக எழுதியமை
   இ. செம்மண் கட்டியை அவன் கையில் வைத்திருந்தமை

4. சிறுவர் அனைவரையும் 'எங்கள் கிராமம் நல்ல கிராமம்' என நானா எழுதச் சொன்னது ஏன்?
   அ. சிறுவர் தவறின்றி எழுதுகின்றனரா எனப் பார்க்க
   ஆ. கையெழுத்து அழகாக எழுதுகின்றனரா எனப் பார்க்க
   இ. சுவரில் உள்ள கையெழுத்தையும், சிறுவர் கையெழுத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க

5. நானா குற்றவாளியை எப்படிக் கண்டுபிடித்தார்?
   அ. கையெழுத்து ஒற்றுமை நோக்கி
   ஆ. கையெழுத்தும் எழுத்துப் பிழையும் நோக்கி
   இ. கையெழுத்தில் பிழை இல்லாததை நோக்கி

### 2. நான் செலவு செய்த விதம்

1. அரசர் உழவனிடம் 'ஒரு நாளில் எவ்வளவு சம்பாதிக்கிறாய்?' எனக் கேட்டதன் காரணம்........
   அ. உழவனின் ஊதியத்தை அறிய
   ஆ. அவன் மகிழ்ச்சிக்குரிய காரணத்தை அறிய
   இ. வருமானக் குறைவால் துன்பப்படுகிறானா என அறிய

2. ஒரு பணத்தால் கடனை அடைக்கிறேன் - என்பதன் மூலம் உழவன் எதைக் குறிக்கிறான்?
   அ. பயிர் செய்ய வாங்கிய கடனை அடைத்தலை
   ஆ. பிள்ளைகளுக்குச் செலவு செய்தலை
   இ. பெற்றோருக்கு உணவு அளித்துப் பாதுகாத்தலை

3. அமைச்சர் உழவனிடம் புதிருக்குரிய விடையைக் கேட்ட காரணம்,.............
அ. தான் முதலில் விடையளிக்க எண்ணியதால்
ஆ. நூறு பொற்காசுகள் பெறும் விருப்பத்தால்
இ. அரசவையில் தம் மதிப்பு உயரும் என்பதால்

4. உழவன் சம்பாதித்த பணத்தைச் செலவு செய்த சரியான முறை எது?
அ. பயன் கருதாமல் கொடுத்தல் - கடனை அடைத்தல் - கடன் கொடுத்தல்- சாப்பிடுதல்
ஆ. சாப்பிடுதல் - கடன் கொடுத்தல் - கடனை அடைத்தல்- பயன் கருதாமல் கொடுத்தல்
இ. கடன் கொடுத்தல் - சாப்பிடுதல் - கடனை அடைத்தல் - பயன் கருதாமல் கொடுத்தல்

5. இக் கதைக்குப் பொருத்தமான வேறொரு தலைப்பு......
அ. திட்டமிட்டுச் செலவு செய்தவன்
ஆ. சீரிய முறைப்படி செலவு செய்தவன்
இ. எண்ணி எண்ணிச் செலவு செய்தவன்

## 3. உலகைக் காப்போம்

1. கணிப்பொறியை இயக்கிக் கொண்டிருந்த பிரபு........
அ. கணிப்பொறியில் கி.பி.2500 காட்சியைக் கண்டான்
ஆ. திடீரென அதனை இயக்க மறந்தான்
இ. அப்படியே தூங்கிக் கனவு கண்டான்

2. கி.பி.2500 இல் வாழும் மக்கள், அபூர்வத் தோற்றம் உடையவராய் இருந்ததற்கு அங்குள்ள மனிதன் கூறிய காரணம்........
அ. படைப்புகள் இவ்வாறுதான் உள்ளன
ஆ. ஓசோன் மண்டல அழிவே காரணம்
இ. அறிவியல் வளர்ச்சியே காரணம்

3. கீழ் உள்ள தொடர்களுள் 'உலகைக் காப்போம்' பாடத்துக்குப் பொருந்தாதது எது?
அ. உலகச் சூழ்நிலை சிறப்பாக உள்ளது
ஆ. மரங்களை வெட்டுதல் மண் அரிப்புக்குக் காரணம்
இ. சுற்றுச் சூழல் மிகவும் மாசடைந்துள்ளது

4. சூரியனிலிருந்து வெளிப்படும் புற ஊதாக் கதிர்கள்...............
அ. உயிரினங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்
ஆ. உயிரினங்களுக்குத் தீங்கு விளைவிக்கும்
இ. ஓசோன் படுகையைப் பாதுகாக்கும்

5. இப் பாடத்துக்குப் பொருத்தமான வேறு தலைப்பு............
அ. கனவுக் காட்சி ஆ. சுற்றுச் சூழல் பாதுகாப்பு
இ. ஓசோன் மண்டல அழிவு

## 4. மாறியது நெஞ்சம்

1. 'பம்மல்' என்னும் சிற்றூர் சென்னையிலிருந்து ......... தொலைவில் உள்ளது.
   அ. எட்டுக் கி.மீ. தொலைவில்
   ஆ. பத்துக் கி.மீ. தொலைவில்
   இ. பதினெட்டுக் கி.மீ.தொலைவில்
2. செல்வன் இளங்கோவுக்கு அடிபடக் காரணம் ...........
   அ. சாலையில் ஓடிப் பிடித்து விளையாடும் பொழுது லாரி மோதியது
   ஆ. சாலையைக் கடந்த சிறுவனைக் காப்பாற்றச் சென்றபோது லாரி மோதியது
   இ. விளையாடும் பொழுது கீழே விழுந்தது

3. பேருந்திலிருந்த வாலிபன் அகிலாவிடமிருந்து பத்து ரூபாயை வாங்கியதேன்?
   அ. அகிலாவுக்குப் பயணச்சீட்டு வாங்குவதற்காக
   ஆ. பிறருக்கு உதவவேண்டும் என்ற நல்லெண்ணத்தால்
   இ. பயணச் சீட்டு வாங்குவது போலப் பணத்தை எடுத்துச் செல்லும் எண்ணத்தால்

4. மாறியது நெஞ்சம் கதையில் மிகச் சிறந்தவர்......
   அ. பேருந்து நடத்துநர்
   ஆ. மருத்துவர்
   இ. பேருந்தில் பயணம் செய்த வாலிபன்

5. 'வச்சிக்கிட்டு இருக்கிறீங்க' - என்ற பேச்சு வழக்குக்குச் சரியான எழுத்து வழக்கு ..........
   அ. வச்சுக்கொண்டு இருக்கிறீர்கள்
   ஆ. வைத்துக்கொண்டு இருக்கிறீர்கள்
   இ. வைத்துக்கொண்டு இருக்கீங்க

## 5. வீண் கனவின் விளைவு

1. அபூபக்கரைப் பற்றி மூன்று தொடர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பொருந்தாதது எது?
   அ. அபூபக்கர் உள்ளதேபோதும் என மன நிறைவுடன் வாழ்ந்தான்
   ஆ. அபூபக்கர் பிறரைக் கண்டு பொறாமைப்பட்டான்
   இ. அபூபக்கர் பெருஞ் செல்வந்தனாகத் துடித்தான்

2. அபூபக்கர் கனவில் கண்ட நிகழ்ச்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பொருந்தாதது எது?
   அ. அளவற்ற செல்வம் அவனை வந்தடைந்தது
   ஆ. வணிகத்தில் தோல்வியுற்று மிகவும் ஏழையானது
   இ. அபூபக்கர் இளவரசியை மணந்தது

3. கூடையிலுள்ள பீங்கான்கள் சிதறுண்டு உடைந்ததற்குக் காரணம்.....
   அ. கூடை கைதவறிக் கவிழ்ந்தது
   ஆ. அபூபக்கர் வேண்டுமென்றே உதைத்துத் தள்ளியது
   இ. அபூபக்கர் கனவு நிலையில் கூடையை உதைத்தது

4. அபூபக்கர் கனவு காணும்போது காலால் எட்டி உதைத்தது ஏன்?
அ. தூக்கத்தில் காலால் உதைத்தான்
ஆ. தன் அதிகாரத்தைக் காட்ட இளவரசியைக் காலால் உதைத்தான்
இ. தற்செயலாகக் கூடையை உதைத்து விட்டான்

5. 'வீண் கனவின் விளைவு' கதைக்கு வேறு பொருத்தமான தலைப்பு.
அ. பேராசை பெருநஷ்டம்
ஆ. கனவினால் வந்த கேடு
இ. கனவு நனவாகுமா?

## 6. நன்றி மறந்த தவளை

1. தவளை வேறு குளத்திற்குப் போகவேண்டும் என எண்ணியதற்குக் காரணம்........
அ. நீண்டநாள் அதே குளத்திலிருந்த சலிப்பினால்
ஆ. குளத்து நீர் பிடிக்காததால்
இ. குளத்து நீர் வற்றத் தொடங்கியதால்

2. எலியின் மகிழ்ச்சிக்குக் காரணம்.........
அ. தவளை தன்னோடு உரையாடியமை
ஆ. தவளை வேறு இடத்திற்குப் போகவேண்டும் எனக் கூறியமை
இ. நீர் நிறைந்த ஒரு குளத்தைக் கண்டமை

3. நன்றி மறந்த தவளை - கதையின் நிகழ்ச்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன. எது சரியான வரிசை ..............
அ. தவளை நீரில் குதித்தது - எலி நீரில் மிதந்தது - எலியும் தவளையும் கால்களைக் கட்டிக் கொண்டன - பருந்து எலியைத் தூக்கிச் சென்றது
ஆ. எலியும் தவளையும் கால்களைக் கட்டிக் கொணடன - தவளை நீரில் குதித்தது - எலி நீரில் மிதந்தது - பருந்து எலியைத் தூக்கிச் சென்றது.
இ. எலி நீரில் மிதந்தது - பருந்து எலியைத் தூக்கிச்சென்றது - தவளை நீரில் குதித்தது - எலியும் தவளையும் கால்களைக் கட்டிக்கொண்டன.

4. எலி இறந்ததற்குக் காரணம் .........
அ. தன்னலம் உடைய தவளையுடன் நட்புச் செய்தமை
ஆ. தவளை நீரில் குதித்தமை
இ. தவளையும் எலியும் தங்கள் கால்களைக் கட்டிக் கொண்டமை

5. 'நன்றி மறந்த தவளை' கதையின் மூலம் நாம் அறியும் நீதி..... ..
அ. ஒத்த இயல்பினரோடு நட்புச் செய்யவேண்டும்
ஆ. தன்னலமிக்கவரோடு நட்பு செய்தல் ஆகாது
இ. ஆராயாது செயல்படல் தவறு

## 7. ஔவைக்குத் தந்த நெல்லிக் கனி

1. அதியமான் ஔவைக்கு நீண்ட நாள் பரிசு வழங்காமைக்குக் காரணம்.....
அ. பரிசு கொடுக்க விருப்பமில்லாமை
ஆ. நீண்ட நாள் தன்னோடு தங்க வைக்க விரும்பியமை
இ. அவனிடம் கொடுக்கத் தக்க பரிசுகள் இல்லாமை

2. ஔவையார் தகடூரை விட்டுப் புறப்பட்டது ஏன்?
அ. நீண்ட நாள் அதியமான் நாட்டில் தங்கியதால்
ஆ. அதியமான் பரிசில் தரக் காலம் நீடித்ததால்
இ. பிற நாடுகளைக் காண வேண்டும் எனும் விருப்பத்தால்

3. அதியமான் நெல்லிக் கனியை ஔவைக்குக் கொடுத்தது ஏன்?
அ. அதியமானுக்கு நெல்லிக்கனி பிடிக்காததால்
ஆ. ஔவையார் நீண்ட காலம் வாழ வேண்டும் என விரும்பியதால்
இ. நெல்லிக் கனியைக் கொடுத்துப் புகழ்பெற விரும்பியதால்

4. ஔவைக்கு நெல்லிக் கனி தந்த நிகழ்ச்சியிலிருந்து அறிவது .......
அ. மன்னர் புலவரைப் போற்றியமையை
ஆ. மன்னர் தமிழ்ப் புலவர் நீண்ட காலம் வாழ வேண்டும் என எண்ணியமையை
இ. மன்னர் - புலவர் உறவு நன்கு அமைந்திருந்தமையை

5. 'ஔவைக்குத் தந்த நெல்லிக் கனி' கதைக்குப் பொருத்தமான வேறு தலைப்பு
அ. ஔவை பெற்ற நெல்லிக் கனி
ஆ. அபூர்வ நெல்லிக் கனி
இ. அதியமானும் நெல்லிக் கனியும்

## 8. வள்ளல் வடிவேலு

1. பெருங்குடி என்னும் சிற்றூரில் புல்லாங்குழல் ஊதுவதில் வல்லவன்.......
அ. கந்தசாமி ஆ. ஆறுமுகம் இ. வடிவேலு

2. கந்தசாமியிடம் மக்கள் பலர் சென்ற காரணம்.......
அ. விபத்தில் கை, கால் இழந்ததைப் பார்க்க
ஆ. சிறந்த அறிவு படைத்த அவருக்கு மரியாதை செய்ய
இ. தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவு பெற

3. பூங்கொடியை அறிவுள்ள பெண் என வடிவேலு கூறக் காரணம்.........
அ. பூங்கொடி நன்றாகப் பேசியதைக் கேட்டதால்
ஆ. நீங்கள் எப்படி வள்ளலாக ஆனீர்கள் எனப் பூங்கொடி வினவியதால்
இ. பெருங்குடிக்கு வந்த பூங்கொடி தன்னை வந்து கண்டதால்

4. 'பிறருக்குக் கொடுக்க வேண்டும்' என வடிவேலு எண்ணியதற்கு அடிப்படை.......
அ. பொருளைப் பெறுவதால் பிறர் மகிழ்வர் என எண்ணியது
ஆ. வித்தைக்காரன் ஒவ்வொரு பொருளாகக் கொடுத்தபொழுது குழந்தைகள் மகிழ்ந்தமை
இ. தன்னிடம் மிகுந்த செல்வம் இருந்தமை

5. கீழ் உள்ள இரு தொடர்களைப் பற்றிச் சில குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சரியான குறிப்பு எது?

தொடர் - 1. கந்தசாமி புல்லாங்குழல் வாசிப்பதில் வல்லவர்
தொடர் - 2. ஆறுமுகம் அறிவிற் சிறந்தவர்

அ. இரண்டும் சரி
ஆ. இரண்டும் தவறு
இ. தொடர் - 1. சரி தொடர் - 2. தவறு

## 9. தன்னம்பிக்கை

1. கவிதை படைத்து வெற்றி பெறுவோருக்கு வழங்கப்படும் பரிசுகளின் எண்ணிக்கை
அ. ஒன்று ஆ. இரண்டு இ. மூன்று

2. கவிதைப் போட்டிக்கு முதலிலேயே பெயர்கொடுத்தவர்
அ. நசீர் ஆ. ஜோசப் இ. அறிவுமதி

3. அறிவுமதி போட்டிகளில் வெற்றி பெற்றதற்குக் காரணம் .........
அ. படிப்பில் கெட்டிக்காரத்தனம்
ஆ. நூலகத்துக்குச் சென்றமை
இ. எதையாவது படித்து எப்பொழுதும் குறிப்பெடுத்தமை

4. கவிதைப் போட்டியில் பரிசு பெற்றிட ஜோசப் திட்டமிட்ட முறை.....
அ. பல நூல்களைப் படித்துச் செய்தி திரட்டுதல்
ஆ. இரவும் பகலும் கவிதை எழுதிப் பழகுதல்
இ. தமிழாசிரியர் கன்னியப்பன் உதவியைப் பெறுதல்

5. தன்னம்பிக்கை வேண்டும் என்பதை ஜோசப்புக்குத் தமிழாசிரியர் உணர்த்த...
அ. பல கருத்துகளைக் கூறினார்
ஆ. பிறர் எழுதியதை அவன் பெயரில் போடச் சொன்னார்
இ. புத்தகத்தைப் பார்த்து எழுதி வெற்றி பெறுதல் தவறு என்பதை எடுத்துக்காட்டு மூலம் கூறித் திருத்தினார்

## 10. இரண்டு வினாக்கள்

1. 'இரண்டு வினாக்கள்' கதையோடு தொடர்புடைய பின்வரும் மூன்று தொடர்களுள் கதைக்குப் பொருந்தாதது ............
அ. இரண்டு வினாக்களுக்கும் விடையளிப்பவர் அமைச்சர் ஆவார்
ஆ. இரண்டு வினாக்களுக்கும் விடையளிப்பவர் மன்னரின் பாராட்டைப் பெறுவார்
இ. இரண்டு வினாக்களுக்கும் விடையளிப்பவர் இளவரசியை மணம் புரியும் தகுதியுடையவர் ஆவார்

2. வீரபத்திரன் என்பவன் .......
அ. குருகுல மாணவன்
ஆ. ஆயர்பாடி இளைஞன்
இ. செல்வக் குடும்பத்தைச் சேர்ந்தவன்

3. இரண்டாம் வினாவுக்கு 'மன்னன் மகுடபதியே விடை'' என வீரபத்திரன் சொன்னமைக்குக் கூறிய காரணம்......
அ. இளவரசியைக் கேட்காமலே அவள் கணவனை மன்னன் முடிவு செய்தமை
ஆ. வினாக்களைக் கேட்கும்முன் அவை பற்றி எண்ணாதது
இ. வினாக்கள் இரண்டும் பொருத்தமாக இல்லாமையால்

4. வீரபத்திரனுக்கு மன்னர் பரிசு வழங்கிய காரணம்....
அ. இரண்டு வினாக்களுக்கும் சரியாக விடையளித்தமை
ஆ. அழகாகவும் முறையாகவும் பேசியமை
இ. வாய்ப்பு கிடைத்தும் இளவரசியை மணக்காது பெருந்தன்மையுடன் மறுத்தமை

5. 'இரண்டு வினாக்கள்' கதைக்கு வேறு பொருத்தமான தலைப்பு ........
அ. தாழ்ந்த அறிவிலி யார்?
ஆ. உலகிற் சிறந்தவர் யார்?
இ. இரண்டு வினாக்களும் ஆயர்பாடிச் சிறுவனும்

## II. கீழ் உள்ள தலைப்புகள் குறித்து 15 வரிகளில் எழுதுக.

1. நானா உண்மையான குற்றவாளியை கண்டு பிடித்தமை.
2. சத்தியத்தை மீறாமல் செயல்பட உழவனுக்கு அமைச்சர் காட்டிய வழி.
3. பிரபு கண்ட கனவுக் காட்சியும் அதன் விளைவும்.
4. விபத்தில் சிக்கிய சிறுவனை அழைத்துக்கொண்டு மருத்துவ மனைக்குச் செல்லும்வரை அகிலா பட்ட துன்பங்கள்.
5. அபூபக்கர் கண்ட கனவுக் காட்சிகள்.
6. எலி, தவளை இரண்டும் இறக்க நேரிட்டமை.
7. ஔவைக்கு அதியமான் மீது ஏற்பட்ட கோபமும் அதனை அதியமான் போக்கிய விதமும்.
8. வடிவேலு, 'வள்ளல் வடிவேலு' ஆயினமை.
9. உதவி வேண்டி வந்த ஜோசப்பைத் தமிழாசிரியர் கன்னியப்பன் திருத்திய விதம்.
10. வீரபத்திரன் அரசனே அறிவிலி என்று உணர்த்தியமை.

## பின் இணைப்பு - 1

கேட்டல் திறன் என்பது ஒருவர் பேசுவதைச் செவி மடுத்தலாகும். அது நேரடியாகப் பேசுதலைக் கேட்பதாகவோ, ஒலியைப் பதிவு செய்ததைக் கேட்பதாகவோ அமையலாம். ஏழாம் வகுப்புப் பாடத் திட்டத்தில் கேட்டல் திறனில் நான்கு உட் கூறுகள் குறிக்கப் பெற்றுள்ளன. அக் கேட்டல் திறன் கூறுகளுக்கான பயிற்சி முறைகள் இங்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்தி மாணவரது கேட்டல் திறனை வளர்த்தல் வேண்டும்.

### திறன் - 1: குரல் மாற்றங்களை வேறுபடுத்தியறிதல்

இப் பயிற்சிக்காக ஆண், பெண் இருபால் குழந்தைகள் ஐவருக்கு மிகாமல் குழுவாக அமர்த்திப் பேசச் செய்தல் வேண்டும். இதே போன்று சிறுவர், வயது வந்தோர் (பெரியோர்) ஐவருக்கு மிகாமல் குழுவாக அமர்த்திப் பேசச் செய்தல் வேண்டும். முதலில் நேரிலும் பின்னர், திரை மறைவிலும் குழுவினரைப் பேசச் செய்யலாம். பேச்சைக் கேட்டபின் 'எத்தனை ஆண், எத்தனை பெண், பேசிய பொருள்' முதலியவற்றைக் கேட்டோர் அறிந்துள்ளனரா எனத் தேர்ந்தறியத்தக்க வினாக்கள் கேட்கப்படவேண்டும், இதே போன்று சிறுவர், பெரியோர் குழு உரையாடல் முடிந்ததும் ' எத்தனை சிறுவர், எத்தனை பெரியோர், என்ன பொருள் குறித்துப் பேசினர்' முதலியவற்றைப் பற்றி வினாக்கள் கேட்கலாம். குழு உரையாடல்களை ஒலிப்பதிவு செய்து, மாணவரைக் கேட்கச் செய்தும் வினாக்கள் கேட்கலாம்.

### திறன் - 2 : ஒலிப்புப் பிழைகளை இனங் காணல்

மயங்கொலிச் சொற்கள் கொண்ட சொற்பட்டியலை மாணவர்க்கு வழங்கி, ஆசிரியர் சொற்களை ஒலிக்கும்போது மாணவர் சரியானவற்றைக் குறியிட்டுக் காட்டச் செய்ய வேண்டும். ல-ள-ழ-எழுத்துகள் அமைந்த சொற்கள் வரும்படியான உரையாடலைக் கேட்கச் செய்ய வேண்டும். அல்லது உரையாடலை ஒலிப்பதிவு செய்து கேட்கச் செய்ய வேண்டும். யார் , யார் எந்த எழுத்துகளைத் தவறாக ஒலித்தனர் எனக் கூறச் செய்ய வேண்டும்.

### திறன் - 3 : கேட்ட பகுதியின் மையக் கருத்தை அறிதல்

பயணம், மழை நாள், தெரு விபத்து, தீ விபத்து போன்ற செய்தித் துணுக்குகளைக் கேட்கச் செய்து மையக் கருத்தைக் கூறச் செய்யலாம். சிறுசிறு கதைகளைக் கூறி அக் கதைகளுக்கேற்ற தலைப்புகளைக் கூறச் செய்யலாம். ஒலிப்பதிவு நாடாவைப் பயன்படுத்தியும் இவற்றைக் கேட்கச் செய்யலாம்.

### திறன் - 4: கேட்ட தகவல்களைத் தொகுத்தல்

நிகழ்ச்சி பற்றி அறிவிப்பு, பயணத்தில் கண்டவை, கதை நிகழ்ச்சிகள் போன்றவற்றை நேரில் பேசியோ, ஒலிப்பதிவு செய்தோ கேட்கச் செய்து பின்னர், கேட்ட தகவல்களைத் தொகுத்துக் கூறும்படி செய்யலாம்.

## பின் இணைப்பு - 2

பாடநூல் தவிர, நூல் நிலையப் புத்தகங்கள், பிற புத்தகங்களைப் படித்தமையைக் காட்டும் விவரங்கள் அடங்கிய படிவம்.

ஒவ்வொரு நூலைப் படித்து முடித்ததும் இப் படிவத்தை நிரப்பி மாணவர் கையொப்பமிட்டு ஆசிரியர் கையொப்பமும் பெற வேண்டும்.

| வரிசை எண் | நூலின் பெயர் | நூலாசிரியர் பெயர் | படிக்கத் தொடங்கிய நாள் | படித்து முடித்த நாள் | மாணவர் கையொப்பம் | ஆசிரியர் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |